உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவேற்காட்டுப்புராணம்.

இஃது

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

பார்வையிடப்பட்டு,

ஸ்ரீமான்

வயலாநல்லூர் மிட்டா ஜமீன்தார்

நாகை-சொக்கலிங்க-திருமுடிச்செல்வர்

அவர்களால்

சென்னை:

பண்டிதமித்திர யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது ஆவணி.

1903.

விலை அணா எட்டு.

Dr. U.V.S. ... MADRAS-90
22860

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90

# வடவேதாரணியமென்னும்

# திருவேற்காட்டுப் புராணம்.

## காப்பு.

வலம்புரிவிநாயகர்.

நலம்புரிவாரணந்தரித்தநாதனிகமேசன்வளநவிலத்தானச்
சலம்புரிவாரணத்துதிக்கைத்தந்திமுகாசுரனுடற்றுஞ்சமருமன்னோன் [த்த
குலம்புரிவாரணப்படையுங்குமைத்தெழில்சேருந்துருமேற்குறுந்தாள்வை
வலம்புரிவாரணக்குரிசின்மலர்ப்பதமெய்ம்மனவாக்கால்வணங்குவோமே.

## பாயிரம்.

சபாநாயகர்.

திருத்தியுலகளித்தசிவகாமசவுந்தரிவிழிகள்சிறக்கநாளு
மருத்தியுடனைம்பதமோர்வடிவாகியதுகொடுநல்லருளாற்பஞ்ச
கிருத்தியமேசெய்தருளிப்பணிமுனியும்புலிமுனியுங்கிளர்வுற்றேத்த
நிருத்தமருளெம்மானையெஞ்ஞான்றுமனமன்றினிறுவுவாமால். (௧)

திருவேற்காட்டேச்சுரர்.

மணிகொண்டநெடுங்கடலிற்கண்டுயிலுந்தண்டுளபமார்பத்தோனுங்
கணிகொண்டமறையவனுங்காண்பரியசுடருருவங்காட்டிவானும்
பணிகொண்டகுவலயமும்பணிந்தேத்தச்சிருட்டிபரம்பரையாயோங்க [ம்.
வணிகொண்டவேற்காட்டிலருள்பொழிவேற்காடனையாமகத்துள்வைப்பா

சாந்தநாயகி.

முந்துபெருங்கருணையினாற்பரைமுதலாஞ்சத்திகளாய்முறைமைத்தாக
வைந்துபெருந்தொழினடத்திமூன்றுதிறந்தான்மூலமகற்றியாள
விந்துமுதன்மூன்றாகிவிளங்குமுபாதானங்கண்மேவிவிண்ணோர்
வந்துபணிவேற்காட்டில்வாழ்சாந்தநாயகிதாண்மனத்துள்வைப்பாம். (௩)

### கலியாணசுந்தரர்.

தென்றிசையிற்செலவழங்குங்குறுமுனிவன்றனக்காகச்செவ்வேலேந்திக்
கன்றுழையின்மடநோக்கிற்கவின்செய்மதரரிநெடுங்கட்கன்னியோடுந்
துன்றுபனிவரையகன்றுசுடர்மகுடந்தரித்துநறுந்தொடையல்சூடி
மன்றல்வளர்ந்திடவிருந்தமணவாளசுந்தரனைவணக்கஞ்செய்வாம். (௪)

### தக்ஷிணாமூர்த்தி.

கடவாதம்படவாதமடவாதமெனக்கழித்துக்கருத்திலோர்ந்தேதா
திடவாகுமப்பொருளினுண்மையெனத்தேர்சனகாதியர்நால்வர்க்குத்
திடவாரணப்பொருளைமெய்ஞ்ஞானமுத்திரையாற்றிகழக்காட்டி
வடவாலின்கீழிருந்தங்கறமுரைத்தபெருமானைவணக்கஞ்செய்வாம். (௫)

### விநாயகக்கடவுள்.

அண்டரிடர்க்கடல்சுருக்கியசுரரிடர்க்கடல்பெருக்கியவணிவாரி
யுண்டவனைக்கழங்கேய்ப்பவோடியெடுத்தெறிந்தாடியுமையாள்கேள்வன்
றொண்டர்களன்பளிமுரன்றுதுதைந்தாடக்கருணைமதஞ்சொரியாநின்றேர்
கொண்டல்விளங்கெழில்காட்டுங்குஞ்சரன்சேவடிமுடிமேற்கொள்ளுவோமே.

### குமரக்கடவுள்.

சதகோடியாயிரங்கண்படைத்தவனுக்குதவிநிசாசரரைவீட்ட [போ
மதகோடிவரும்பரம்பொற்கடஞ்சொரியுங்களிற்றுரிவைவயங்கெம்மான்
னிதகோடிவரமெனினுநெடிதளிப்பவவனளித்தநெடுவேலண்ணல்
பதகோடிநான்கினையுநாக்கோடிவாழ்த்தவும்யாம்பணிகுவோமே. (௭)

### வைரவக்கடவுள்.

ஆரணன்வல்செருக்கொழியவவன்றலையிலொன்றதனையங்கையேந்தி
நாரணன்செங்குருதிகடலெனவாங்கியதினிரப்பிநெடுமுச்சூலத்
தோரணமாயவருடலநாலவிளையாட்டயருந்தொல்லோன்கொன்றைத்
தாரணிநற்சிவபெருமாற்கன்புளநம்வயிரவன்றாடலைமேற்கொள்வாம். (௮)

### திருநந்திதேவர்.

அள்ளியெடுத்தணிநீற்றினொளிப்புண்டரமிலங்கவங்கைநான்கிற்
றுள்ளிநெறித்தெழுந்திரிகோட்டிரலைமழுப்படைபிரம்புரிகைதாங்கித்
தெள்ளுபகிரதிமிலைச்சுஞ்செஞ்சடையான்றிருவாய்மைசெலுத்திநாளும்
வெள்ளிவரைத்தலமகலாநந்திநாயகன்றிருத்தாள்விரும்புவோமே. (௯)

### அகத்தியமுனிவர்.

இருக்கோலமிடும்பொருளாயெழும்புடமரகவோதையிலக்கணத்தை
மருக்கோலித்தமிழ்ப்பயிரைவளர்த்துமலைமகளாரைமருவநின்ற

பெருக்கோதமவுலிபுனையருளாளன்பெற்றியொடுபெறுகல்யாணத்
திருக்கோலங்கண்டுமகிழகத்தியனார்சரணமலர்சிரமேற்கொள்வாழ். (க0)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

பன்னிரண்டுதிருப்பெயரும்படைத்தபழம்பதியில்வளர்பதுமம்போலுந்
தன்னிரண்டுசீரடியாற்பையநடந்திலங்குபொய்கைத்தலத்தின்மேவி
முன்னிரண்டுகுரவரும்வந்தருளுமமுதருந்தியமண்மூலவேரு
மென்னிரண்டுவினையினதுபெருவேருங்களைந்தவனையிறைஞ்சிவாழ்வாம். ()

திருநாவுக்கரசுசுவாமிகள்.

அள்ளன்மனக்குண்டரிடுநாறுதிருநீறணிவோர்க்கனற்றிடாமற்
றுள்ளவிடையூறுகளும்பொருந்தாவென்றுரைக்கவருமுறுதிகொண்டே
தெள்ளுதமிழ்க்கடலன்றித்திரையெறியுங்கருங்கடலுந்திருந்தநீந்தும்
வள்ளலையெம்பெருமானைத்திருநாவுக்கரசினையாம்வணங்கிவாழ்வாம்.(கஉ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அடியவருக்கெளியனென்பதனுமானமுதலியனவலவென்றேயிப்
படியறியக்காட்டுதற்காம்படிவமெடுத்தாரூரிற்பரவையென்னுந் [தஞ்கக்
துடியிடைவெண்ணகைச்செவ்வாய்ச்சுடரிழைப்பெண்டனக்கிதஞ்சொறா
கடிதினிலெம்மிறைவனிருகால்சேப்பப்பணித்தவனைக்கருத்துள்வைப்பாம்.

மாணிக்கவாசகசுவாமிகள்.

கருக்கோவையார்கழிக்கக்கருதிடுவோரவர்கள்செவிக்கட்படாமுன்
னுருக்கோவையார்மனனேயொழிதியவற்றியல்பையினியுருகாயாங்க
ளிருக்கோவையார்பலமும்பெற்றனமென்றெண்ணியெண்ணியின்பமாரத்
திருக்கோவையார்மொழிந்ததிருவாதவூரர்பதஞ்சிரமேற்கொள்வாம்.(கச)

மூர்க்கநாயனார்.

ஆர்க்குமறிவரியபொருளடியவருக்கமுதூட்டலன்றின்றென்று
நீர்க்கடல்சூழ்வையமதினிலவுறும்பேறிதுவென்றுநிலவக்காட்டி
யார்க்குமனுகரமுரனுஞ்சோலைசெறிவேற்காட்டிலவதரித்த
மூர்க்கரெனுநாயனார்திருவடித்தாமரையுளத்தின்முன்னுவாமால். (கரு)

சண்டேசநாயனார்.

பொன்னிநதிப்புனல்பரந்தமண்ணியினிற்றீம்பாலாற்பூசையாற்ற
வுன்னிமணலாலயஞ்செய்தம்மணலாலெம்மிறைவற்குருவங்காட்டித்
தன்னியமந்நிறைவேற்றித்தந்தைதாள்குறைவேற்றித்தண்டியானென்
மன்னியமெய்ப்புகழ்பாவிச்சிவனடியார்திருவடியைவணங்குவோமே.(கசு)

### மற்றையதிருத்தொண்டர்கள்.

வேறு.

புயல்வளர்மிடற்றான்றன்பாற்பொருந்தியவூற்றத்தானு
மயல்செயற்கரியாராகவலியின்மைவருமென்றெண்ணி
யயலறியாதமோனவானந்தமருளப்பெற்றோ
ரியலிணைப்பரவித்தொண்டினெழிலையுமிறைஞ்சுவோமே. (௧௭)

### சேக்கிழார் சுவாமிகள்.

வேறு.

தீக்குணமுடையகஞ்சிமண்டையஞ்சீவகன்சரிதநன்றன்று
நோக்குறுநுதலோனருளுடையடியர்நோற்றெழுசரிதையேமேன்மை
யாக்குமென்றனபாயன்றனக்கருளியருடிருத்தொண்டர்மாபுராணம்
வாக்கினான்மலர்ந்தசேக்கிழாருபயமலர்ப்பதஞ்சென்னிசேர்த்துய்வாம். ()

### சந்தானகுரவர்.

வேறு.

வானநாடர்வழுத்தும்பரசிவ
மானவான்பொருள்வாழ்வைநாமார்ந்திட
ஞானமார்க்கநலம்பெறநாட்டுசந்
தானவாரியர்தாளைமேற்கொள்வாம். (௧௯)

### வாழ்த்து.

வேறு.

தாரணிவேந்தர்வாழ்கதண்புயன்மறாதுபெய்க
சீரணிசெங்கோலோங்கதிருவருள்செழிக்கவெண்ணீ
றாரணவேள்விபல்கவருமறையோர்கண்மல்க
வாரணவுரியோன்சைவமன்னுகவையமெல்லாம். (௨0)

---

## அவையடக்கம்.

வேறு.

திடங்கொள்செழுந்தமிழ்க்கடலின்கரைகண்டாசுந்
தெவிட்டாதமதுரமுஞ்சித்திரமுமேனுந்
தடங்கொள்புவிதழைத்தோங்கவுரைக்கின்றோர்பாற்
றமியனுஞ்சொற்றொடைதொடுக்கச்சாராநிற்ற
லிடங்கொளண்டம்படைத்தளிப்போனென்றுமுள்ளா
னிருக்குளத்தன்றிருக்குளத்தனெட்டான்முன்னர்

மடங்கொண்மனத்தனவானதெய்வந்தாமும்
வரங்கொடுக்கக்குறித்தெழுந்தவண்மைபோலும். (உக)

கலைக்குறையுமுயற்கறையுங்கருதாராகிக்
கங்கையுடன்மதியம்வைத்துக்காட்டலானு
மலைக்குமறிவினரேனுஞ்சூடநாடா
மத்தமலரிதழியுடன்வைத்தலானு
நிலைக்குமரும்பொருட்பதியினனுவுமேலா
நிருத்தசபைதனில்விளங்கிநிற்றலானு
மிலக்கியமும்பயின்றுதெளிந்தறியேனன்றே
னெழிற்சரிதந்தமிழ்க்கவியாலிசைக்கின்றேனே. (உஉ)

பாயிர முற்றும்.

ஆகச் செய்யுள் - உரு.

# புராண வரலாறு.

நலம்பெருகுங்கயிலாயநாதனந்திக்கடவுளுக்குநவிலவையன்
றலம்பெருகத்தவம்புரியுஞ்சனற்குமரற்குதவவியாசனுக்கன்னோன்சீர்
வலம்பெருகவாதராயணன்சூதனுக்குரைப்பவருத்தியார்க்கும்
பலன்பெருகவவன்புகலும்பதினெட்டுப்புராணவகைபகருங்காலே. (க)

வேறு.

பகர்பிரமம்பதுமம்விண்டுசைவம்பாகவதம்
பவுடிகமார்க்கண்டயநாரதம்பயிலாக்கினேய
மகிழ்பிரமகைவர்த்தம்வளரிலிங்கம்வாய்ந்த
வராகமேகாந்தம்வாமனங்கூர்மமச்ச
மிகலருங்காருடமேலாமெழில்கொள்பிரமாண்ட
மிவைபதினெண்புராணமிவற்றியல்புளநற்கிரந்தந்
திகழ்தருநாலிலக்கமிதிற்சிவகதைமூன்றிலக்கந்
திருமால்பங்கயனிரவிதேயுவினுக்கிலக்கம். (உ)

திருந்துசனற்குமரமேநரசிங்கஞ்சோமஞ்
சிவதருமந்துருவாசந்திகழ்நாரதீயம்
பெருந்தகைசேர்நந்தியுசனங்கபிலன்சரிதம்
பெட்புறுமானவம்வருணம்பிறங்குமெழிற்காளி
பரிந்துயிர்கள்பயில்வசிட்டஞ்சாம்பவமேசவுரம்
பராசரமாரீசமேபார்க்கவமீரொன்பான்

விரிந்தவுபபுராணமிவையோரிலக்கமென்றே
விளம்புமுன்னூலளந்தறியவிரும்புநெஞ்சத்தவர்க்கே. (௩)

வேறு.

நீற்கண்டப்பெருமான்சீர்த்திநிறுவியபுராணநேர்மை
நூற்கண்டமனம்வாழ்சைவநுவல்பவுடிகமேநுண்மை
மாற்கண்டமிலிங்கங்காந்தம்வராகம்வாமனமேமச்சஞ்
சூற்கொண்டறுதிக்குங்கூர்மம்பிரமாண்டந்தொகையீரைந்தே. (௪)

வேறு.

காருடன்மால்சரிதம்விண்டுகாருடநாரதமெழிற்பாகவதநான்காம்
பாருடன்கீழ்மேலுலகம்படைப்பாற்குப்பிரமமொடுபதுமமாகும்
பேருடன்சீர்கதியளிக்கும்பிரமகைவத்தங்கதிரோன்பெருமைகூறு
சீருடன்பார்சலமசலநிறைந்துறுகர்தழற்காக்கினேயமாமே. (௫)

இவணுரைத்தபுராணமீரொன்பதனிற்சிவசரிதமிலங்கீரைந்துஞ்
சிவனெவர்க்குமதிகனெனத்திருந்துபிரமாணமதாச்செப்புஞ்சீர்சால் [ப்
புவனிமிசைப்புகன்றவர்கள்செவிமடுத்தோர்க்கின்பமிகப்புரிந்து முன்னர்
பவமகற்றிமேலானபதவியினில்வீற்றிருக்கப்பண்ணுந்தானே. (௬)

கவினுறுமாயிரங்கிரணம்பரப்பியிருள்சீத்தெழுந்தகதிரிற்றூய
வவிருமொளியுமிழ்தருசெஞ்சுடராழிப்படைசுமந்தின்னருள்கூர்ந்தாசில்
புவனியளித்திடுமாயோன்புகழ்க்காதையொருநான்கும்புண்டரீகத்
தவிசினனுக்கதிகனென்றுஞ்சகத்தினுக்குப்பதியென்றுஞ்சாற்றுந்தானே.

ஊன்மருவிப்பிறவியெனும்பெருங்கடலிலழுந்தாமலுறுநல்கு
நான்மறையும்விரித்துலகமியல்புறவேபடைத்திடுநான்முகற்குவாய்த்த
மேன்மையுரைத்திடுஞ்சரிதமோரிரண்டுமகவானின்மேலோனென்றும்
பான்மைபெறுமரியானும்பங்கயனுஞ்சமமென்றும்பகருந்தானே. (௮)

ஒழுகொளிசெய்தெழும்பருதிவானவன்றன்புகழ்ச்சரிதமொன்றுங்காலைப்
பொழுதின்மலரயனெனவும்பொருந்துறுநண்பகலதனிற்பூவைப்போதி
னெழில்கனிந்துகொழிக்குமரகதவண்ணனெனவுமிறங்கந்திமாலை
விழுமியசீருருத்திரனேயெனவுமும்மூர்த்திகளாகவிளம்புமாதோ. (௯)

கொந்தழலின்புகழுரைக்குங்கோதில்சரித்திரமொன்றுங்குலவுந்தெண்ணீ
சிந்தையுடுத்திடுந்தூயசெகதீசனெனவுமுரைதிகழாநின்றே [ர்ச்
யந்திமதியணிந்தபிரானழகுதிருமேனியதாயமர்ந்தவாற்றுன்
முந்துதனிக்கண்படைத்தமுன்னவனினுருபியென்றுமொழியுந்தானே. ()

கிளந்திடுநற்சிவகதையிற்காந்தமோரிலக்கஞ்சங்கிதையாறைம்பான்
களங்கமகல்காண்டமுதற்சனற்குமாரஞ்சூதஞ்சங்கரமேவிண்டு
வளர்ந்தறியிற்பிரமஞ்சூரியங்கிரந்தமைம்பதிற்றைந்தாறுமுப்பான்
விளங்கிடுமோரைந்தொருமூன்றொன்றிவையாயிரமடுத்துவிரவுந்தானே. ()

காட்சிபெறுஞ்சனற்குமரசங்கிதையிற்காளிகாகண்டநாப்பண்
மாட்சிபெறுமருந்தீர்த்தமகத்துவத்திற்றிகழுமெனமறைகணான்கு
மாட்சிபெறத்தவம்புரியவருவேதவனமாகியமர்ந்தவாற்றும்
சூட்சிபெறும்வேற்காட்டின்பெருமையினைமுழுநூல்கடுதிக்குமாதோ. ()

அந்தமில்மெய்ப்பொருள்வினாசனற்குமரம்வேதவனமமரர்போற்று
மிந்திரங்காங்கெயம்பராசரமாழியகத்தியமேயிலகுஞ்செவ்வி
முந்துபாசிராமமடிமுடிதேடல்வலம்புரியேமுனிவர்பூசை
பந்தமகற்றிடுபலன்பெறுகந்தோற்றல்சருக்கமிவைபதினான்காமே. (௧௬)

ஆதவன்பொற்கணிவிளக்குங்கலிநாலாயிரத்தெண்ணூற்றறுபத்தொன்பா
மீதுவனப்புளசகனாண்டாயிரத்தோராறுநூற்றின்மேற்றொண்ணூற்றிற் [ன்
சீதவயற்பொழிலுடுத்தசீகாழிவடுகேசன்றிருத்தாள்போற்றி [றேறன்.
வேதவனப்பெருமையிகும்வடமொழியைத்தமிழ்மொழியால் விளம்பலுற்

புராணவரலாறு முற்றும்.

ஆகச் செய்யுள் - ௧௭.

# மெய்ப்பொருள்வினாச்சருக்கம்.

கம்பைமாநதிசூழ்தருங்காஞ்சிமாநகரி
னம்புயாசனன்பகைப்புலனைந்தையுமடக்கிக்
கொம்பனாருபகரணங்கள்குறிப்பறிந்துதவச்
செம்பொன்மேருவிலையனையருச்சனைசெய்தான். (க)

தொல்லைநான்மறைவிரிஞ்சனிணையடிதொழுதே
யல்லிமாமலர்க்கரங்குவித்தடிகள்கேளடியே
யில்லின்வாழ்க்கைசெயதிருந்தனமகந்தனையியற்ற
வல்லதோர்வனம்பகரெனமாதவர்வகுத்தார். (உ)

கருப்பநீக்கவேயருச்சனையியற்றியகரத்தாற்
றருப்பையொன்றினையெடுத்திறைநேமியார்ச்சமைத்துப்

பொருப்பகழ்ந்திடவிடுத்திதன்பின்னரேபோமின்
விருப்பினிற்குமவ்வனத்திருமின்னெனவிதித்தான். (௩)

அக்கணத்தினிலருந்தவரயன்றனைவணங்கி
மிக்கவெற்றிசேரொற்றையாழியினுடன்விரைந்து
புக்கபெற்றிவிண்வீதியிற்போதருங்கதிரோன்
றெக்கணத்துதித்துலகின்மேற்சேருதன்மானும். (௪)

துய்யமாதவருஞற்றியதொல்லைநல்வினைக
ளொய்யெனத்திரண்டாலெனவுருப்பொலிநேமி
வெய்யவன்வலம்புரிதருமேருவின்றென்பாற்
செய்யபல்லவுக்காவினுட்சென்றுநின்றதுவே. (௫)

பூமியுற்றெழீஇயனையர்கள்சூழ்தரப்போந்த
நேமிநிற்றலானிடுகுறிப்பெயரினைநீக்கி
நாம*நைமிசாரணியமென்றியல்பெறநாட்டி
யேமமாதவம்புரிந்திடமுனிவர்தொக்கிருந்தார். (௬)

வேறு.

பரவுபசும்பிடிமிடைந்தபணைமீதிற்பலமூசுபாகுங்கொட்டி
நிரைநிரைசாலகஞ்செறியநெறித்தெழுநாகமும்விளங்கிநிற்குங்காட்சி
மரகதப்பந்தரிற்பவளமணித்தொங்கலுற்றிமாசெறிந்துமன்னுந்
தரளமணிக்கொத்துமணிபெறத்தெரிந்துகைபுனைந்ததன்மைபோலும். ()

விற்பாவும்பஞ்சரத்தின்விரிமலரும்புன்னைகவிடபமீன்ற
நற்போதுமொழுகுபசுந்தேறலிடையிடைவீழ்நலங்கொள்காட்சி
கற்பாரும்வனமாதுபுனறெளித்துமுனிவரரைக்காண்பான்வேண்டிப்
பொற்பூவுமிரசிதத்தாற்புனைவிசித்ரநறுமலரும்பொழிதல்போலும். (௮)

புங்கமலர்க்காவதனுட்பொலிதடந்தண்சிறுதரங்கம்புடைப்பமேவும்
பங்கயநாண்முகைசிறையிற்பச்சைமணிக்கதிர்விரவிப்பரப்பத்தோற்றல்
கங்கையெனுமங்கைவளர்மறைதெரிபூசுரர்நயனங்களிப்பவாய்ந்த
மங்கலபூரணகும்பங்கரத்தேந்திநிற்கின்றவண்மைபோலும். (௯)

பனிமுகைபசண்பகத்தின்பணைமருவிப்பல்லவமும்பலமுந்தாங்கி
நனிபுவியின்வளைந்துவளைந்தெழுதருமாமிரக்கோட்டினலங்கொடோற்றம்
மினியவனமடந்தைசுடர்விளக்கமைத்தேயிலங்குகனியெழிற்கைதாங்க
முனிவரர்கடிருவடியைத்தனித்தனியேவணங்குகின்றமுறைமைபோலும்.

* நைமிசம் - நேமி ஒய்ந்தவிடம்.

இவ்வடிவிப்புடையாவும்வெள்ளிடைகளின்றிமுறியிலங்கத்தாங்கிச்
செவ்விமிகுஞ்செயலைதுன்னிப்பணைத்தொன்றோடொன்றுபின் னித்திகழு
நவ்விவிழிமிளிர்புறவநங்கையன்னோர்க்கிடையூறுநண்ணுவண்ணந் [ங்காட்சி
திவ்வியசெந்தழலதனாலிஞ்சியிழைத்திடுகின்றதிறமைபோலும். (கக)

வேறு.

பருஞ்சினைப்பலவின்மூசிப்பழுக்குமுட்கனியின்பாங்கர்
சுரும்பொடுஞிமிறுந்தேனுஞ்சூழ்ந்துபாண்மிழற்றுந்தோற்ற
மிரும்பொருள்புதைத்தோன்வாசலிடந்தனிலேகியேகித்
தருந்தருமென்றுநாடித்தமிட்சொலுந்தகைமைபோலும். (கஉ)

சுத்தவச்சிரமாணிக்கச்சுடர்பொதிந்தென்னத்தோற்றும்
வித்தமாமாதுளத்தின்மிகுங்கனிவணங்கன்மெய்ந்நூ
லுத்தமர்மணியுள்ளேமென்றுளத்தினிலிறுமாப்போரா
ரெத்தகைத்தாயஞான்றுமென்றசொற்பயனையேற்கும். (கங)

திருந்தியவண்டங்காணச்சென்றிடுஞ்சினையகாவில்
வரும்பசும்புரவித்தேரோன்வரற்கஞ்சுமாற்றமோரா
திரும்புவியிலகுந்தெக்கணாயனமெனவுமேனைப்
பெரும்பயனளிக்குமுத்தராயனமெனவும்பேசும். (கச)

அடைசிறிதின்றிப்பம்பியடர்ந்துபூத்தருகிற்சோதி
விடபிநின்றொளிரவோங்கிவிண்ணுறும்வேயின்காட்சி
படுசுடரெறிக்குஞ்செய்யபவளமார்படிவநந்திக்
கடவுளெம்பெருமான்சாலக்காத்திடுங்கயிலைபோலும். (கரு)

சந்தனந்தாழைவாழைசதாபலஞ்சாதியாதி
பந்தமார்வனத்திற்கொண்மூபடிந்ததுபொழியாப்பண்பு
கந்தமார்கனியும்போதுங்கலந்துகார்காலநீத்துச்
சுந்தரப்பிரசமாரிசொரிந்தெனவெள்கறோற்றும். (கசு)

சூட்டுமாமஞ்ஞைகாளகண்டமஞ்சுகம்வாழ்கானிற்
கோட்டுமாவரிமாகைம்மாகொடுவரிகூடுங்காட்சி
யேட்டுவாரிதழிசூடியிருபதமுன்னியின்பங்
காட்டுவாரிடத்துமில்லைபகையெனக்காட்டல்போலும். (கஎ)

இனையபல்வளஞ்சூழ்கானத்தெழிறனையிருந்ததூய
முனிவர்கண்முழுதுநோக்கிமுறுவல்பூத்தளிகண்முரசு
நனைமலர்ப்பழுவநாப்பணண்ணிவாலுணர்வுநல்குந்
தனிமகமுஞற்றவீதுசாலவுந்தக்கதென்றே. (கஅ)

எண்ணினர்யாகசாலையியல்பெறவியற்றவென்றுந்
தண்ணருமுகைவிண்டேற்றுந்தடஞ்சினைத்தருக்கண்மன்னும்
விண்ணகமுதலயாவுமேவருமனத்தாற்செய்தற்
குண்மையாம்விசுவகன்மன்றன்னையேயுளத்திற்கண்டார். (௧௯)

அன்னதுமுழுதோராமுன்னவன்கரமுகிழ்த்தன்னோர்கண்
முன்னர்வந்தொருபாணிற்பமுறுவலித்திவணின்முற்ற
நன்மகச்சாலைசெய்தியென்றலுஞாயிலண்டத்
தின்முகடுரிஞ்சஞாங்கரெங்கணும்பொறியியற்றி. (௨௦)

வாரியும்விடுத்துத்தூயவண்மையுமெறுழுமன்ன
வாரியும்பொருந்தச்சேர்த்திவருங்கடிப்பாற்றிநன்னிற்
சீரியநாஞ்சில்போழ்ந்ததிருநிலத்திட்டைபோக்கிப்
பாரியவயிரத்தூண்மேற்பசும்பொனுத்திரங்கள்பாவி. (௨௧)

பொருத்திமாணிக்கப்பாக்கற்பொற்புறப்பரப்பிப்பூவல்
விரிக்கும்வித்துருமங்கோட்டிமீமிசைக்கொடுங்கையாரத்
திருத்திநீடதனினுப்பண்சிகரநன்கமைத்துத்திண்கா
ழிருத்தியேகுடங்கர்சாலவெழிறரவியற்றிப்பின்னர். (௨௨)

அரணிகான்றிடவெழுந்தவங்கியங்கடவுளான்று
பரவுநித்தியங்களெல்லாம்படைத்துமேகலைபாற்றோற்றத்
திரமுறும்யூபத்தாருத்திகழ்தரத்தண்டிலாதி
விரவிடவிழைத்துச்சிற்பமெய்ந்நெறிவிதிவழாதோன். (௨௩)

ஒன்றினோடொன்றுறுமனுபகரணமுமேனுள்ள
வென்றிகொள்பொருளும்வேறுவேறெடுத்தமைப்பமிக்க
வன்றிரன்மண்டபங்கள்வான்முகடளந்துமன்ன
வென்றும்வானவர்விரும்பியிருக்குமந்திரமிலங்க. (௨௪)

தெற்றிசேதிமங்கடோறுந்தென்றலங்குழவிச்செல்வ
னுற்றுமெய்யுருப்பமாற்றவொளிகொள்சாளரமுமோங்க
விற்றெனக்கிளத்தற்கெட்டாவெழிறிகழன்னசாலை
மற்றதுநிருமித்தன்னோர்மலரடிவணங்கிநின்றான். (௨௫)

நன்றுநன்றெனவியந்துநான்மறைநலன்களாய்ந்த
துன்றிருமுனிவரெல்லாந்துண்ணெனவெழுந்துசூழ்போய்த்
தன்றுணையகன்றயாகசாலைகண்டுவந்துதாழா
தின்றுநம்விரதமேணமெய்திடுமெனவேமுற்றே. (௨௬)

### வேறு.

இருக்குரைவிதியினாலிலங்குதும்பரச்
சுருக்கொடுசுருவமுஞ்சோமவல்லியுந்
தருப்பையும்பற்பலசமித்துஞ்சார்தர
வுருக்குநெய்த்தசும்புநின்றொளிரச்செய்தனன். (உஎ)

பாங்கரினறுசுவையடிசில்பாளிதந்
தேங்கமழண்டகைகருணைதீங்கறி
யோங்குறத்தேவரும்விழையவுத்தமந்
தாங்கியதேனுநன்கறிந்துதந்ததால். (உஅ)

மன்னியவீணையுமகரயாழ்களுஞ்
சின்னமுங்காளமுஞ்சிறந்தியம்பவே
யின்னமாமகத்தவிறுகர்தற்கெண்ணுபு
பொன்னகர்க்கிறைமுதற்றேவர்போந்தனர். (உகூ)

இத்திறமெங்கணுமென்றுமேர்பெறச்
சுத்தமாகியமகச்சூழற்சாலையிற்
பைத்தெழுபறப்பைகள்பரப்பியன்னவர்
மெய்த்தரும்வேள்வியைவேட்பமேயினார். (௩௦)

விட்புலங்கழுமுறவேதவோசைக
ணட்புளபசுவினைவேட்டுநான்மறை
நுட்பமதுணர்ந்தவர்நோற்றன்முற்றியே
யொட்பமுமோகையுமுளத்திற்கண்டனர். (௩க)

தேங்கமழ்கூவிளந்திருச்சடாடவி
தாங்கியேநடம்புரிசைவநாயகன்
பூங்கழற்றுணைமனப்போதிற்போதர
வீங்கனல்வேள்விசெய்திருந்தயோகரில். (௩உ)

விதுவணிசடைமுடிவிமலன்மெய்ப்பதப்
பதுமமதுன்னியேபரவிநாடொறுங்
குதுகுலவுவரியின்மூழ்கிக்கூரிய
சதுமறைநலன்பெறுஞ்சவுனகாதிபன். (௩௩)

அறைகழல்விளங்குதாளண்ணலாதுலர்
குறையஃதகன்றிடக்கொண்டயோத்தியி
னிறைதசரதன்முதற்புதல்வனேமுற
மறையுரைத்தகமகிழ்வசிட்டமாதவன். (௩௪)

புரையிடற்கரியபொற்பொருப்பைப்போன்மெனத்
தரையுறைத்திடவளர்விந்தந்தாழ்தர
வரைநொடிப்பொழுதினிலழுத்தியங்கையிற்
குரைகடலடக்கியகும்பசம்பவன். (௫௫)

கதந்தெழுகாலனைக்காயநதுகாரங்கா
மதந்தழுவியகரிவகிர்ந்துபோர்த்துவா
னிதந்தொழவருடருநிமலனம்புயப்
பதந்தொழப்புலிச்சரண்படைத்தபண்ணவன். (௫௬)

சீற்றமதுற்றிடிற்றிறங்கொள்கூற்றுவ
னாற்றமுஞ்சிதைபடவுரப்பியோங்கல்சூழ்
நாற்றிசைசுவர்க்கமுநாகலோகமும்
வீற்றுவீற்றுகவேவிதிக்குங்கோசிகன். (௫௭)

கன்னியர்துகிலொழீஇக்கங்கையாடிய
வன்னிலைபோதருநெறியிலார்ந்தும்பர்
பொன்னுலகிழிதரும்பூவைமார்களாற்
றன்னிலைவழாச்சுகத்தருமமாதவன். (௫௮)

தேனினுமினியசொற்சசியைத்தீர்ந்தெழின்
மேனகையாதியோர்வெள்கிமாழ்குற
வானவர்க்கிறைபுவிமடந்தைமோகமாய்
நானிலத்தினில்வரப்பணித்தநாரதன். (௫௯)

முடிபுனையெதுகுலமுதல்வன்புத்திர
ரடிகளேகருப்பமீதாண்கொல்பெண்கொலோ
கடிதினிற்கூறெனக்கரும்பொற்றண்டுறு
மடிவிரென்றுரைத்ததுர்வாசமாதவன். (௬௰)

கண்ணுவன்றூலப்பியன்கற்கன்காசிபன்
பண்ணமர்கலைதெரிபருவதாக்கினி
வண்மைசூழ்ந்திலகுசம்வர்த்தமாதவன்
றண்மைசேர்குசுறுவிந்தாக்கியதாபதன். (௬௧)

இரசனிநாசிகேதியமதக்கினி
வரநிறைசங்கரன்வாமதேவன்வான்
பரவியவசுச்சிரவப்படிவன்மாமகந்
திரமுறச்செய்யுமாத்திரேயபுங்கவன். (௬௨)

இரைவதனுச்சுவலாயனனிரைப்பியன்
புரைதவிராணிமாண்டவியன்பூம்பொழிற்
றரைபுகழிலிகிதன்குணியுத்தாலக
னுரைசெயற்கரியசாண்டில்லியவுத்தமன். (சங)

வென்றிசேரரசிகர்த்தாவிளங்கெழிற்
றுன்றுபுவளர்கனச்சேபன்சுந்தர
நின்றெருளிர்புலத்தியனிருமலன்பத
மென்றுமேத்திடுஞ்சுனப்புச்சனென்பவன். (சச)

வேறு.

காதார்குழையெம்பெருமானைக்கருத்திலிருத்திக்கமலமலர்த்
தாதாவறியாவொருமுதலைத்தமியேன்கவலைதனைநீக்க
நாதாவிரங்காயெனப்பரவிநாளுங்கலையினலந்தேர்ந்த
வேதாரணியமுனிவரனேயீருயினரும்வேறுளரும். (சரு)

இனியசைவந்தழைப்பமிகுமிருள்சீத்தெழுந்தவிருகோட்டுப்
பனிசெய்மதியமொருமூன்றுபதிந்தாலனையபண்புளவாய்த்
தனியதிரிபுண்டரம்வயங்கத்தயங்குமுளத்திற்கைத்தலத்தி
னினையவரியவஞ்செழுத்துமக்கமணியுநிறைந்திலங்க. (சசு)

மெய்யின்முழுதுநீறணிந்துமேலாம்பதவிவிரைந்தளிக்குந்
துய்யநயனத்துளிமணியுஞ்சூழ்ந்துபடருந்துகிர்வேணி
யையனமருந்தலத்தில்வசித்தனந்தங்காலமருச்சனைகள்
செய்யவிழையுமனம்விளங்கச்செறிந்தார்திருமாமணித்தலத்தில்.

அங்கண்மறைகளொருநான்கோடங்கமிருமூன்றளந்தமர்ந்த
துங்கமுனிவர்யாவர்களுஞ்சூட்சிதுணைத்தமனத்தினராய்த்
திங்களணிந்தோன்றிருவடியைச்சேருநெறியைத்திகழ்வாய்மை
தங்கமனத்திற்பலவிதமாத்தக்கவாறுசிந்தித்தே. (சஅ)

நீங்கற்கரியவவாவென்னுநெடியவிதைதீவினைநிலத்தி
னோங்கிப்பிறவிவேர்வீழ்த்தவோவாவிருப்புவெறுப்புலவைப்
பாங்கிற்சினத்தீவளிமூசிப்பல்கும்பாவப்பழம்யாவுந்
தாங்கிநெடியகொடுவிருக்கத்தன்மைதோற்றித்தழைத்துநின்றே.

நறுந்தார்சிலிர்த்தலிலதாயநச்சுமரத்தைநனிநோக்கிச்
செறிந்தாரிதனையிறைவனருட்டிருக்கோடரியாந்திண்படையா
லெறிந்தாருய்ந்தாரென்பதனையேதங்காணுவுளத்திலெண்ணி
யறிந்தாரதனைப்பெறுமார்க்கமறிவான்விரும்பியாயினார். (ருo)

வேறு.

புரைக்கிடம்விலக்கியவியாசர்புகழுற்றே
யுரைத்தனவுணர்ந்துயர்தபோதனனுளத்தே
திரைப்புனலணிந்திடுமுமாபதிதிருத்தா
மரைப்பதநினைந்துருகிமாசினையொழித்தே. (௫௧)

அக்கமணிமாலைகளணிந்திலகுகின்ற
மெய்க்கணொளிவெண்பொடிபுனைந்துமிளிர்செம்பொன்
றொக்கசடைநேர்பெறவளைந்தனதுளங்கக்
கைக்கணொளிர்தண்டொடுகமண்டலம்வயங்க. (௫௨)

மாயவினைநீடியமரங்கடியநின்றே
யாயுமறையோர்கள்விழியம்புயமலர்ந்தே
பாயுமொளிவீசவளர்பாரிடையிழிந்தே
தூயகதிரோனைநிகர்சூதமுனிவந்தான். (௫௩)

வேறு.

புவிக்கிதம்புரிசூதமாமுனிவரன்போதக்
குவித்தகையினராயெதிர்சென்றகங்குழைந்து
செவிக்கிதம்பெறத்துதித்தனர்குதித்தனர்சிறந்த
வவிக்கமைந்திடுசாலையினுய்த்தனரம்மா. (௫௪)

நுடங்குநூலணிமார்பினர்பலகலைநுணுக்க
மடங்கலும்பகுத்தறிந்தமாதவன்வசித்தருள
மடங்கருங்கியபீடிகைவைத்தடிவணங்கி
யிடங்கொள்பூமியினின்றருக்கியமுதலனைத்தும். (௫௫)

நற்றிறம்பெறவுதவியேநானிலம்படைத்தோன்
சொற்றவாசகங்கொண்டிவணேற்றனந்தூயோ
யிற்றைஞான்றினைத்தருதலாற்றவப்பயன்யாவும்
பெற்றனம்பிறப்பிதுபவித்திரமிகப்பெற்ற. (௫௬)

என்றுபற்பலவிழைவுறுமுகமனுமியம்பி
யொன்றுகேட்டருணல்வினையுன்னியில்லறத்தி
னின்றுபூருவந்தவம்புரிந்தனநெடும்பொழுது
துன்றுநான்மறைப்பொருள்களுஞ்சிற்சிலதோய்ந்தேம். (௫௭)

ஓதுகின்றவிப்பொருள்களினுளமுறுதுணர்ந்து
நீதிகண்டவர்வாய்மொழியானுநிச்சயித்தேந்

தீதுநீங்கியதிகம்பரன்றிருவருண்முத்திக்
கேதுவென்பதையையனேயதுவரற்கெண்ணி. (௫௮)

சிக்கமுற்றிடுசிந்தையராயினேந்தெளியத்
தக்கசூட்சியொன்றருளுதிதருமமேமுதலாய்
மிக்கநான்கும்வேதாகமநெறியுமெய்யுணர்ந்து
திக்கனைத்தினின்மற்றுளபொருள்களுந்தெளிந்தோய். (௫௯)

என்றருந்தவரியம்பலுமிருகணீரிறைப்பத்
துன்றுரோமமுஞ்சிலிர்த்திடச்சுடர்விடுபசும்பொன்
மன்றுளாடினோன்மலரடிமனத்தினுளிருத்தி
யொன்றுமேமார்ந்திலனுரைப்பரும்பரவசமுற்றான். (௬0)

கனியுமாதவன்கருணையாற்கண்மலர்திறந்து
முனிவிர்நீவிர்களனைவிருமுடிவிலாப்பொருளைத்
தனிவிரும்பினீராதலாற்றரணியினுமைப்போ
லினியமாதவம்விரதமுநிறைந்தவரெவரே. (௬௧)

இந்தமெய்ப்பொருளிருசுடரிணைவிழியுடைய
வந்திவண்ணன்மெய்யன்பொருவடிவமாயமர்ந்த
நந்திவானவன்றிருச்செவிக்குரைத்தனனலங்கொள்
புந்திமேவியசனற்குமரனுக்கவன்புகன்றான். (௬௨)

தொல்லையம்புவிபுரந்திடுமாயவன்றாய
பல்கலைப்பொருள்பகுத்திடப்படிமிசைப்போந்து
மல்லலோங்கியவாதராயணனெனவந்தா
னல்லனீக்கியவயன்மகனவற்கஃதளித்தான். (௬௩)

பட்டம்யாவரும்பெற்றனரனந்தபான்மையினோர்
நிட்டைமேவியேவிழையுநரிருப்பவுநினைந்தே
கிட்டொணாப்பொருளவனுதவினன்கிடைத்தே
னெட்டையென்பதுபொருந்தினீர்விடுமினென்றியம்ப. (௬௪)

பாந்தளம்படம்விரித்திடவணிந்திடும்பரமன்
வாய்ந்தசீர்த்திகண்மேவியபுராணத்தின்வயங்குங்
காந்தமுன்னநிற்சங்கிதையடுத்தெழில்கலப்பத்
தோய்ந்துநின்றுயர்சனற்குமாரத்தினிற்றொன்மை. (௬௫)

மருவுகாளிகாகாண்டத்தினீடியமகிமை
பெருகுதீர்த்தநன்குரைத்திடுங்காதையிற்பிறங்கு

மொருசிவத்தலத்துற்றிடுமுயர்பெருங்காதை
முருகுசிந்தையிற்சொல்லுவன்முனிவிர்காளென்றான். (௬௬)

உளங்கனிந்துகேட்குநர்களுமுற்பவமொழிப்ப
விளங்குமெய்ப்பொருள்வினாச்சருக்கத்துளமெய்ம்மை
வளம்புகன்றனம்பொன்னொளிபரப்பிமட்டியிர்க்குந்
தளங்கொடாமரைக்கிறைமகன்சரிதஞ்சாற்றுதுமால். (௬௭)

மெய்ப்பொருள்வினாச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௧௦௪.

## சனற்குமாரச்சருக்கம்.

அன்னவாசகமுனிவரர்கேட்டகமகிழ்ந்து
சென்னிமேற்கரங்குவித்துநற்சிவமறிதிறலோ
யின்னவுண்மையைத்தீர்த்தமுக்கியத்தினிலிதமாய்
முன்னமோர்தரலேதிறமென்றலுமொழிவான். (௧)

ஒருபதிற்றொடாறாயிரம்யோசனையாழ்ந்திவ்
விருபஃதின்மேலெண்பத்துநான்கினையிணைந்து
மருவுமாயிரம்யோசனையுயர்ந்துமாட்சிமைகூர்
தருமநகர்தொடுதமனியக்கிரிதயங்கிடுமால். (௨)

இலக்கம்யோசனைபரப்புளதாமெழிற்குரிய
நலத்தையீந்திடுநாவலந்தீவினுப்பண்
வலத்தைமேவியவிமயமேமுதல்வளரேழ்
குலப்பருப்பதஞ்சூழ்தரவம்மலைகுலவும். (௩)

வேறு.

காமருகணங்களெல்லாங்கவினலங்கனியநின்ற
சேமவான்மணிகள்சூழச்செம்பொலன்கிரியின்காட்சி
யேமமாரிமையவெற்பிலிறைமணக்கோலங்காணப்
பூமகளமைத்துவைத்தபூரணகும்பம்போலும். (௪)

காற்றரும்பசியவல்லிக்கவின்கொடிபடரத்தாவி
மேற்றிசைகடந்துநின்றமேருவின்விளங்குகாட்சி
பாற்கடல்கடையுமுன்னம்பசியபொன்னிறங்கொண்மேனி
தோற்றவேமாயோன்மார்பில்வாமைதோய்ந்திருத்தல்போலும். (௫)

கருமணிபெறிக்குஞ்சோதிக்கதிரடி வரையிற்சூழ
மருவியதேசுவாய்ந்தவளர்பொலன்கிரியின்றோற்றந்
திருநிலமடந்தைநீங்காச்செறியிருட்பிழம்புநீங்க
விரிகதிர்விளக்கொன்றேறத்திவியப்புறவைத்தல்போலும். (௬)

குலவுபொற்கொடிநின்றெங்குங்கொடுமுடிதோறுஞ்சுற்ற
விலகுபொற்கிரியின்மீதிலெழின்முகிற்பயிலுங்காட்சி
யலமறுமாற்றன்மேவுமனந்தனுமனிலனுனை
வலனுறுகோவுந்தோளின்வலிமையைப்பார்த்தல்போலும். (௭)

வன்றிறற்கீழ்பாற்றாயமந்தரசயிலமன்னுந்
துன்றுதெற்கினிமேலசம்புகிரியதுசூழுமேல்பா
னின்றிடுங்குமுதவெற்புநிகழ்வடதிசையினீங்கா
வென்றிகொள்சிருங்கவெற்புவிளங்குமேலிவைகளுன்கில். (௮)

இதந்தருஞ்சூதஞ்செய்யவிணர்விடுகோங்குநாவற்
கதம்பமால்செறிந்தெஞ்ஞான்றுங்கனிபழுமுதிராநிற்குஞ்
சிதைந்திடுமவற்றிற்போந்ததேன்பரந்தோடித்தேவர்
நிதம்புகழ்ந்திடவேகீழ்பாணிறைசொரிநதியாவோடும். (௯)

தயங்குதென்றிசையினின்றசம்புவின்கனிவாய்விண்டு
கயம்பொரவீழ்ந்துபாய்ந்துவிண்ணெலாங்கவினவாறு
யியங்கியவிடங்கடோறுமெழிற்பசும்பொன்னதாக்கி
நயங்கொள்வமருஞ்சாம்பூநதமெனநவிலநிற்கும். (௧௦)

குடதிசையதனிற்போந்தகுமுதவான்கிரியின்மேவுந்
திடமுறுகதம்பமீதிற்செழுங்கனிவீழத்தேற
விடனெலாம்பரந்துநெய்பாலெழிற்றயிராறுமோடிக்
கடவுளர்க்கென்றுமின்பங்காட்டியேநிற்குமாதோ. (௧௧)

விரும்புமுத்தரத்திலோங்கியனுறவிளங்காநின்ற
சிருங்கவெற்பதனிற்சேர்ந்ததிகழ்வடதருவின்மீதி
னெருங்குசெங்கனிவழிந்துநீள்வரையதனில்வீழ்ந்து
கரும்பினின்சுவையாறுகக்கால்பரந்தோடுநாளும். (௧௨)

வேறு.

மதமொழித்துநற்கதிதருமிம்மலைமருங்கிற்
சதசிருங்கமென்றொருபெயர்வாய்ந்தவித்தலத்தி
னிதமும்வானவர்தானவர்சித்தருநீங்கா
ரெதிரில்கின்னரரிசைமுறைபிறழ்ந்திடாதியம்ப. (௧௩)

அண்ணலங்கிரியதனிடையளப்பரும்வகையி
னண்ணுமஞ்சினைத்தருக்கள்வானளந்துநாடோறும்
விண்ணில்வாழ்பவர்தமதுளமகிழ்ந்திடவிளங்கு
மெண்ணுகாவதற்கிறைதிருப்பெயரினையிசைப்பார். (கச)

வேறு.

பல்வளந்திகழ்தருபழுவநாப்பணிற்
பல்கதிர்ப்பருதிவானவற்கும்பான்மதிச்
செல்வவாணற்குமேற்றிகழ்ச்சிகாட்டியே
மல்குநான்முகன்பெயர்நகரம்வைகுமால். (கரு)

ஆங்கமலத்துறையஞ்சுதனகத்தினி
லோங்கொளிவளர்சனற்குமரனென்றுரை
தாங்கியபுங்கவன்றவங்களாற்றிடப்
பாங்குளசுசித்தலம்படர்தன்மேயினன். (கசு)

அன்னகல்லதனிவாழ்பவருமன்னவன்
றன்னுடன்சென்றிவண்டகையதாமென
மன்னினரவர்களிற்சிலர்மனமிறைவனி
லுன்னினர்தவமுடன்யோகமார்க்கமே. (கஎ)

தவம்புரிவார்க்குறுந்தன்மையாகிய
விவர்தவநீர்நசையின்மைநீடனற்
சிவந்திடும்வெப்பமுந்திகழுந்தட்பமு
முவந்திடுமனத்தினுற்பொறுத்தலாயினர். (கஅ)

தேசுறுமிடம்வரையறுத்ததிவ்விய
வாசனந்தனைவரையறுத்தலன்றியே
பேசுதலிடையிட்டுமொழிதல்பின்னரெவ்
வாசைவாயீற்றின்வாளாமைவைத்தனர். (ககூ)

எண்வகையங்கமுமியற்றிநாடொறுங்
கண்மனங்கதுவவேகவின்கொண்டோங்கிய
பண்ணவன்பாங்கரிற்பலர்களேகியே
திண்மைகொணன்னெறிதெளிதன்மேவினர். (உ0)

இயமமோரைந்தையுமியற்றினார்சிலர்
நியமமோரைந்தையுநிறுத்தினார்சிலர்
நயனுறுமாசனநான்குமன்றியெப்
பயனுறுஞ்சமைபழும்பகுத்துய்ந்தார்சிலர். (உக)

வளிநிலையிரண்டையுமதித்திட்டார்சிலர்
தெளிதொகைநிலைதனைத்தெரிந்துய்ந்தார்சில
ரளிபொறைநிலைதனையாய்கின்றார்சிலர்
நளிர்பெறுநினைவினைநாட்டினார்சிலர். (௨௨)

பொங்கியசமாதியைப்புரிகின்றார்சிலர்
அங்கமோரெட்டையுமனுட்டித்தார்சில
ரிங்ஙனமுறைத்திடுமெட்டினாற்பயன்
றங்கிடும்யோகமோநான்குஞ்சாத்தினர். (௨௩)

தன்மதாசாரமந்திரந்தனைத்தன
தின்னதிதேவதையிடத்தினட்டிய
முன்னுறச்சத்திமானசம்பின்முற்றுறப்
பன்னிரண்டங்கமும்பகுத்துய்ந்தார்சிலர். (௨௪)

கோதகலிலையயோகத்திற்கூறிய
நாதவுற்பத்திசெய்மார்க்கநண்ணியே
வாதைதீர்பரவியமானன்றன்னுடன்
றீதகல்சித்தமொன்றிட்டுய்ந்தார்சிலர். (௨௫)

பெருகடயோகுசெய்பெற்றிநாடுபு
குருவனுக்கிரகித்தகொள்கைத்தாய்மிக
வரியவெண்ணங்கமுமனுட்டித்தந்நிலை
புரிபவரெங்கணும்பொருந்தவையனும். (௨௬)

பொன்னிதழ்க்கடுக்கைவாழ்பூரணன்றனைத்
தன்னிதயப்போதினிலிருத்தித்தானறப்
பன்னெடுந்தினந்தவம்பயிலுங்காலையி
லுன்னருங்கொழுந்தன்னவராமத்தோர்தினம். (௨௭)

வேறு.

முற்செயுங்கருமமெல்லாமுறைவழாதரிதின்முற்றிக்
கற்பகச்சுண்ணம்பூசுங்கங்கையின்மூழ்கிக்கையாற்
றற்பணந்தேவர்மூவர்முனிவரர்பிதிர்கடங்க
ளிற்குநன்கருத்திக்கற்பவெரியினினின்றெழுந்த. (௨௮)

திவ்வியதிருவெண்ணீற்றைத்திகழ்பஞ்சப்பிரமத்தாலு
மொவ்வவேநிசித்துச்சாபாலுபனிடத்தோதுமந்த்ர
மவ்விதமறவாதங்கியாதியேழ்மனுவினாலும்
வவ்வியேயதர்வணத்தின்வாக்கியமொன்றினாலும். (௨௯)

வரமுறுகரத்தின்முக்கான்மந்திரித்தமைத்துப்பஞ்சப்
பிரமமந்திரத்தாற்பூசிப்பின்னுமூர்த்தாதிபாதந்
திரமுறவணிந்துசாலத்திகழ்திரியம்பகத்தா
லரனருளியமூலத்தாலாசமனமுஞ்செய்தப்பால். (௩0)

அங்ஙனமிருந்தநீற்றிலமுதினையள்ளியோசித்
தெங்குமுக்கியமதாகவினையறுமாதிரியம்ப
கங்கவின்பெறுமூலத்தாற்கரத்தினிற்குழைத்தசுண்ணந்
துங்கமுற்றிடுமூவன்னிசுரர்பரமூன்றினோடு. (௩௧)

எண்டருமுப்மூன்றாகியிசைகுணம்வருணமும்மை
திண்டிறற்செகமயீருச்செப்பியயாவுமான
புண்டரந்திருந்தச்சாத்திப்பொருந்தியதவங்களெல்லாங்
கொண்டுருவமைந்தமெய்யிற்குலவுமூவைந்திடத்தும். (௩௨)

விலங்கபெற்றிடத்தரித்துமிகும்வினையிருளைவீட்டிச்
சலங்கொளுகடலினின்றுதருப்பணங்கவினமேவா
மலங்குளைப்பசியபாய்மாவார்த்திடுங்கொடிஞ்சித்தேரோன்
வலங்கொளவுதயஞ்செய்யுமார்க்கவான்றிசையைநோக்கி. (௩௩)

வேறு.

சீலமேநிறையுஞ்சுகாசனத்திருந்துதிகழ்தருநியாசமுஞ்செய்து
காலிருபரியவிரலினைப்பற்றிக்கவைத்திடுமீருருக்கவின
மூலமேமற்பகருமூர்த்தமதளவுமுற்றமேவாருருவுரங்கண்டந்
தாலுமேவபுருவநடுவொடுபிரமந்தனித்தவோரைந்திடந்தன்னில். (௩௪)

கொடிநிகரிடைபிங்கலைகளினுடனேகூடியமறுகினிற்பொன்னின்
வடிவுளதாகிநமோந்தமாயுண்மேல்வழியமுதுகுசுழுமுனையி
முடிவுசெய்யிதையமாதியைந்தினிலேமுகுளமுண்டகமதோமுகத்திற்
படியவூங்காரஞ்சொலிப்பதாயிதயபங்கயமலரினினினைந்தே. (௩௫)

இடதுநாசியினிற்பூரகஞ்செய்தேயெழில்பெறச்சிறந்தவூங்காரத்
துடன்மனதொன்றப்பவனனையென்றும்பட்டெனவுச்சரித்தைந்தாற்
கடிமுகைமலரச்சோடிகையதனுற்கண்டுமனதினிற்சலனந்
தடைபடமதித்துப்பிங்கலையதனுற்றனைந்திடுமருத்துவைவிடுத்தே. (௩௬)

தேசறவடக்கியிதயபங்கயத்திற்றிருந்துதாரகைநிகர்சாந்த
பீசதன்மயனும்புருடனுமோங்கப்பிறங்கனற்சிகையினைப்பிரியா
வாசனுப்புரியட்டகத்தினின்றகன்றுமன்னிவாழ்பஞ்சகநிலைக்கக்
காசகல்விந்துபூததன்மயனேகாங்கியேநிராமயனாக. (௩௭)

அகமதினினைந்தேயிதயத்தில்வாங்கியடக்கியவாயுவையெழுப்பித்
தகைகொள்சங்காரமுத்திரையதனாற்றங்கிடுமனுவினையெடுத்தே
யிகழ்விலாவின்பநாகருவாணுகவிதையமாதிகளினொடுபோய்த்
தொகைபெறுமான்மமந்திரமதனாற்றுவாதசாந்தச்சுடர்வழியில். (௩௮)

கூட்டியேயதன்பினவனிகந்தத்திற்குளிர்புனலிரசத்தின்ஞெகிழி
வாட்டமிலுருவத்தினிற்பரிசத்தில்வாயுவந்தரஞ்சத்தமதனில்
நாட்டமுற்றதனையொடுக்கியேமுறையினலங்கொடன்மாத்திரையைந்து
மீட்டுதாமதவாங்காயத்திலொடுக்கியிராசதாங்காரத்திறகனம். (௩௯)

இந்திரியத்தையொடுக்கியேசுத்தஞானவிந்தியமனமொன்றோ
டைந்தையுஞ்சாத்துவிதத்தினிலொடுக்கியடரகங்காரங்களாதி
பந்தமுற்றிடவப்புத்தியைக்குணத்திற்பதித்துயர்குணம்பிரகிருதி
சந்துசெய்திடவப்புருடனோடராகந்தயங்கிடும்வித்தையிம்மூன்றை. (௪௦)

கலையினிலொடுக்கிக்கலையொடுநியதிவிந்தைநற்புருடனின்நான்கு
நிலைபெறுமாயையிடத்தினிலொடுக்கிநீடியசுத்தவித்தையினைத்
தலைமைபெற்றிடுமீசுரத்தினிலொடுக்கித்தயங்குசாதாக்கியந்தன்னி
விலையமுற்றிடவேயாதியாஞ்சத்தியிடத்திற்சாதாக்கியமொடுக்கி. (௪௧)

சத்திதத்துவத்தைச்சிவத்தினிலொடுக்கித்தனித்திடுசிவத்தினைச்சிறந்த
சுத்தமாயையினிலொடுக்கியேயதனிற்றனித்துதேகத்தூரிசதனைச்
சித்திசேராசானருள்வழியதனாற்றெரிந்துசோதனையதுதீர்த்து
நித்தியமாகிநிறைவியாபகமாய்நிகழ்சுத்தமாயையாய்நின்று. (௪௨)

பின்வலக்காலிற்பருவிரலதனிற்பிறங்குகாலாக்கினியதனை
நன்மதியடைவேயும்படாந்திரத்தைநாவினிலுச்சரித்தெழுப்பிக்
கன்மதேகத்தின்றுரிசினைநீத்துக்காணவ்வுசடந்தமூலத்தாற்
பன்னிரங்குலிமேற்சத்தியினமுதம்பரந்துசொட்டிடுவதாய்நினைந்தே. (௪௩)

சுத்தமாமிதயத்தினிற்றிரிகலையாற்சூழ்பிரணவத்தாலான
வித்தியாமயமாம்பங்கயாசனத்தைவிரும்பிவைத்ததன்கரணிகையி
னுத்தியானுயவுபபிரணவத்தாலொளிர்புரியட்டகவுடலை
வைத்ததன்மீதைங்கலைப்பிரணவத்தால்வகைபெறுமங்குசமதனால். (௪௪)

அனிலனைப்பூரித்தடக்கிமேலெழுப்பியடர்ந்தபின்றுவாதசாந்தத்திற்
பனிமதிப்பரமனுடனுறையனுவைப்பாங்குளசிருட்டியின்முடிவைத்
தனிதரப்பிரித்துவைத்திளைப்பாறச்சத்திமந்திரத்தையுச்சரித்தே
யினியநல்லமுதயாட்டிமேலங்கமெழிலுறநியாசமங்கியற்றி. (௪௫)

வேறு.

அக்கரமானவந்தன்மாதிரிகைசெய்வான
புக்கிமுன்மூலாதாரம்பொருந்தியசுவாதிட்டானந்
தக்கசீர்மணிமுன்னாபூரகந்தயங்குந்தன்மை
மிக்கனாகதம்விசுத்திவியனொடாக்கினையோராறில். (சசு)

ஈரிரண்டிருமூன்றீரைந்தீராறீரெட்டிரண்டு
வாரிணரிதழ்களாடுவருணமுமருவக்கண்டே
சீரினங்குசன்வேதாமாற்றிகழுருத்திரன்மகேச
னாரியசதாசிவன்றானாதியராறுவர்க்கம்மா. (சஎ)

ஓகைகூர்தரநிச்சுவாசமுச்சுவாசங்கடம்மை
பாகுபாடாகுசெய்துபரிந்தளித்தனன்மேலாக
வாகையிற்சுழுனையோடுவகுத்தனன்கூறுமூன்று
மேகநீங்கியசீவான்மாவீசற்குந்தேசிகற்கும். (சஅ)

முறைதிறம்பாதுமுன்னைத்தனித்தனிமுக்கூறாக்கி
யுறுதியங்கிசத்தைச்சாலவுச்சரித்துதவியுள்ளக்
குறையறமானதத்தாற்கோதிலான்றனைப்பூசித்துப்
பெறுமனைவிழைந்துபின்னர்ப்பெகிருமாதிரிகைசெய்வான். (சகூ)

சிரநுதனேத்திரங்கள்செவித்துணையாக்கிராண
மிருகபோலங்களோட்டமிரண்டுவாயண்ணந்தாலு
பிரமரந்திரமீரெட்டிற்பிறங்கியவகரமாதி
வரமுறுபதினாறுமக்கரநிசித்துமன்னும். (ருo)

வலக்கரந்தோண்முழங்கைமருவுகைவிரலின்மூலம்
நலத்தகுமிரேகையீற்றினண்ணியிவ்வனையிவ்வண்ண
மிலக்கணந்திகழாநின்றவைந்தையுந்தனக்குமேற்குங்
கலக்கமில்கடியேசானுகவின்பெறுங்கணைக்கால்காலின். (ருக)

விரலடிநுதியின்மீதின்மேவியவனைகண்மேலை
யுளைசெறுமிடதுதாட்குமுறும்வலப்பக்கந்தன்னிற்
பரவியவெரிநிடப்பாற்பாங்குறுமிதையங்கண்ட
மருவியபிடரினோடுவலக்கரம்வலதுபாதம். (ருஉ)

இடதுகையாதியந்தமிம்முறையிருதாளுமீ
யுடல்படுமுதாரந்தன்னொடுரமுதலாதியந்தம்
வடிவுறுசிரத்தினாதியந்தமேவயங்குந்தான
மடவுளவாறாறுத்மவவ்விடநிலைகடன்னில். (ருங)

ககாரமேயாதியாகக்கருதுமக்கரங்கடன்னா
னிகரொழிநியாசஞ்செய்துநினைந்திடும்பிராணாயாம
மிகலொழிமுனிவனீரெட்டியற்றியேயனந்தாத்தி
லகனிவராதரவேகாயத்திரியினையன்பினோடும். (௫௪)

மனத்தினிலுன்னியக்கமாலைகளணியாய்ப்பூண்டே
யினத்தினுக்கினமதாகவேற்றிழிபகலப்புச்சங்
கனத்திடுமுகத்தினைத்துக்கைபுனைமாலைதாங்கித்
தனித்தவனெட்டுருகச்சகத்திரமுருச்செபித்தே. (௫௫)

வேறு.

அன்னகாலையிற்கனலுமிழலர்கதிர்வேந்த
னின்னதன்மையாலவன்புகழ்க்கிடுக்கணிழைத்தே
மன்னும்வைகிருட்குறும்பாதம்வலிதொலைத்திடுவா
னுன்னியவெண்டிரைசுருட்டும்வாருதிமுகட்டுதித்தான். (௫௬)

கனலிதோன்றலுங்காலைசெய்கடனெலாங்கழித்தே
யினியயோகுசெய்வதற்கிடையூற்றமற்றேறனைத்
துனிகள்யாவையுந்துலைத்திடச்சுடர்விடுந்தூய
பனியிளம்பிறைதுளக்குமங்குசன்றனைப்பணிந்தான். (௫௭)

பணிந்தமாதவன்செங்கதிர்ப்பருதிமண்டலத்துந்
தணிந்தநெஞ்சினாற்றண்டிலமிலிங்கமதாதி
யணிந்துபின்மலரங்குட்டமாத்திரமாகத்
துணிந்துசோதியையிதையபங்கயத்தினிற்றொழுதான். (௫௮)

இலங்குநான்மறைமுழுவதுமுணர்ந்தவனினிய
வலம்புரிந்திடுமரியயோகத்துளமார்க்கப்
புலன்களாய்ந்துமுன்சாங்கியந்தாரகம்பொருவி
னலந்திகழ்தரத்தொளிர்மனத்துண்மையுநயந்தான். (௫௯)

பின்னைசுவரியமாதியெவைகளும்பிறங்கும்
பொன்னெனத்திகழ்மாவயிராக்கியப்பொகுட்டும்
வன்னயக்கவாமாதிகேசரங்களுமலர
வன்னமாதவன்மருத்துவைவாங்கியேயடக்கி. (௬௦)

அந்தமாருதமலர்த்தியவிதயவம்புயத்தில்
விந்துநாதனைமேதினியாவையும்விதிக்கு
முந்திநான்முகன்மாலுருத்திரனுருக்காட்டிப்
பந்தநீக்கிமெய்ஞ்ஞானவாருதிதரும்பரனை. (௬௧)

தேவதேவனைத்திரிபுவனேசனைத்திகழு
மூவருட்டிருநயனனைமும்மலங்கடந்தோ
ரேவர்நெஞ்சினுமிடையறாதினிதிருப்பவனை
மேவுசின்மயப்பொருளெனவிளங்கும்வேதியனை. (௩௨)

முன்னர்வேள்வியிற்றோத்திரஞ்செயப்படுமுதலை
யன்னதன்மையிலவிசெலுத்திடப்படுமுறைத
பன்னரும்பரப்பிரமனைத்திகழ்பராபரனைச்
சன்மகத்தினில்விளங்கியசத்தகோசரனை. (௩௩)

காளகண்டனைமுக்குணாதீதனைக்கவினெண்
டோளனைத்தனிநூலணிமார்பனைத்துவன்றி
வாளவிருந்திடுநீற்றனைமன்னுயிர்க்குயிரா
யாளுமற்புதவம்மையாமம்பிகையுடனே. (௩௪)

முன்னிநெஞ்சகமுளரியின்முறைவழாதிருத்திக்
கன்மபூமியின்மாயையின்வாழ்க்கையைக்காணான்
றன்னையுமறந்துநிட்டைசெய்தனனவ்வாறு
நன்னலம்பெறவியற்றிடுமெல்லையோர்நாளில். (௩௫)

வேறு.

கன்னலங்கழனிசூழக்காசியேமுதற்
றொன்மைசேர்பதிவளந்துவன்றியார்த்திட
மன்னியவுலகெலாமகிழ்வுபூத்துடன்
றன்னைநேரரியவன்சார்தற்கெண்ணினான். (௩௬)

துதித்தனர்வானவர்தொழுதுபோற்றினர்
கதிக்கதிபதிகளாங்கணங்கள்யாவையுங்
குதித்தனகுண்டுகட்குறட்கிருத்திமம்
விதிக்கருமலர்மழைவிண்ணம்பெய்ததால். (௩௭)

முழங்கினகுடமுழாம்படகந்தக்கையுந்
தழங்கினவாகுளிதிமிலிதண்ணமுங்
கொழுங்கனிகண்டினுங்குணங்கண்மேம்பட
வெழுந்தனபுரிநரம்பிசைகளெங்கணும். (௩௮)

கடல்களார்ந்தென்னவேகாகளங்களு
மிடையிடையொலித்தனவிவைகள்யாவையு
மிடைதரவெண்குடைவிளங்கிவிண்ணெலா
மடைவுடன்தரவெழுந்தருளினனரோ. (௩௯)

தருமசாக்கிரமெனுந்தனிவெள்ளெற்றின்மேற்
திரிபுரமெரித்தவன்செல்லுஞ்சென்னெறி
மருவியமாதவன்மனத்திலுன்னிய
பரிவுறுநலன்றனைப்பகுத்துநோக்கியே. (எ0)

தீங்கரும்பனுக்கியசெல்வியோடெமைத்
தாங்கினனுளத்தெனத்தழைவுங்கூர்தர
வோங்கியகயிலையங்கிரியினுற்றனன்
வாங்குதெண்டிரையெனமறைநமுழங்கவே. (எக)

பொன்மலையணங்குடன்போந்தவண்ணலைப்
பன்முறையுறப்பிஞற்பணிந்தெழுந்திலன்
றன்னிருவிழிமலர்தயங்கக்கண்டிலன்
மன்னியவொட்டகவடிவந்தோற்றமே. (எஉ)

இருத்தல்செய்தனனிவற்கென்னவாற்றலென்
றுரைப்பரும்வெப்பமுதூரவோங்கிய
மருத்துவர்முதலியவானவர்தமக்கெலாங்
கருத்தனுநந்தியங்கடவுட்சீறினன். (எங)

மடித்தனசெவ்விதழ்மணிகண்சேந்தன
பொடித்தனவெயர்மிகப்புருவங்கோட்டின
விடித்ததுகடுங்குரலெழுந்தனற்பொறி
துடித்தனசெங்கரந்தோட்புடைத்தவே. (எச)

இனையசெஞ்சடைச்சிலாதரன்றருந்
தனையனுக்குற்றுமோர்சலனமில்லனைத்
தினையளவொழுக்கிலாச்சிவத்துரோகியிற்
றனைநெடுங்கழுத்தலாய்த்துவள்தியென்றனன். (எரு)

வேறு.

ஆசைபெட்டுநிலைமாறுபட்டவனிகூறுபட்டலரிதண்கதிர்
வீசிவட்டமதிசேயகட்டழலைவீறுகொட்டவருமெயெனு
மாசையுற்றறிதேசொழிப்பநடைமாறுபட்டுறுதிமாழ்கிலா
வீசனைப்பரவுநேசனத்திரிமெய்யெய்தினனதுவெழுந்துயர். (எசு)

பொற்றையுச்சியினையெற்றியெற்றிவருபொற்புடைப்புயலயிர்ப்பமே
றுற்றுமற்றையுலகத்தினிற்பவரொப்பினைக்கடிதகற்றியே
கொற்றமிக்கவயிரத்தபற்சினைகுழைத்தபத்திரவகத்தவாய்
நிற்றலுற்றதருவத்தமுற்றுநிலைநெக்கவுண்டதிரநின்றதே. (எஎ)

4

வேறு.

திடங்கொண்மாமறையோர்நான்கையும்விரித்தசேவலோதிமத்திறையனை
கடந்தனிலொருக்காற்போந்தனனன்னாட்கானகம்வானகங்காட்டி [ய
முடஞ்செறிபசியதெங்கினைப்பொருவிமுழங்களந்தனையசைத்து
நடந்ததுமுடுகிநடத்தலுமிவணினண்ணியதெவன்கொலோவென்றான்.

என்றுரையாடித்தேறுதலிலனாயிணையகலவ்வுழைப்போந்து
மன்றலங்கமலமலரவன்சிறந்தமத்தகந்தனிற்புதமேலற
நின்றிருநான்குசிருட்டியும்பதித்துநெடும்பொழுதகத்தினாடித்
தன்றனித்துணைவனெனவுணர்ந்தினையசாபம்வந்துற்றதுமறிந்தே. (௭௯)

அய்யவோவென்றென்றரற்றிமட்டுயிர்த்தேயணிமுறுக்கவிழ்த்திதழலர்த்துஞ்
செய்யகோகநகஞ்சொரிமணியேய்ப்பச்சிருக்கிடைச்செறுபுனறுளிப்ப
மெய்யெலாந்தபனன்வீழ்கதிரகத்தின்வீழ்த்தியபல்லவமெதிர்ப்ப
வுய்யுமாறிலனாய்நின்றுநின்றிரங்கியுரவினையொழித்தனனம்மா. (௮௰)

மேயவர்குலத்தோனெண்ணரிதாகிவிரிந்திடற்கமைந்தவல்வினையைத்
தூயபேரறிவான்வயங்கினரெனினுந்துய்த்தவத்திடிற்றலைப்பரிதா
லேயவிவ்வினைக்காயிரங்கியென்பயன்கொலென்றுளத்தினிற்றெளிவெய்தி
யாயினுமிமிலேற்றண்ணலைவாழ்த்தினரிதரோவெனைத்துமென்றாய்ந்தான்.

அன்னவன்மந்தாகினிப்புனலாடியருங்கடிகமழலர்ச்சொரியும்
பன்னகோட்டரத்தபராரையங்குசத்தபழுவநின்றீசனைக்குறித்தே
மன்னுமைம்புலனின்செயலறவொடுக்கிமனத்தினைத்தன்வசமாக்கி
யுன்னுதற்கரியபூசனைபுரிந்தேயுருகியேதுதித்திடலுற்றான். (௮௨)

வேறு.

ஆலமதைக்கந்தரத்தவெருத்தங்கோட்டி
யசைந்தமணிக்குழைக்காதவமுதம்பில்கும்
வாலைமதித்திடுஞ்சடையபவளவாய்மலர்ந்த
செந்தாமரைமுகத்தவளர்முக்கண்ண
சூலமுமொண்சுடர்மழுவுமுழையுமேந்தித்
துள்ளிவரும்வெள்ளேற்றிற்றோன்றுநிற்குங்
கோலதரமறையோலமிட்டுங்காணாக்
குஞ்சிதத்தாளிணையன்றிக்கொள்கையுண்டோ. (௮௩)

சூட்டரவின்முடிசுமக்குமுலகின்மீதிற்
றுணர்மலர்க்கற்பகநாட்டிற்றுலங்கும்வானில்

வேட்டனந்தமுனிவரர்களனந்தபேத
வேள்விசெய்தும்பலயோகம்வினைத்துங்காணுப்
பாட்டளிக்கேதனைதந்துமுரன்றணவாநிற்கும்
பங்கயச்செஞ்சரணமன்றிப்பகரின்மற்றோர்
தாட்டுணைகளடியேனுக்குளதோநாதா
சரணமேகதியென்றுதாழ்ந்துநின்றான். (அச)

பணிந்தினையமொழிதுதிப்பப்பரமன்றோற்றிப்
பங்கயநீவிழைந்தவரம்பகர்தியென்றே
தணிந்தருளவவன்வணங்கித்தமியேன்பெற்றத்
சனற்குமரன்சதசிருங்கச்சயிலத்தோர்பா
லணிந்துபலநறுந்தளிரும்பசுந்தேன்பில்க
வவிழ்ந்தகலிகையுமீசற்ககத்தின்முன்னித்
துணிந்தரியயோகுபுரிந்திருந்தானங்கட்
டோன்றல்வரவயிந்திலனுற்றெழுதனித்தான். (அரு)

நெட்டிலையமணிச்சூரற்றங்குங்கையா
னெடிதுயிர்த்துக்கடுங்கோபநெருப்பின்மூழ்கி
யொட்டகமாகுதியென்றான்றவத்தோர்சீற்ற
மொருநகணமுந்தவிராதாலுடையனுன்
வட்டமலர்க்கொன்றையந்தார்தரித்தநாதா
மன்னுயிர்கட்காரமுதேமணியேமாலோ
னெட்டரியசரணடிமைக்கினிவேறுண்டோ
விவ்வுருவநீக்கியருளெந்தாயென்றார். (அசு)

அனைத்துயிரின்குணம்யாவுமறியும்பெம்மா
னருட்சைவநெறியினின்றவடியார்தங்கண்
மனப்பெருமையுலகறியச்செய்யவென்றே
வாக்குறுதிகாட்டவென்றோமறையோய்கேட்டி
சினத்தையறவெறிந்துபுலனடக்கிவாய்மை
திறம்பாதநமதுதொண்டர்சூளையெம்மா
லெனைத்துமகற்றுதற்கரிதுபிறிதோர்தோற்ற
மிலதுநந்திவானவன்பாலெய்தியென்றான். (அஎ)

பல்லுயிர்க்குந்தனுகரணபுவனபோகம்
படைத்தளித்துமழிக்கவல்லபரமன்றாளை
நல்லுறுதியடியேற்கென்றிறைஞ்சிப்போந்து
நனுகும்வினைப்பழுத்திலதோநாவென்றோவே

னெல்லையிலாப்பொதிர்ப்பிறெடும்விரதம்பூண்டே
யிருநிலத்திலிருந்துதவமிழைத்தானங்கண்
கல்லொடகநிலையுருகிமெலியப்பன்னாட்
கலைமகள்குங்குமத்தனந்தோய்கவின்கொடோளன். (அஅ)

வேறு.

சதுமுகனுஞற்றியதவங்கண்டன்பொடு
கதுமெனநந்தியங்கடவுட்போந்தனன்
றுதிபலசெய்துநின்றொழும்பற்கையனே
கதிபிறிதுண்டரோகமலமன்றியே. (அகூ)

பிழைத்தனயாவையும்பொறுத்துப்பேரரு
டழைத்திடினுய்குவன்றமியனென்றவன்
கழற்றுணையிறைஞ்சியேகரமுகிழ்த்தன
னழற்பொலிகரத்தினனபயநல்கியே. (கூ0)

தெண்ணிலாக்கொழுந்தினைதிகழத்தாங்கிய
பெண்ணொருபாகனையிறைஞ்சிப்பேரரிய
விண்ணவர்முதுவனைவியந்துநோக்கியே
தண்ணமுதெனமொழிசாற்றுகின்றனன். (கூக)

நின்முளைநெடுங்கழுத்தென்னநீடிய
கன்மவேடத்தினைக்கழித்தனந்தர
மன்னுமென்சீடனாய்வளங்கொண்மாமறை
யுன்னரும்பதிநிலையுண்மையோர்குவான். (கூஉ)

மற்றையகலைகளின்ஞானவண்மையுந்
தெற்றெனமுறைமையிற்றெரிக்குவானெனக்
கொற்றவன்செவ்வியகோனடாத்திடுங்
கற்றையஞ்செஞ்சடைக்கடவுட்போந்தனன். (கூ௩)

சயம்பிறம்பூதென்னுஞ்சலதிமூழ்கியே
வயங்கியகணங்களைவருமினென்றன
னயம்புகன்றனையவர்நண்ணினாரிவ
னியங்கியவொட்டகமுருவமெய்திய. (கூச)

அந்தணன்றனைச்சிலாதரனளித்திடு
மைந்தன்வாழுழைச்செலவைத்துமீள்தரன்
றாய்ந்திடப்புகன்றுதன்னுலகிற்போயினன்
சுந்தரமுனிவரர்தொழவென்றோதினன். (கூரு)

வேறு.

பலகலைக்கேள்வியாய்ந்துபற்பலதவங்கணீட
நலனிறைசனற்குமாரனற்றிறநவின்றாமிப்பாற்
றலமதிற்சிறந்ததென்றேசங்கரன்சாற்றசெம்பொன்
மலைமகள்விழையும்வேதவனத்திறம்வகுக்கலுற்றாம். (௬௬)

சனற்குமாரச்சருக்கம் முற்றும்.

ஆகச் செய்யுள் - ௨௦௦.

# வேதவனச்சருக்கம்.

நிட்டைசேர்சூதனவ்வுரைநிகழ்த்தலு
மெட்டைதீர்தரமுனமியம்புமுண்மையிற்
கட்டணிநந்தியங்கடவுளாற்பெறு
மொட்டகப்புதையினையொழித்தவண்மையும். (௧)

தவனருமறைப்பொருட்டன்மையோர்ந்துயர்
சிவனருட்பெறுங்கதிதெருட்டமாட்சியு
முவமையைத்துரந்தவாலொழுக்கினந்தண
ரவனெறியருளெனவியம்பன்மேயினன். (௨)

அஞ்சயந்தாங்கியவருத்தச்சாரலி
னஞ்சயந்தாங்கியநாதற்கன்பராய்
நெஞ்சயநீத்திடுநியதிவானவர்
விஞ்சையருரகரும்வீணைவல்லரும். (௩)

பற்பலகணங்களும்பனிவிசும்பில்வா
ழற்புறுமுனிவருமரியயோகருஞ்
சிற்பரனருள்பெறுஞ்சித்தர்சாத்தியர்
மற்படுமருத்துவர்வசுக்களெண்மரும். (௪)

குழுமிநின்றிறைஞ்சிடக்குறித்தகணமெலாங்
கழுமல்செய்தரமழுக்கரத்திலேந்தியே
விழுமியபீடிகைமீதிருந்தன
னெழுமையுந்தவிர்த்தருணந்தியெம்பிரான். (௫)

அவ்வுழைமுழுதுமொழியன்னறாண்டிய
செவ்வியகணங்கள்சென்றிறைஞ்சிச்செங்கையி

னவ்விநின்றொளிர்தருநாதவெம்மனோர்
கவ்வைசெய்தெழும்பவக்கடனின்றேறவே. (௬)

அருட்பொழியையநின்னலர்ந்ததாமரைக்
குருக்கிளர்பதஞ்சனற்குமரன்போற்றிநல்
லுருப்பெறவுய்யெனென்றுரைத்தவேதன்வாய்
விருப்புறுமொழியினால்மேவினோமென்றார். (௭)

என்றுரைத்தவ்வுழிவிடுத்திறைஞ்சுபு
வன்றிறற்கணந்துழாய்மார்பத்தண்ணறன்
பொன்றிகழுந்தியங்கமலம்பூத்தவன்
றன்றிருச்சரண்டொழச்சார்தலுற்றவே. (௮)

வேறு.

விரும்பிவானவர்கள்போற்றுமேருவின்வெருட்சிதாங்கி
வருஞ்சனற்குமரன்றன்னைவளங்கெழுநந்தியென்னு
மருந்தவனழைத்துநோக்கவவனைவத்திரியின்வேடங்
கரும்பொனிற்குளிகைசேர்ந்தகாட்சியைப்போன்றதம்மா. (௯)

சிகியினின்றொளிருஞ்செல்வன்செப்பியசாபந்தீர்ப்பச்
சகியினீத்திறந்தமாரன்றனுப்படைத்தெழுதல்போலு
மகியின்மேன்மணியேபோலுமாதித்தனொளியேபோலு
மெகினமீதுறையுமண்ணலின்றவனுதையஞ்செய்தான். (௰).

வேறு.

உதித்தபண்ணவனந்தியங்கடவுளையுளத்திற்
பதித்தருச்சனைசெய்துபன்முறைபணிந்தெழுந்தே
துதித்துநின்றடியேன்வினையூட்டியேதுலைத்தாய்
கதிர்த்தமோலியாய்பிழைத்தனபொறுத்தனின்கடனே. (௧௧)

மைவிளங்கியகந்தரவென்றன்வாழ்முதலே
துய்விளங்கியபடிறனென்றுளத்தினிற்றீயிற்
பொய்விளங்கியவுற்பவப்புணரிநீந்தறியேன்
கைவிளங்கியகாதவக்கடற்றனைக்கடப்ப. (௧௨)

பணித்திடென்றவன்பதத்துணைமீட்டுமேபணிந்தான்
மணித்திருப்பிரம்பேந்தியவள்ளன்மாதவன்ற
னணித்துறநோக்கியேயொருதனிக்கரங்குவித்தயனுங்
கணித்திடற்கருமுகிலவித்தையுங்கசிந்துதவ. (௧௩)

திருவுளத்தினிற்கண்டுமுப்புரந்தெறுஞ்செல்வன்
றருமகத்துவநிறைதருபுராணமுந்தழைத்துப்
பெருகுமுத்தமநியாயமீமாஞ்சையும்பிறவு
மருவுசந்தசுநவவியாகரணமூவகைய. (௧௪)

கணிதநூற்றிகழ்கற்பசூத்திரங்கலந்தெழுதர
வணமிலங்கிருக்கெசுருசாமம்மதர்வணமு
நுணுகுமாயுதவேதமுனுவறனுவேத
மணிநிரம்புகந்திருவமுமருத்தசாத்திரமும். (௧௫)

எய்துதற்கரிதாகியசெய்கையேயெனினு
முய்யுமார்க்கமாய்முறைமையிற்றெரிந்துநன்குணர்த்தா
னய்யன்வாய்மலர்ந்தருள்செயவிதியுளியறிந்த
துய்யமாதவனிவற்றினிற்றெளிந்துசொற்புகல்வான். (௧௬)

அத்தகேண்மதிபுன்புலச்சிறியனுக்களித்த
வித்தைமீதினின்மெய்யுணர்வுடையவர்விழைந்து
சித்திசேர்தரத்திகழ்ந்துமேல்வளர்சிவஞான
முத்திமார்க்கமாய்மொழிதரப்பட்டதுமாதோ. (௧௭)

நிலையில்யாக்கையினின்றுமெய்ச்சுடரதாய்நீடு
மலகிலான்றனையவையவத்துடனறிந்தின்னற்
றிலதநீங்கியபசுத்துவஞ்சிவத்துவமாகு
முலகிலித்திரஞ்செய்வதற்குணர்ச்சியதொழிந்தோன். (௧௮)

சோதிரூபமாய்த்துகளறத்தொழுகுவனுகில்
வீதசோகனுய்மகத்துவம்பெறுவன்விள்ளரிதாய்
நாதவிந்துவாயெவற்றினுநண்ணினனுகத்
தீதறத்தெரிசித்தவன்றிவ்வியனுவான். (௧௯)

ஆக்கையான்மனம்வாக்கினுலறியொணுனன்றி
நோக்கினும்புலப்படுவதேயிலனெனநுணுகித்
தேக்குஞானவாருதியருளாற்றெரிசித்தோன்
மோக்கவீட்டினில்வசித்திடுமுத்தனுகுவனே. (௨௦)

என்றனேகமாயின்னணம்வீட்டினுக்கேது
நன்றுகூறினையீதலானவிபுட்லெடுத்தோன்
றுன்றுநோயைநீத்தின்பமேதுய்க்குவதிலன்போல்
வென்றிசேர்திருவருட்பெறும்வீடுபேறிலனே. (௨௧)

எனவுமோதினையாதலாலிவையெலாமுணர
மனவுவாழருட்குரவனேவல்லுநரரிதாற்
கனவினுந்தொழற்கெளியவாயிவற்றினுட்கணித்தே
யுனதுதொண்டர்களுய்யவொன்றருளெனவுரைத்தான். (உஉ)

தீதகற்றிடுமுனிவரன்றெரித்துரைசெய்ய
நாதனந்திபங்கடவுணன்றெனச்சிறுநகைசெய்
தோதவேலைசூழுலகினுக்கிதமுரைத்தனையால்
வேதநண்புறுகந்தனென்றுரைத்திடுமேலோய் (உ௩)

முக்கண்வானவனுதியின்விதித்திடுமுறைமை
மிக்கபூசுரர்வேதவாச்சிரமநூல்விதியாற்
றக்கவோதியேபயின்றுணர்த்துதறனக்கதிபர்
தொக்கபின்னவரோதியேதுடங்குதற்குரிய. (உ௪)

சதுரர்மந்திரசாத்திராதிகடனக்குரியர்
விதிதிறம்பிலாவிவற்றினால்விமலமாகுவர்போன்
மதிகொள்பண்ணவபிரமசாரியமுதல்வரித்தே
பெதிகளுக்குணவருத்திவாழில்லறமிரண்டே. (உ௫)

வரத்தைநாடுமனைவியோடகமகல்வானப்
பிரத்தமூன்றகப்பற்றறப்பேணதயுமொருவி
விரத்தனாகியேமெய்வரனுணர்வினையளிக்கும்
பரத்தின்மோகமாய்ச்சனனசித்திடுதனற்பாலாம். (உ௬)

வேறு.

அளந்தவாச்சிரமிநான்கினரியசன்னியாசிவேதத்
துளந்தனைப்பகுத்துச்சாலவொண்பொருளுணர்ந்துபின்னர்
வளங்கொள்பூருவத்திற்கன்மபதந்தனைவகுத்துநின்றே
விளங்குமுத்தரத்திற்பிரமமெய்ப்பதம்விரித்துக்கூறி. (உ௭)

சுருதியேயிலிங்கம்வாக்கியந்தொல்பிரகரணந்தானம்
வருசமர்க்கியமோராறும்வளருபக்கிரமத்தோடு
தெருணிறையுபசங்காரந்திகழுமப்பியாசஞ்சிந்தித்
தரியவாயறியபூர்வோத்தரபலமருத்தவாதம். (உ௮)

பொங்குறுபத்தியாறும்பூருவோத்திரத்தின்மீதி
லங்கமாய்முறைமைத்தாகவடுத்தமீமாஞ்சையத்தின்
றுங்கமாம்பலத்தையாய்ந்துசொற்றநிச்சயத்திற்சிந்தை
தங்கவேசெலுத்தலன்னோன்றனக்குநூல்விதியதாகும். (உ௯)

உயர்பிரணவத்திற்போந்தவுட்பொருளுணர்ந்துநெஞ்சி
னயர்வறநிட்டைசெய்தற்கமைந்திடிலமலன்றோற்றித்
துயரறச்செய்வனன்றேன்சொலற்கருமகதானந்த
மியலுறப்பெறுவன்வீடுமெளிதினிற்கிடைக்குமன்றே. (௩0)

இன்னெறியொழுக்கம்யார்க்குமெய்துவதரிதாமாற்று
னன்னெறியுரைப்பின்மேலாநாதன்வாழ்பதிகடம்மின்
மன்னியேவாசஞ்செய்தல்வருபுலையனுக்குமற்றைப்
புன்மரஞ்சிதலீறாகப்பொருந்துபல்லுயிர்க்குமென்றான். (௩க)

தேசிகனுரைத்தமாற்றந்தெண்டிரையமுதமென்ன
வாசகன்முனிவன்மாந்தியையனேயருளிச்செய்த
நேசமார்தலத்தின்வாசநெடியவுமினியதேயா
லீசன்மூதூரின்மேன்மையெய்தியதலம்யாதென்றான். (௩உ)

கஞ்சவாகனன்சேய்கூறக்கணந்தியானித்துமுன்னர்ப்
பஞ்சின்மெல்லடியாட்காகப்பகர்தலமுரைப்பன்கேண்மோ
விஞ்சையர்முனிவர்சித்தர்வேழமாமுகத்துக்கோமா
னஞ்சிறைமயில்மேல்வாழுமாறிருபுயத்தினானும். (௩௩)

எண்ணருமுலகம்பூத்தவிறைவியுஞ்சூழவென்றும்
வெண்ணிலாச்சொரியுந்தூயவெள்ளியங்கிரியின் மீதிற்
றண்மலர்க்கொன்றையந்தார்தரித்தசெஞ்சடிலநாத
னண்ணலம்பீடந்தன்னிலழகுறவீற்றிருந்தான். (௩௪)

இருந்தபேரவையிலோர்போதேலவார்கருமென்கூந்தற்
பரிந்தெழிலெருத்தங்கோட்டிப்பணிமதியணிந்தநாத!
திருந்தியமுத்தியேதுதிகழ்சிவஞானமென்றே
யருந்திறநூல்கள்கூறுமமைதியாலகிலமீதில். (௩௫)

நச்சிவண்டரற்றுங்கஞ்சநாண்மலர்ப்பிரமனாதி
கச்சமிறவத்தோரோகர்கலைதெரிபவர்வேதாந்த
நிச்சயர்தமக்கும்வாய்த்தனேர்மையாஞானநோற்றற்
கிச்சையில்பலகோடிக்கெய்தரிதன்றோவென்ன. (௩௬)

இமகிரியளித்ததூய்விளநிலாவெறிக்குமூர
லுமையவள்பகரயாவுமுறுநெறியுரைப்பக்கேளா
யமைவருதோளியாநேடரியபூரணமதாகித்
தமைநிகர்பரமாகாசமாகவேதயங்கநிற்பேம். (௩௭)

மன்பெறுபரமாகாசவாசமுக்கூறுநீங்க
வுன்றனைக்கலந்தேயெங்குமுறைதிகழொருகூறாகி
யின்புறநின்றேமேனுமிலங்கியதலத்திலென்று
மன்பர்பளுய்யநீங்காதணிபெறவமர்வேமன்ன. (௩௮)

இருசெழிற்றலத்தினோர்பாதிருப்பின்முக்கரணத்தெய்துந்
துரிசெலாந்தவிருமென்றன்சோதிமாமலையாய்நின்றான்
மருவளர்கருமென்கூந்தன் மடமயிலனையாணெஞ்ச
முருகியெத்தலத்தினாதாவுறைகுவதுணைசெய்யென்றாள். (௩௯)

வேறு.

இருமருங்குங்கருங்கடல்சூழ்ந்தேதலமிலவங்கமணியேந்திப்போற்ற
வருணன்முதலிமையவர்கள்வணங்குதலம்பசுந்துளபமார்பத்தண்ணல்
பிரமகத்திதனைப்போக்கிப்பேறளிக்குந்தலமதனைப்பேசினோர்க்குந்
தருமனிடரினைத்தீர்க்குந்தனுக்கோடிவளர்சேதுத்தலமதாமே. (௪0)

ஒன்றுளதத்தலத்துதித்தசராசரங்களனைத்தும்விடையூர்தியாகும்
பொன்றிகழும்பர்தனக்கேணியெனச்சோபானம்போற்பச்சால
வென்றிநிறைதிரிசிரசின்விலங்கல்வளர்தருஞ்சிறந்தவிமலையோடு
மென்றுமரகதவண்ணன்றிருவரங்கத்திருந்துதொழுதேத்துமூதூர். (௪௧)

மட்டுண்டமலரேந்திமணிகொழிக்கும்வைகைவரநதியின்பாங்கர்
கட்டுண்டபுகர்முகத்துக்கல்லானைதனக்குவளர்கரும்பொன்றீந்த
தொட்டுண்டவடுகளிறுமதஞ்சொரியச்செய்துலகந்துதிப்பக்காட்டி
யெட்டுண்டமதிநுதலாயிலங்கியிடுமதுரைநகர்க்கிணைவேறுண்டோ. (௪௨)

கம்பமுறுமொருசிலம்பிவாய்நூலாற்பந்தரிடக்கண்டுதூய
வம்புவனிபணிசெய்யவரசளித்துத்திருப்பணியினருமைகாட்டிப்
பம்புநறுந்தளிர்குழைத்தேயெஞ்ஞான்றும்பலமுதவிப்பணைத்தபாண்டுச்
சம்புவளர்ந்திடவிளங்குமானைக்காத்தலப்பெருமைசாற்றலாமோ. (௪௩)

காசகன்றதுங்கைநதிவழிபடுமூதூரதனிற்கருத்தானுன்னிப்
பூசைசெயினோரிலிங்கம்புவிதனிலீரைந்துசதம்பொருந்தாநின்ற
தேசுடையசிவதலங்களிழைத்தபலனுதவுமதிற்றேகநீப்பி
னீசனெனும்விலங்கெனினுங்கிருமியெனுமுருத்திரனாய்நிலவுந்தானே.

ஈரைந்துகந்தனைப்பெற்றிருந்தவனோர்கந்தனைப்பெற்றிருந்தோன்முன்னர்
காரைந்துகந்தனையும்படிக்கருள்செய்யெனக்கொடுப்பக்கைக்கொண்டே
பாரைந்துங்கடப்பதன்முன்கயமுகனுலைமைப்பவளர்பதியதாகு [கிப்
மோரைந்துபாதகமுமொழித்திடுங்கோகன்னமென்னவுரைகொண்மூதூர்.

தண்டரளமணிகொழித்துச்சாதியகிற்சந்தனமுந்தகர்த்துவாரி
மண்டிவருகொள்ளிடத்தின்வடபாலிற்கொங்குயிர்த்துமலர்ந்துகூம்பாப்
புண்டரிகபுரமெனுமோர்தலமுளதத்தலத்தையொருபோதிற்கண்ணாற்
கண்டவருக்கரியமறைகாணாதபொருளெளிதிற்காணலாமே. (௪௬)

கொழுதியளிமுரன்றணவுநறுமலர்சேருய்யானங்குலவப்பாங்க
ரழகியமுத்தாநதிசேர்பூழமலையென்றொருதலமுண்டதனின்மீதில்
விழுமுடல்களனைத்தும்வலச்செவிமேலாயிறக்கும்வினைவிட்டுமேலாஞ்
செழுமைபெறுபரபோகமளிக்குமதற்கிணையுலகிற்சிறிதுமின்றே. (௪௭)

ஆதியுகமுதனான்கிலனன்மணிபொன்சிலையுருவமாகும்வெற்பு
மீதுவளர்ந்திடவிளங்குமொருதலமுண்டதனாமம்விளம்பினோர்க்கும்
வாதைபுரிமும்மலமும்வலியிழக்குமெனிலதனில்வசித்தோர்கண்டோர்க்
கோதுபலன்பிறிதுண்டோவவரன்றேசீவன்முத்தருலகினம்மா. (௪௮)

காஞ்சியெனுமொருதலமுண்டதிற்காமக்கோட்டம்வளங்கவினாநிற்கும்
வாஞ்சையுறிலனந்தசித்திவழங்கிடுமுற்பவநோய்க்குமருந்தாங்காயம்
போஞ்செயலைத்தவிர்த்தழியாதிருக்கவிழைந்திடிலொற்றியொன்றேபோ
தாஞ்சிறிதுந்தடையிலதாய்த்திருமயிலைமுத்திநெறிதழைக்குமாதோ [துந்

மையாருங்காளத்தியிடைமருதூர்கழுக்குன்றம்வயித்யநாத
மையாறுதிருச்சயிலம்வான்மியூருச்சயினியாலங்காடு
செய்யாறும்வடமுல்லைவலிதாயஞ்சித்தவடந்திகழ்கேதார
முய்யானநிறைவிரிஞ்சைவிரூபாக்கம்பிரபாசமொளிசேரோத்தூர். (௫௦)

ஓங்கியமந்தரசயிலங்கடம்பனிகளிடையறாதூற்றுநிற்பத்
தாங்கிநிமிரிமையகிரிதண்கயிலைமுதலனந்தத்தலங்கடோறு
மீங்கிவற்றின்பெருமையெலாஞ்சதுமறையேதுதிசெய்யுமிவற்றிற்றங்கிற்
றேங்குவளைவிழிமயிலைதிருவருள்பெற்றிடுமென்றான்சேமேனின்றான்.

வித்தகனத்திறமொழியவிரைகமழ்செந்துவரிதழ்வாய்விமலிநோக்கி
யத்தலங்கடொறும்வசித்தற்காரணனேயிமையோர்க்குமரிதேயன்றோ
வித்தரணிமானிடர்கட்கெளிதாமோவாயினுமெவ்வுயிர்க்குங்கூட
வுத்தமமாகியதலமொன்றுரைத்தருள்செய்யெனப்பணிந்தாளுலகமீன்றாள்.

வேறு.

உரைசெயமகிழ்ந்தினக்கிங்கோதியதலத்தினின்றும்
பரமபுண்ணியமாங்காஞ்சிபகர்தலமிதனின்மீதுங்
கருதினர்க்கெளிதின்முத்திகவினுறவளிப்பதாகி
விரவியகாஞ்சிதன்னின்மேவியமேன்மைத்தாகி. (௫௩)

பார்புகழ்காஞ்சியேகாம்பரற்குயோசனையோர்மூன்று
நேர்பெறுமீசானத்தினீடுபூருவத்தின்வாரிக்
கேர்கொள்யோசனைமேற்பாலிலெழிற்றிருப்பாசூர்க்கங்கி
யார்திசைதனிற்கபாலீச்சரத்தினுக்கனிலதிக்கில். (௫௪)

பூருவந்தன்னிலெம்மாற்பொருந்துறப்படைப்பதாகிச்
சீருடன்றிகழுமூதூரொன்றுளவதனின்செவ்வி
நேருறமுழுதுங்கூறநெடியவுமரிதேயாகு
மேரணிநலன்கள்வாய்ப்பவின்றுநீவிழைந்தவாற்றான். (௫௫)

வேறு.

நிச்சயமதாய்மொழிசுவலென்றொருகணப்பொழுதுநின்றுதிகழ்நெற்றிவிழி
னிச்சையறமுத்திதருமூரதுதனக்குமுனியற்கைபெறுநாமகரணங் [யா
கச்சமிடுதற்கரிதனுத்துணையவற்றிடைகணித்துறுதிசெய்வனுமைகேள்
பச்சைமணிவண்புரமென்றுபெயர்தென்கயிலைபானுபுரியென்றுபெயரே.

மல்லனிறையும்பரசிராமபுரமென்றுபெயர்மாபிரளயத்திலுலக
மொல்கியபடைக்குமலைவல்லிநகரென்றுபெயரோதருமிராகவபுரஞ்
செல்வநிறைகும்பமுனிவாசபுரமென்றுபெயர்செய்யமணவாளநகர்நீ
டல்லலொழிமுத்திநகரென்றுபெயர்தேவநகராதிபுரியென்றுபெயரே.

தாதிதழிபுண்டரிகமாநகரமென்றுபெயர்சாரணரியக்கரிமையோர்
நாதபுரமென்றுபெயர்சோதிகிரியென்றுபெயர்ஞானநகரென்றுபெயர்வே
மாதவசியற்றுநகரென்றுபெயரத்தியனமாநகரமென்றுபெயர்சீர் [ண்
வேதபுரியென்றுபெயர்பொன்னுலகநீடுதிருவேலவனமென்றுபெயரே.

தீயவடவாவனலனூழியலைகாலபடர்தீமைபுரியாதநகரங்
காயுநெடுமாவிடவுபாதிபசிநோய்கள்பிணிகாதுதல்செய்யாதநகரம்
போயரியமாதவர்களூற்றினுடனைம்பதமர்பூசைபுரிதேவநகர
மாயவினைதீர்நகரமென்றுபெயர்நீடும்யுகவாசநகரென்றுபெயரே. (௫௯)

இத்தகுதிபெற்றிடுதலத்தினிமிடப்பொழுதிருப்பினும்விருப்பினொருகாற்
சித்தமதிலுன்னினுமெடுத்துவமைசெய்யினும்வழிப்பயணமீதுசெலினு
முத்தரமுரைக்குமளவிற்பிசகியோதிடினுமொண்புவிபரித்தரசராய்ப்
புத்திரபவுத்திரகளத்திரருடன்பயில்வர்போதுவர்பின்முத்திநகரம். (௬௦)

வேறு.

என்றுநாயகனிதம்பெறமொழிந்துமேலிலகு
மன்றல்சேர்தருங்குமுதவாய்நயப்புறமலர்ந்து

வென்றிமேவுமித்தலத்தின்மாணலந்தனைவிரித்து
நன்றுகூறுவல்கேண்மெனநவிலலுற்றனனால். (௬௧)

வண்ணவான்முகிற்கற்பகக்காவினில்வளரு
மண்ணல்சேரயிராவதமெனவிசும்பகன்று
கண்ணகன்றதெண்டிரையெறிகருங்கடன்மடுத்து
விண்ணில்வாழ்தருமிந்திரனெனமீண்ட. (௬௨)

சூழுமாமழையன்னவன்சுந்தரக்கரத்தில்
வாழும்வச்சிரம்விதிர்த்தெனமின்னிடைவயங்கப்
பாழியான்றிருவில்லினைப்பண்புறக்காட்டித்
தாழுறுதவவ்வினமணியெனவதிர்ந்தனவே. (௬௩)

அனையவன்பருப்பதத்தினீள்சிறைதனையரிய
நினையன்னாட்பொழியம்பின்வீழ்காட்சியைநிகர்ப்ப
மனதினேடருநந்தியங்கிரிதனைவளைந்து
புனைநலந்தருங்குளிர்ச்சிகொளம்பினைப்பொழிந்த. (௬௪)

எழுந்துவிண்டொடுநந்தியங்கிரிதனிலிலக
வழிந்துபோதும்வெள்ளருவியின்வளங்கெழுகாட்சி
செழுந்தவத்தினர்தொழுஞ்சுரநதிதிருநிலத்திற்
றழைந்தசெவ்வியைநோக்குறவருகுதருமால். (௬௫)

வேறு.

எழுமலையுருவும்வேலையேந்தியேகண்ணீராறாய்ச்
செழுமைசேர்செய்யமேனிதிருந்தவேகாட்டுமாற்றா
லழகியபாலிநீத்தமளப்பருமகிழ்ச்சிபொங்க
முழுதுலகளிக்குமேலாமுருகனைப்போலுமாதோ. (௬௬)

வேறு.

அருங்கடமுகத்தினிற்றூங்கியாகுமேற்
றிருந்தவேவருதலாற்றுதிக்கைசேர்தலாற்
பருங்கிரிநின்றகல்பாலிமாநதி
பெருந்திறற்பிரணவப்பிள்ளைபோலுமால். (௬௭)

காசிதனிற்கலைகடந்துநிற்றலாற்
பேசருமரங்கண்மேல்விளங்கும்பெற்றியாற்
றேசுருநந்திமேல்வருஞ்சிறப்பினா
லீசனைப்போலுமாலிலங்கும்பாலியே. (௬௮)

கோவினையிரட்சைசெய்கொள்கையாற்றிகழ்
காவலருடன்கலந்திருக்குங்காட்சியான்
மேவியவகங்கரைந்திடச்செய்மேன்மையாற்
றேவியைப்போலுமேதிருந்தும்பாலியே. (௬௯)

மணிசொரிகோட்டினைமருவித்தாமலை
யணிபெறவேந்தலராலாழிமேவலாற்
பணைமுகக்கரிசுழல்பாலிமாநதி
குணமிகுமலர்மகள்கொழுனன்போலுமால். (௭0)

தாமரைபொருந்தியதகைமையாற்றிகழ்
நாமகண்மருவியநலத்திறற்சது
மாமுகனென்னவேவயங்கும்பாலிநீர்
பூமிசையம்பினின்விரைந்துபோதுமால். (௭௧)

குடிலமேபுரிந்திடுங்குறும்பர்நாட்டினைத்
தொடுகழன்மன்னவன்சூறையாடியே
விடுகிலான்சிறைசெயவவ்விமீடல்போற்
றடமதமாக்களைத்தள்ளிச்சேறுமால். (௭௨)

மலையெனமுறிபடுமரங்களென்னவான்
டுலைவுறுமரக்கர்தமுடலமென்னநீ
டலையெனமலைவெனவல்லதாமெனக்
கொலைபுரிபாந்தளைக்கொண்டுபோந்ததால். (௭௩)

மாற்றருந்துப்புறழ்மறுபுலத்தினர்
மேற்செலுங்காலையவ்வேந்தன்சேனைக
டோற்றுமவ்வொழுக்கினைத்துணைப்பமள்ளர்கள்
வீற்றுவீற்றுகவேகாப்புமேவினார். (௭௪)

ஆரிருளுருவமாயமைந்தமள்ளர்கண்
மூரியங்கரைதனைமொய்த்துநின்றராய்க்
காருறுமழைமுகிற்குமறியார்த்தென
வாருதிகிளர்ந்தெனவாய்விட்டார்த்தனர். (௭௫)

கலிப்பறைமுழக்கியேகாக்குமள்ளர்த
மொலிப்பிணைப்புட்குரலோதைநீக்குமான்
மலித்தெழுமதனையேவயங்குபாலியி
னலைக்கரமெறியணியமலைபோக்குமால். (௭௬)

மணிபுனைநெடுமுடிவையங்காவலர்
தணிவருபுதுப்புனற்சார்ந்தமாட்சிகேட்
டணிகிளர்பதாதிகளளவில்சூழ்தர
வினையகல்பாலியங்கரையிலெய்தியே. (௭௭)

வெள்ளிசெம்பொன்னிறால்விளங்கும்போதினைக்
கள்ளவிழ்த்தொளிருமென்கமலக்கையினா
லள்ளியேசொரிந்துபொன்னுடைசாத்தியே
கொள்ளைகொண்மகிழ்ச்சியிற்குலவியாடுவார். (௭௮)

சீர்நிறைவேதியர்தெங்கின்காய்தனை
யேர்பெறவிட்டுநின்றிலங்கமூழ்குவார்
பார்கெழும்வணிகர்கள்பூமிபாலக
ரார்தருநிதியளித்தாடல்செய்குவார். (௭௯)

சந்தனம்புழுகொடுசவாதுமான்மதஞ்
சிந்துரங்குங்குமஞ்சிறப்பவேந்தியே
வந்துபாலியினளித்தாடிமங்கையர்
சுந்தரநீர்தனைத்தொய்யில்செய்குவார். (௮0)

வேறு.

நிதிபலகொள்ளைகொண்டுநெறிப்புடனடக்குநீத்தஞ்
சுதைசெய்வாய்த்தலையைமுட்டிச்சுழித்துநின்றெழுந்துதூய
மதிநெடுங்கதிர்கள்போலவயங்குகால்பரந்துமள்ளர்க்
கதிசயம்விளைத்துச்சாலவம்பினின்விரைந்தவன்றே. (௮௧)

வேறு.

விறன்மிகநுரைகொடுவிரைந்தவெள்ளநீர்
மறமிகுந்திண்டிறன்மன்னராயினுஞ்
சிறுகிடிலொடுங்குவரெனத்தெளித்தல்போற்
பொறையொடுகோட்டகம்புகுந்துநின்றவே. (௮௨)

புள்ளினமிரைத்தெழுந்துபூணிபோந்திடும்
வெள்ளநீர்சிறைசெயுமோதைமேவிய
மள்ளர்தமார்ப்பொலிவயங்கித்தோன்றுமா
லெள்ளருங்கழனியின்பரப்பதெங்கணும். (௮௩)

தடமருப்பெருமையின்போத்தைச்சார்நுகந்
திடமுறப்பூட்டியிந்திரனையேத்தியே

மடலவிழ்தாமரைகிழியவால்வளை
யுடனெரிந்திரையவேயுழுதன்மேயினர். (அ௪)

வண்ணநீள்மயிர்முடிவணங்கக்கார்முகிற்
றிண்ணியவுருவினைச்செறிந்துபார்மிசை
நண்ணியதாலெனவேர்நடாத்துவ
ரெண்ணிறாருயிரமுழுநரீட்டமே. (அரு)

அடிப்பனநளினமேற்றுள்ளிவாளைக
ளொடிப்பனகரும்பினையுழும்பகட்டினங்
குடிப்பனகட்களைக்கூடிமள்ளர்கள்
வெடிப்பரவிப்பிவெண்ணிலவுகாலவே. (அசு)

ஊர்வனசங்கினமுழுதசேற்றினிற்
சார்வனமரகதப்பாம்புதண்கரைச்
சேர்வனமுத்தொடுசெம்பொன்மாமணி
யார்வனநாரைவெண்குருகொடன்னமே. (அஎ)

பொற்புறுபரம்பினைப்பூட்டிச்சேறுசெய்
நற்செறுவொப்பவேநடத்திக்கிரியின்
பற்பதமாகியபருவவான்முளை
மற்றருங்கரத்தினால்வித்திவாழ்த்துவார். (அஅ)

பதமிதுநன்றெனப்பறிப்பர்மள்ளர்கண்
முதிர்விலாக்கடைசியர்முளையிற்சூர்ந்தெடுத்
தெதிரெதிர்நெறித்திடநடுவரின்சொலா
லதிர்நெடுங்குரவையிட்டளிப்பரின்பமே. (அகூ)

சிறையினைநீங்கியேயில்லஞ்சென்றுவந்
துறைகுநர்தமக்குறும்பொலிவினோங்கியே
கறுகறுத்தெழுந்தனகழனிமீதினி
னறுநுதற்கடைசியர்நட்டநாறெலாம். (கூ0)

தளர்வுறமடநடையன்னஞ்சாலிகள்
புளகிதமுடனெறித்தோங்கப்பூங்கழை
வளைவுறவண்டினஞ்சுழலவார்குழ
லிளமுலைக்கடைசியர்குழாங்கொண்டெய்துவார். (கூக)

தெளிபுனற்கழனியிற்சென்றுழத்தியர்
களைகடிபொழுதுதங்கண்ணிற்றோற்றிய

நளினமுங்குவளையும்வளைக்கைநாட்டலும்
வெளிவராதொளித்தலின்மீள்வர்சூழ்குவார். (கூஉ)

வானவர்துதிக்கும்வேற்காட்டின்மன்னிய
வானசீர்ப்புகழின்வேளாளரந்தணர்
மேனலஞ்சிறந்தகைமீதிற்செய்திடுந்
தானநீர்பாய்தரத்தழைக்குஞ்சாலியே. (கூ௩)

நாறிருங்கட்புனனணிகுடித்துநின்
றேறியேகரைமிசையிருக்குமன்னமும்
வீறுயர்வரைப்பினில்விளங்குஞ்சங்கமுஞ்
சேறினர்தெரித்திடமயக்கஞ்செய்குமால். (கூச)

தழைத்திடுஞ்சாலியுந்தயங்குபூகமுங்
குழைத்தெழுந்திலகுபூங்கரும்புங்கூறுநா
விழைத்துணர்ந்தோர்பிரித்தெண்ணோடினும்
பிழைப்பதுகாட்டியேபிறங்குமெங்கணும். (கூரு)

பொருந்தொருதோட்டினிற்போந்துசாலிக
டிருந்தியசுருள்விரித்தெழுந்துசீருற
வரும்பரத்தையினிறுமாந்துகாய்த்திதந்
தருங்குலமகளிர்போற்றலைவணங்கின. (கூசு)

வேறு.

பாலொளிமுத்தஞ்செய்யபைங்கழைசொரியப்பைம்பொன்
போலொளிர்தூவியன்னம்பொருந்தியவேவல்கேட்பச்
சாலியின்கதிரின்கற்றைசாமரையிரட்டச்சங்கம்
வாலியவெற்றிகூறமருதம்வீற்றிருக்குமாதோ. (கூஎ)

வீசுமெய்ப்புகழ்களோங்கிவிளங்கிடுந்திருவேற்காட்டி
நேசமாய்வாசஞ்செய்யநினைந்திடுமவர்கட்கென்றுந்
தேசதுவிளைவதென்னத்திருந்தவேவிளைந்தன்ஞோர்கள்
பாசமதொடுங்குமாபோற்படிந்தனசாலியெல்லாம். (கூஅ)

வேறு.

பிறைத்தலைக்கருவியாற்பிறங்குசாலியைக்
குறைத்துவீழ்கதிர்நெடுங்குவியலார்ப்பொடு
செறுத்தலைநீக்கியேகளத்திற்சேர்த்துவர்
மருத்தவிர்மருதமென்மலையெழுந்தென. (கூகூ)

சினமிகுகருங்கடாத்துவைப்பச்செந்நெல்க
ளினமுறவைதனைப்பெருக்கியெண்ணிலாக்
கனைகுரற்பண்டியிற்கவினவேற்றியே
மனைதொறுஞ்செலுத்தொலிமலியுமெங்கணும். (க00)

அஞ்சிறைத்தும்பிகள்பாடவாய்பிழி
மஞ்சரியூற்றிடமணிப்பொன்னூஞ்சன்மேற்
செஞ்சொலாரேறிநின்றாடச்சீர்நலம்
விஞ்சுபைங்கிளிசொலவிளங்குஞ்சோலையே. (க0க)

வேறு.

மருவிரிதளிர்கடோங்குமாவின்வீழ்கனியும்வாய்ந்த
விரிசினைநாவனின்றும்வீழ்நறுங்கனியுமேலைக்
கிரணமாமணியுந்தூயகிளரொளிசொரியாநிற்குங்
கருநிறமணியுமென்னக்காட்டுமெவ்விடங்கடோறும். (க0உ)

பருவராற்பாயப்பூகப்பாளைவாய்ச்சொரிசெந்தேனு
நெரிகுலையரம்பைவாய்ந்தநீள்கனியுகுக்குந்தேனு
மரியினமிதிப்பப்போதினணிமுகையவிழுந்தேனும்
வருபுதுப்புனலினீத்தமானவேபரக்குமாதோ. (க0ங)

நவிலருமறைகளுன்குநலந்தருமங்கம்யாவு
விவிதவான்றருக்களாகிமேயவானளந்துமேலா
யவிரொளிவிரிக்குமிஞ்சியமைமந்தெனவலகிலாத
கவினெழிற்காட்டிநின்றுகலிதனைக்கடியுமன்றே. (க0ச)

வெற்றிசேர்திலங்காநின்றமேதகுமினையமூது
ருற்றகீழ்த்திசையேமேல்பாலுத்தரந்தென்பாலின்ன
சொற்றரும்பரப்பினெல்லைதோற்றும்யோசனையதாகி
மற்றருமதனினுப்பண்மறுகுகள்விளங்குமாதோ. (க0ரு)

முழவொலிமதம்பாய்கைமாமுழக்கொலிமூரித்திண்டேர்
பழகுமாவொலியாழ்மீட்டும்பண்ணொலிபவளவாயா
ரிழையொலிகரத்திற்கிள்ளையிசைப்பொலியெழுந்துவேலை
மழைமுகிலொலியுமஞ்சமறுகொலிமலியுமாதோ. (க0சு)

வேறு.

துய்யமாமணிமாடத்திற்சூழ்ந்தொளிர்
செய்யதோரணமாடுதல்தேவர்நா

டெய்துநெறினையில்லையிதற்கெனக்
கையினாற்றள்ளிக்காட்டுதல்போலுமால். (௧௦௭)

பொங்குமாமணிமாடப்பொருப்பின்மேற்
றங்குநீள்கொடிதாக்கலினாலன்றே
திங்கண்மேனிகறுத்திடமேற்செலான்
றுங்கசாளரத்துட்புகுஞ்சூட்சியே. (௧௦௮)

தாதுலாமலர்ச்சாளரவாய்தலிற்
சோதியிந்துஞ்சுடரும்வதிதரன்
மாதராடுமணித்துகிர்ப்பந்தினை
மீதியாமெனவைத்தல்விளங்குமால். (௧௦௯)

வேறு.

வலம்பெருகுமறையோதலோதுவித்தல்
வளர்வேள்விபுரிதல்பிறர்வளர்ப்பச்செய்தல்
நலம்பெறவேயீதலுடனேற்றலாறு
நயந்துசெய்பூசுரர்மனையினுள்கடோறு
மிலங்குநறுநெய்சொரிந்தகனலினின்று
மெழுந்தபுகைகொழுந்துவிட்டேயேறிவிண்ணிற்
றலங்கடோறும்பரந்துமணங்கமழுமென்றாற்
றகுதிவளரம்மறுகார்சாற்றவல்லார். (௧௧௦)

விழுமியநான்மறையோதல்வேட்டலீதன்
மிக்கபுவிதனைக்காத்தன்மேவுந்தண்டஞ்
செழுமைபெறச்செய்திடுதலிவையோரைந்துந்
திகழரசர்மனுநீதிசெலுத்தும்வீதி
தொழுதுமறுபுலத்தரசரொருபானிற்பத்
தொகையில்திறையளித்தவர்சூழ்ந்தொருபானிற்ப
வழுவைமதகரிபொருதியொருபானிற்ப
வோங்குபெருநலஞ்சிறப்பவொளிருமன்றே. (௧௧௧)

உரைபெறுநான்மறையோதல்வேள்வியாற்ற
லோங்குபுகழ்வேளாண்மையுவந்துசெய்தல்
பரவியவாணிகமுழவுநிரைகளோம்பற்
பகராயநிறைவணிகர்பயிலும்வீதி
மரகதமாணிக்கமொடுபதுமராகம்
வச்சிரங்கோமேதகமேவாலவாயம்
விரவியசெம்பவளமொடுதரளநீல
மிளிர்பசும்பொன்பலகலனும்விளங்குமாதோ. (௧௧௨)

இனமேவுமறையொழிபல்கலைகளோத
    வீதனுழவுடனிரைகளிலங்கவோம்பற்
றனவாணிகத்தினுடன்வழிபாடாறுந்
    தழைக்குமுயர்வேளாளர்தங்கள்வாய்மை
புனைமேலாங்கிலியார்கோத்திரத்திற்றோற்றிப்
    புனிதமுறுமூர்க்கர்மரபுள்ளோர்வீதி
யனமாரிமணிமாரிசொன்னமாரி
    யணிகலன்மாரியும்பெருகவளிக்குமன்றம். (௧௧௩)

உரம்பெறுமண்டிலமாக்களுழவித்துண்ணு
    மொளிர்வாகைபுனைவரெனுமுயர்வேளாளர்
திரம்பெறுநீள்வீதிதனிற்றெவ்வர்மீதிற்
    சென்றவர்கள்பொருபடையைச்செயித்துப்போந்த
நிரந்தெழுகேதனஞ்சவளம்பொறித்துவாய்ந்த
    நீடியதோரணம்பலவுநிறையுமல்லாற்
பரந்தபகைவயிற்பிரிவுபற்றியீட்டும்
    பலநிதியின்குவியல்களும்பரவுமாதோ. (௧௧௪)

முன்னமுறைத்தவரேவற்றொழில்கடன்னை
    முற்றுறவேசெய்துநின்றுமுந்நீர்சூழு
மன்னியவம்புவியினுழுதுண்போரென்னும்
    வளரிறுதிவேளாளர்வாழும்வீதி
செந்நெலின்வான்குவியன்மிதைக்குவியற்செய்ய
    தினைக்குவியற்றிலக்குவியற்சிவந்ததூய
சொன்னலுயர்குவியனமுற்கஞ்சூரமாடந்
    துவரைமுதற்பலகுவியற்சூழுந்தானே. (௧௧௫)

வெண்ணிலவுசொரிதரளமணிகடம்மான்
    மிளிர்பவளத்தாற்கலன்கள்விரவலான்முன்
னெண்ணரியதிரைதவழுமதனுற்றாய
    விலக்குமிவாசத்தினுலிரங்குமுந்நீர்க்
கண்ணகன்றகடல்பொருமாவணநீள்வீதி
    கருப்பூரங்கத்தூரிசெச்சைகலவைச்சேறாய்
நண்ணினர்தங்கால்கள்வழுவழுத்தேயோட
    நவமணிகளிடைபுறுத்தநலக்குமாதோ. (௧௧௬)

வேறு.

வருணமோர்நான்கினின்றும்வகைபெறப்பிரிந்தோர்வாழுந்
திருநெடுவீதிசாலத்திகழ்வுறும்வெவ்வேறாகத்

தருணகுங்குமஞ்சேர்கொங்கைதானெனமலைகடாங்கும்
பொருணசைமடவார்வீதிபோகபூமியினிற்பொங்கும். (௧௧௭)

விரிகதிர்மணிகள்வாரிவெண்டிரைகொழித்துவீழு
மருவிசூழ்பாலிநீத்தவமைதியுமடியாரங்கட்
புரிசிவபூசைதன்னிற்பொருந்தபிடேகஞ்செய்து
வருநறும்பாலும்வேறாய்வகுத்திடவரியதாமால். (௧௧௮)

பூத்தபங்கயங்களெங்கும்பொருவும்வெங்கயங்களெங்கு
நீத்தமாமுனிவரெங்குநிறைதவமுனிவரெங்குங்
கோத்தரும்பாலையெங்குங்குளிர்கரும்பாலையெங்கு
நாத்தரும்பாடலெங்குநலங்கொள்பொற்பாடலெங்கும். (௧௧௯)

இனமுறவளங்கள்சூழவிலங்குமித்தலத்தினுப்பண்
டனிலுயிர்க்கமுதமென்னத்தழைக்குநர்நடனஞ்செய்யுங்
கனகவாலயமக்கோயிற்கண்ணினிதுறைவோமென்றும்
புனைசுடரிலிங்கமாகிப்புகழ்பெறுமெசுர்வேதத்தின். (௧௨௦)

அமரர்தம்மதிபனென்றேயவ்வுருப்பகரநிற்கு
மிமையவர்பரவுஞ்சாந்தோக்கியத்திலித்தலத்தினுமந்
தமைநிகர்பரமாகாசத்தனிநகரென்றுந்தாவில்
விமலமார்பிரமபூதூரென்றுமேவிளம்பநிற்கும். (௧௨௧)

இலங்கதர்வணத்திற்சொற்கலோகமென்றிசைப்பநிற்கும்
வலன்செய்யாகமங்கடோறும்வளருபநிடத்தின்மீது
நலந்தரத்துதிப்பநிற்குமென்றரனவின்றானென்றே
துலங்குறநந்திவானோன்சொற்றனனதனாலம்மா. (௧௨௨)

கழுமல்செய்தரவேசாலக்கருத்தினாலுணர்ந்தோர்வைகல்
விழுமியவிதனையோதும்வித்தகர்விதியாற்கேட்டோ
ரெழுதினோர்போகந்துய்த்தேயிறையருட்பெறுவரென்று
முழுதுணர்ந்திலங்குஞ்சூதமுனிவரன்மொழிதல்செய்தான். (௧௨௩)

அவ்வியங்காணெஞ்சத்தவருறைதொண்டைநாட்டி
லொவ்வுதலகற்றிநின்றவுயர்வேதவனத்தினுண்மைச்
செவ்விகள்புகன்றாமிப்பாற்சிறந்திடுந்தேவர்கோமா
னெவ்வமதகற்றச்செய்யுமியனெறியியம்பலுற்றாம். (௧௨௪)

வேதவனச்சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள் - ௱௨௪.

# இந்திரச்சருக்கம்.

சூதமாமுனிவன்விளம்பிடவுணர்ந்ததுகளிலாவருந்தவர்துவன்றி
யோதருமுத்திநெறிதனைவிளங்கவுரைசெயப்பெற்றவுன்னடியேம்
வேதமாபுரியின்வைபவுஞ்சாலவிரித்திடவிழைந்தனமென்ன [ல்.
மூதுணர்தவத்தோனன்றெனமகிழ்ந்தேமுறைபெறமொழிதன்மேயினனு

மணியினுக்கொளிபோன்மன்னுபூசுரர்க்குவளரிருக்காதிமாமறைபோற்
கணிதர்கட்கெண்போலரசியறனக்குக்கண்ணெனுநியாயநூலதுபோ
னனுகியவிரதிக்குறுதிபோற்சொற்குநாத்திறம்பாமைபோலமைச்சர்க்
கணிகொணுண்மதிபோலெண்ணிலாவுயிர்க்குமறிவுடனொழுக்கமேபோல.

கசிவுறுமனத்தன்சுருதியாறங்கங்கலையொருபுராணமாகமமு
நிசிதமாயுணர்ந்தோனொருவனதிருதானெஞ்சகத்தழுத்தியநேசன்
சுசிகரநிறைந்தமுண்டகமதனிற்றாயநீறணிந்தவன்றுலங்கும்
குசிககோத்திரத்திலுதித்தவன்பிரமகுலமெலாம்விளங்கிடுங்குணத்தோன்

கற்றிறந்தோர்கள்கருத்தினூற்றுதிக்குங்கவுசிகனெனும்பெயருடையோன்
சொற்றனன்வேதபுரியுளோர்கேட்கத்தோமகல்கேள்வியீரதனை
முற்றுறநுமக்குமொழிகுவன்கேண்மின்முன்னவன்விழாவணிகாண்பான்
விற்றருநுதலின்மெல்லியன்மதலைமேம்படுகிளையுடன்போந்தான். (௪)

வேறு.

முளரியினுடனேசென்றமூதுணர்மறையோன்றன்னை
வளநிறைதிருவேற்காட்டில்வாழுமந்தணர்கணோக்கி
யளவிலாமுகமன்கூறியஞ்சலிபுரிந்தேயங்கம்
புளகிதம்பூப்பவன்னோன்பொன்னடிவணங்கிச்சொல்வார். (௫)

அருமறைப்பொருளாய்நின்றவையனீபோந்தவாற்று
லிருவினையீட்டமெல்லாமிரிந்தனவிணரின்வாய்ந்த
திருவடித்துகளாலெங்கள்செனனசாகரங்கடூர்ந்த
வருதினமதனிலிந்நாள்வாய்ந்திடுந்தினமதென்றார். (௬)

நீறணிமுன்னூன்மார்பர்நீண்மனைக்காட்டிச்சூழ்போ
யாறுசெல்வருத்தநீக்கியறுசுவையடிசினல்கி
நாறுசெஞ்சாந்தம்பூசிநானமுங்கோட்டிச்செய்ய
தேறலாரலங்கல்சூடிச்சிவிறியாற்பனிநீர்வீசி. (௭)

தண்ணிலாக்கற்றைகாலுந்தாளமாமணியின்கோவை
நுண்ணியகயிலார்வள்ளிநுடங்குபொற்புரிநூலார
மொண்ணிதிக்குவையுநல்கியுளமகிழ்வுற்றபின்னர்ப்
புண்ணியப்பொருளாய்நின்றாய்புணரிசூழ்புடவிமீதில். (அ)

திருக்கிளர்கமலப்புத்தேள்சிருட்டியாலமையாதேனு
முருக்கிளர்வாலிதாயவுளத்தினாலமைக்கவல்லோ
யிருக்கொடுசுருதியங்கமிலகியபுராணமென்றும்
விரித்துணர்கின்றாய்மேலைமெய்ப்பொருணிலையாராய்ந்தோய். (௯)

எனச்சிறுவைகலங்கணிருந்துரையாடியன்னோன்
மனக்குறிப்புணர்ந்துதூயோய்மறைகளாகமங்கண்மற்றைத்
தனிப்பெருங்கலைபுராணந்தன்னகத்துண்மையாகி
வினைப்பவந்தவிரவாய்த்தமெய்யவான்பொருள்கடன்னில். (௧0)

மட்டவிழ்கமலவாவிமன்னியகனாகடோறு
நெட்டிலைக்கதலிதேமாநெருங்கியதிருவேற்காட்டிற்
சிட்டர்கள்பரவுஞ்செல்வன்சிறப்பொடுதலத்தின்மேன்மை
யிட்டமாயடியேமுய்யவியம்பிடவேண்டுமென்றார். (௧௧)

என்றவருரைத்தலோடுமிளகியமனத்தனாகித்
தென்றிருநீற்றுமேனிச்சிவகலைவிளங்கநின்றீர்
வன்றிறற்கணங்கள்போன்றீர்வளங்கெழுவாய்மைதாங்கிக்
கன்றியகலிதோடங்கள்கடிந்தனிரென்றுபின்னர். (௧௨)

தெள்ளும்வேதியரைநோக்கிச்சிவராசதானிமீதில்
வெள்ளியங்கிரியினின்றுமேன்மையதெனவேபோந்தி
ருள்ளமுமடங்கநோற்றீரும்மனோர்போல்வார்யாரே
விள்ளரும்விரதம்பூண்டவேதியர்திலகர்மேலை. (௧௩)

அறநெறிநின்றீரும்மோடனுதினம்பயின்றுசால
மறுவகறலத்தினீனுள்வசித்திடவிரும்பிவந்தே
முறுதிகொளுமதுநெஞ்சத்துதித்திருந்தனவுமற்றாற்
பெறுவனவிதன்மேலுண்டோவெனுமுரைபேணிச்சொல்வான். (௧௪)

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்குழுவுமேனைச்
செந்திருமாலுமென்றாட்சேயிழைவாணியென்னுங்
கந்தவார்குழலினுடன்கணவனுங்கணித்துநீணாட்
சிந்தனைசெயினுங்காணாத்திறத்ததுதேர்ந்துபேண்மின். (௧௫)

கோலமார்காஞ்சிநின் றுங்குலவியவீசானத்தில்
வேலமாவிருக்கமாகிவேதநின் றவணில்யார்க்கு
மூலகாரணமாய்வாழுமூர்த்தியைவணங்குமாற்றான்
ஞாலம்வேற்காடுவேதநாயகனென் றுகூறும். (கரு)

கின்னரர்முனிவர்சித்தர்கருடர்கந்திருவர்போற்றப்
பொன்மலைதவத்தாற்பெற்றபுதுமதுக்கமழுங்கூந்தன்
மின்னிடைகருணைகூரவேழமாமுகத்துக்கோமான்
கன்னிவேற்குமரன்விண்ணோர்கைதொழக்கண்மூன் றுள்ளோன்.

உறைதருகின் றகோயின்முன்னையதோவாமாயைச்
சிறைவிடக்கருதுவோர்கள்சேர்ந்திடுதலமதாகு
நிறைமனதுடையூர்போகநேடினர்க்களித்துப்பின்னர்க்
கறைமிடற்றிறைவன்செய்யகழற்றுணையதனிற்சேர்க்கும். (கஅ)

வேறு.

ஆயிடைதெற்கிலைம்பொறியடக்கிய
மேயவாமனமெனத்தெளிந்துமேலைநாண்
மாயவன்றேடலும்வலிமைகாட்டிய
தூயவன்பதமெனவாழந்தோற்றியே. (க௯)

திரமுறும்வேதமெய்த்தீர்த்தமொன் றுள
துரைசெயற்கரியமான்மியமுடைத்ததிற்
றரணியிலுறைபவரன்றித்தாவில்சீ
ரிரணியவுலகினரெவருநீங்கலார். (உ0)

உருக்களிற்குறைந்தவரெனினுமொண்கதி
ரருக்கவாரந்தனின்மூழ்கிலக்கணந்
திருக்கிளர்கருப்புவிற்றிகழவேந்திய
மருக்கமழங்கணைமாரனாகுவார். (உக)

துதைமலர்த்தடத்ததினீராடிச்சூழ்சுட
ருதையகாலந்தனிலொருதருப்பண
மிதையமோடளித்திடினெண்ணில்பாதகஞ்
சிதைதரமுத்திவீடெளிதிற்சேர்க்குமால். (உஉ)

சுந்தரத்தீர்த்தநீர்துளியருந்தினோர்
சந்ததிவேண்டினுந்தருந்தனத்தின்மேற்
சிந்தனைசெய்வரேற்றிருந்தவேயளித்
திந்திரபோகமுமிலங்கநல்குமே. (உ௩)

பிரசமார்பொய்கையிற்பிதிர்தினந்தனில்
விரவமுத்தருப்பணங்கொடுப்பின்வெவ்விய
நிரயசாகரத்தினிற்கிடந்தநீள்குல
மிரசதக்கிரியினிலிருப்பக்கூட்டுமால். (௨௪)

வேறு.

ஒல்லையருமபாதகமுமொழிக்குமென்றே
யுரைபெறுமித்தடத்தினின்றுமொருகுரோசத்
தெல்லைவிடவடகிழக்கிலிமையோர்வேந்த
னியற்றுதலமுளததன்சீர்சைப்பக்கேண்மின்
மல்லனிறைந்திலகும்வராகத்தில்வேதா
வயங்குகற்பந்தனிலாறுமனுக்காலத்திற்
பல்கிரணமிமைக்குமணிமவுலிசூட்டும்
பாழியந்தோட்சிபியென்னும்பருதிவேலான். (௨௫)

மடல்பொதுளுங்கற்பகநாட்டரசனாகி
வானமரர்வரன்முறையின்வணங்கிப்போற்றப்
படவரவவல்குலுருப்பசியாழ்மீட்டப்
பானலங்கட்டிலோத்தமைமின்படிக்கமேந்தச்
சுடரிழைமேனகையடைக்காயுதவமென்றோட்
சோபனைசாமரையிரட்டச்சுரும்பார்கூந்த
லடலயில்வேற்றடங்கண்மினிரரம்பைதூய
வம்பொன்மணித்துகில்விசிறவமுதமென்சொல். (௨௬)

வெண்ணகைச்செந்துவரிதழ்வாய்மதிரவாணி
விரைகமழுநறும்பனிநீர்வியப்பவாங்கித்
தண்ணமுதந்துளிப்பனபோற்பிலிற்றப்பைம்பொற்
றகடுபடுமணிவிசிறிதளிர்க்கையேந்திப்
பண்ணமைத்தமழலைமொழிச்சுமுகிமெல்லப்
பசியசிறுதென்றல்வரப்பணிப்பவானத்
தொண்ணுதன்மங்கையர்கணிந்துவிசையம்பாட
வொளிமுறுவல்விபுலைபல்லாண்டுவந்துகூற. (௨௭)

பகைகடந்தசினவேலான்றடந்தோள்வெற்பிற்
பயில்குதலைச்சசிவிழிமான்பாய்ந்துதாவத்
தொகையிறந்தபுவியாளுமுடிசூழ்வேந்தர்
தொழுதிறைஞ்சவின்னரம்பின்றுழனியார்ப்ப
முகையவிழ்ந்தகற்பகப்பூநறியமாலை
மொய்த்தகுழலிலங்கமணிமுறுவன்மின்னத்

தகைநெடுங்கணரமகளிர்கனிந்துபாடத்
தக்கவருந்தவராசிதழைந்துகூற. (௨அ)

திருக்கிளருமிருநிதியுமணியுங்காம
தேனுவுங்கட்கடையேவற்செய்யத்தேவர்
மருத்துவர்கின்னரருரகர்விசுவதேவர்
வசுக்கணவக்கிரகமசுவனிதேவங்க
ருருத்திரரொண்பூவைநிறத்திருமாலான
வுபேந்திரன்வானுடுக்கணங்களொற்றர்சூதர்
குருத்திகழாதித்தர்கலைமதியத்தேவுங்
குவித்தகரத்துடனிறைஞ்சிக்குழீஇநிற்ப. (௨௯)

வடவைபடர்கடலுலகமினிதுவாழ
வயம்படுதிண்பொருப்பின்வரிச்சிறகர்யாவுஞ்
சுடருமிழுந்தடங்குலிசப்படையாற்போக்கித்
துணைமுலைவானவர்மகளிர்துயரமெய்த
விடர்புரியும்பிறையெயிற்றுக்கனற்கட்சீற்ற
விருணிறத்தவசுரர்கிளையிறப்பவீட்டித்
தடவுபடுமணிகுயிற்றுமரிமான்பீடந்
தனிலிருந்துமுறைபுரிந்துதழைக்குநாளில். (௩0)

வேறு.

தண்ணறவுசொரிகமலத்தடம்பணைசூழ்மருதநிலத்தலைவன்வேணி
லண்ணன்மலர்க்கணையுகளுறப்புலன்வழிபோயஞ்ஞானவளாறுநன்றென்
றெண்ணியதில்விழுந்துழக்குமெரிவிழிச்சூகரமாகியிருந்துமாயப்
பெண்ணெனும்வாளரவினதுபேழ்வாயிலிருந்தும்வெள்காப்பெற்றியம்மா.

இறப்பவுமேயழகிதெனநிலையாமைக்குணங்கண்மெய்யிலியல்பாய்த்தோன்ற
துறத்தல்புரிபவரொழுக்கமாடியுறும்பொருளதனிற்றுலங்கித்தோன்ற [த்
மறத்தல்புரிந்திருந்தனமிவ்வளவுமிதையெனும்வெருட்சிவயங்கித்தோன்ற
வறத்தைவிரும்பியகுறிப்புமனந்துடித்துத்துடித்தெவர்க்குமறியத்தோன்ற.

சுரும்புமுரல்கருங்கூந்தலரமகளிர்மதுரவிதழ்ச்சுவையுமேவெத்தோட்
கருங்கயற்கட்சசிநலனுங்கற்பகப்பூங்கொம்பர்நிதங்கவின்கொண்டேற்றுந்
திருந்துபசுந்தேனுமுயர்செம்பொனுலகரசாட்சிச்செழிப்புமன்றே
வருந்துயிலிதுறகனவாய்மதித்துநிலைதளரமிகமாழ்கினின்றான். (௩௩)

வேறு.

கலங்குமாயினுங்கண்ணினன்கருதினன்கணித
நலம்பகர்ந்தநூலாயுளின்னிலைமைசொன்னாரி

ணிலந்தனிற்றிகழ்மானிடர்நியமமார்வருடந்
துலங்கும்விண்ணவர்க்கோர்தினமாமெனத்துணிந்தான். (௩௪)

வன்றிறற்றிகழ்தேவர்கட்குரைத்திடுமாத
மொன்றினுக்குமுன்னோதியமானிடர்க்குற்ற
நின்றவச்சரமுப்பதுநீடியதேவர்க்
கன்றமைத்திடும்வருடமதொன்றினுக்கம்மா. (௩௫)

முறைகொள்பூமியின்மனிதர்தம்வருடமுன்னூறோ
டறுபதிற்றுவானமரர்களாண்டொன்றதனுக்
குறுமனித்தர்தம்வருடமாயிரமுடிவுறவே
நிறையமுன்னரினிகழுமாறுறுநின்றிடுமால். (௩௬)

அந்தம்வானவர்க்கியம்பியதேவநூறாகி
யிந்திரற்குநாளொன்றினுக்கித்தகுதேவம்
பந்தமுற்றவொன்றிருபதிற்றிரண்டின்மேற்பற்றி
வந்துதோற்றிடும்வானவர்மாதமோரெட்டும். (௩௭)

மருதநன்னிலத்திறையவன்மாதமொன்றினுக்கும்
பரவுதிவ்வியமோரெழுநூற்றொருபத்தா
மரியவிண்ணகர்க்கரசன்வாழ்வருடமொன்றதனுக்
குரியதிவ்வியமுறைப்பினெண்ணாயிரமுடனே. (௩௮)

ஐந்தடுத்திடுநூற்றுடனிருபதாமன்றேன்
சிந்தைநண்புறும்வருடநூற்றினுக்குயர்தேவம்
வந்தவெட்டெணுமிலக்கமோரைம்பதுமருவி
முந்துமோரிரண்டாயிரத்தொகையுடன்முற்றும். (௩௯)

ஈங்குரைத்திடுந்திவ்வியமானமதியல்புற்
றோங்கும்வச்சரநூறுமெய்யொழிவறநிறையிற்
றேங்கொள்கற்பகநாட்டுறைதேவவேந்தனுக்கு
நீங்குநாளெனநெடியவுமனத்தினினினைந்தான். (௪0)

உரைதிகழ்ந்தொளிர்கிருதமாயுகமுறுமனிதம்
பரவிடும்பதினேழிலக்கத்திருபதினா
யிரமடுத்தவெண்ணாயிரந்திவ்வியமெண்ணின்
விரவுமீரிரண்டாயிரமேலுமெண்ணூறும். (௪௧)

வளர்தயங்கியதிரேதமாயுகம்பெறுமனிதங்
களங்கநீத்தபன்னிரண்டிலக்கத்தொடுகவின

வளர்ந்துபோந்ததொண் ணூறொடாறுயிரமாகும்
விளங்குதேவரூவாயிரமேலறுநூறும். (சஉ)

துரிசகற்றிடுந்துவாபரயுகஞ்சொலின் மனித
மரியவெட்டெணுமிலக்கமோடறுபத்துநான்கின்
மருவவாயிரந்தொகைபெறுந்திவ்வியம்வகுப்பின்
பெருகுமோரிரண்டாயிரம்பின்னுநானூறும். (சங)

நாவினற்கலியுகஞ்சொலின்மனிதநாலிலக்க
மேவுமுப்பதினுயிரமன்றியேமேலும்
பாவுமோரிண்டாயிரந்திவ்வியம்பரவு
மோவிலாதவோராயிரத்துடனிருநூறும். (சச)

முந்துஞ்வாய்மைசேர்கிருதமாயுகந்தனின்முறைகொள்
சந்துதக்கவெண் ணூறதாந்தழைத்திடுந்தேவம்
வந்தமற்றையமூன்றினுநிரைநிறைவகையா
னந்தநின்றிடுநாறுசேராதுநான்கிரண்டே. (சரு)

ஞான்றுகூறியநான்குகமனிதநாற்பதிற்றின்
மூன்றிலக்கமோடிருபதினுயிரமுற்றுந்
தோன்றுநான்கினுஞ்சொலப்படுதிவ்வியத்தொகைதா
ஞன்றபன்னிரண்டாயிரமாமெனவாய்ந்தான். (சசு)

இம்மகாயுகந்தனினுகப்பிரளையமெய்துஞ்
செம்மைசேருமீதெழுபதிற்றொடுதரந்திரும்பின்
றம்மைநேரருமொருமனுக்காலமாந்தயங்கு
மம்மனுப்பதினான்குபேரிறந்திடிலம்மா. (சஎ)

அனத்தின்மேலவற்கொருபகலாகுமாயிடுங்காற்
றினப்பிரளையஞ்செறியுமன்னவன்றுயில்செய்வா
னெனைத்துமோர்கிலனுகியேயிறைதுயிலெல்லை
தனக்குமிம்மனுக்காலமேதகைவுபெற்றிடுமால். (சஅ)

உறங்கிநீள்பெருந்துயிறனையொழித்துநின்றெழுந்தே
யிறந்துபோயினமனுக்களையியல்பெறப்படைப்பான்
சிறந்தவோரிரண்டாயிரஞ்சதுருகந்திரும்பி
னிறங்கொணுன்மலர்க்கடவுளுக்கோர்தினநிறையும். (சகூ)

இனையநாளொருமுப்பதுகூடிவிப்பெரியோன்
றனதுமாதமாந்தகைபெறுந்தன்மைகடழைத்த

வனையமாதமீறொருவருடமவ்வருடம்
புனையுமைம்பதுபூருவபரார்த்தமாய்ப்பொருந்தும். (௫0)

மிக்கவைம்பஃதுத்தரபரார்த்தமாய்விளங்குந்
தக்கவோரிருபரார்த்தமுஞ்சார்ந்திடுங்காலத்
திக்கணத்துநீளண்டமுஞ்சிருட்டிசெய்பிரமன்
புக்கபூரணவயதெனப்புந்தியிலுணர்ந்தான். (௫௧)

பொற்புலாவியபொன்னிதட்டாமரைக்கிறைவன்
கற்பகாலமாமிருபரார்த்தங்கலந்திடுநாட்
பற்பணாமணிப்பாந்தண்மேற்பள்ளிகொண்டவனுக்
கெற்பராவியகற்பொழுதிரவுமித்தகைத்தாம். (௫௨)

ஏலுமித்தகுநாள்கண்முப்பதுசெறிந்தெய்தின்
மாலவற்கொருமாதமம்மாதமீராறு
கோலியுற்றிடில்வருடமொன்றுமதுகூடு
நாலிருபதிற்றைந்துநாரணற்குவாழ்நாளாம். (௫௩)

வேறு.

இத்தகையநெடுங்காலமிருந்தவரும்பயனிலதாயிறுதியெய்தச்
சித்தமயக்கியமாயாப்பிரவஞ்சச்செயலழகிதெனவேதேர்ந்து
வைத்ததகதியுறுஞ்சிறியமத்தெனவேசுழன்றுபிறிவறியானாகி
மொய்த்ததுயருறுமனத்தினெத்தனையோநினைத்ததவைமொழியப்பாற்றே.

சேடுலவுஞ்சதக்கிருதுதெண்டிரைசூழுலகியல்புதெரியிற்கால
நீடுமிறப்பெதிர்வுடனேநிகழ்வெனமுப்பெயர்தரித்துநின்றியாவும்
பீடுறவேபடைத்தளித்துப்பின்னொழிவித்ததினின்றும்பெயர்ந்தொன்று
மீடுபிறிதிலவாகவிருக்கின்றதெனவுமுளத்தெண்ணுகின்றான். (௫௫)

வேறு.

ஆதலினித்துடர்பனைத்துநீக்கியே
தீதொழிமுத்தியைச்சேர்க்குநன்னெறி
யாதிழைத்திடின்வருமென்றுநாடரு
மேதகுகுரவனைவினவவுன்னினான். (௫௬)

எண்ணியபுரந்தரனிருந்தபேரவை
விண்ணவர்யாவரும்விதிர்ப்புமீக்கொளத்
துண்ணெனவெழுந்துபொன்றேய்ந்தமந்திரத்
துண்ணிமீருவளகமுறைதன்மேயினான். (௫௭)

சிந்தனைபிறிதினிக்சேறலுற்றதால்
வந்தடிபணிந்திடும்வானநாடரைக்
கந்தடுகளிற்றினான் கண்ணினோக்கில
னந்தணரமைச்சனையழைமினென்றனன். (௫அ)

காவலனுரைத்தலுங்கடிதினொற்றர்போய்
மேவருஞ்சிறுகலாம்விளைக்குநாட்டிறை
தேவர்கள்குரவனின்சேறல்வேண்டுவா
னேவினன்றொழும்படியேமையென்றனர். (௫௯)

ஒற்றர்வாய்புதைத்துநின் றுரைப்பவோர்ந்துணர்
பொற்றிருப்பெயரினான்புளகம்பூத்திடத்
தெற்றெனவெழுந்துசேண்கடந்துசெய்யவேற்
கொற்றவன்கோயிலிற்குறுகினானரோ. (௬0)

ஆண்டளப்பவனிவணணுகினானென
மாண்டகும்வாயில்கள்வணங்கிப்போற்றலுங்
காண்டகும்விருப்பினாற்கவின்கொண்மாமணி
பூண்டபொற்பீடிகையிழிந்துபோந்தெதிர். (௬௧)

விழைதகுமுகமனும்வியந்துகூறியே
கழைசுளிகந்தடுகளிநல்யானையான்
பிழைமிகவீட்டினன்பெறுவகாண்கில
னிழையணிமார்பினையிரட்சியென்றனன். (௬௨)

குருதிபாய்நெடியவேற்குரிசில்கூறலு
மருவியவெழுபொழில்வளர்க்குமன்னவ
கருதிடினின்னுளக்காட்சிக்கெய்துற
வரியவான்பொருளுமுண்டாங்கொலென்றனன். (௬௩)

என்றலுஞ்சதமகனினையபோகமுந்
துன்றுநான்மறையவன்சூழ்ச்சிவாழ்க்கையும்
மன்றல்சேர்பசுந்துழாய்மார்பன்செல்வமற்
றொன்றினும்விழைவிலேனொளிகொள்புங்கவ. (௬௪)

உற்பவந்துடைத்திடவுன்னினேன்கலை
கற்பினங்குதவுமோகாயமுற்றனி
னிற்பினங்குதவுமோநெடியமாதவம்
பற்பலவிழைத்திடிற்பலித்தல்செய்குமோ. (௬௫)

துன்பொழிகிருச்சரஞ்சூழினேருமோ
தென்படுகிருதுகள்செய்யிற்கிட்டுமோ
வென்செயிற்கூடுமென்றிரங்கிக்கேட்டலு
மன்புறுதியானநெஞ்சமைத்துக்கூறுவான். (௬௬)

போகநீத்தருமகம்பொருந்தவாற்றினும்
பாகசாதனகதிபலித்தலின்றென
வாகுமாறருள்புரியமலவென்றவன்
சேகுதீர்திருவடிசிரத்திற்சூட்டினன். (௬௭)

வேறு.

முழவிணைதோளினான்றன்முகத்தெழுகுறிப்பும்யாக்கைக்
குழவணிநிலையாதென்னுங்கொள்கையுங்கோமானுள்ள
மழலுறுமெழுகாய்நின்றவமைதியுமமைச்சனோக்கிப்
பழவினைகளையவேந்தேபரம்பொருளொன்றுண்டாமால். (௬அ)

அப்பொருளனாதியாகவாணவமாயைகன்ம
முப்பெருமலமுநீங்கிமுத்தியினுருவமாகி
யிப்புவிமுதலாயண்டமெனைத்தையுமளித்தியார்க்கும்
வைப்புமாயொன்றாய்வேறாய்மன்னுமுன்றாயிருமுய்ய. (௬௯)

நவந்தருபேதமானநாடகநடித்துத்தேசார்
சிவம்பராசத்தியென்னுஞ்சிறப்புடைநாமம்வேய்ந்து
நிவந்தவெண்குணத்தவாகிநித்தமாய்வெறுப்பினோடு
முவந்திடும்விருப்புநீங்கியொழிவிலாவின்பமாகி. (௭0)

அளவிடற்கரிதாய்நின்றவதிசயமாகியென்றும்
வளநிறையனந்தானந்தமாகியேவயங்குமுத்த
ருளநிறைபொருளதாகியோங்கியவண்டம்யாவு
மிளகுறப்பிண்டமாக்குமெழின்மிகுதிறத்ததாகி. (௭௧)

தயங்கியபொருண்முன்னாதிசருக்கமீதினிற்பிதாவாய்
நயங்கிளர்மலர்மேல்வாழுநான்முகக்கடவுளனைப்
பயந்தனன்பின்னர்ச்செம்பொற்பன்னகாசனனையீன்றான்
வயங்கெழின்மவுலிசூட்டும்வானவனையும்படைத்தான். (௭௨)

முந்துபேரருளினாலேமுடிவிலாவின்பமானோன்
பைந்துழாயலங்கன்மார்பன்பசியபொன்னுலகின்வாழு
மிந்திரன்முதலாயுள்ளவெழில்கொள்விண்ணவர்கட்கெல்லாஞ்
சுந்தரச்சுருதியாவுந்துகளறவுரைத்தல்செய்தான். (௭௩)

விரிதருமொளியாய்நின்றோன்விளங்குமன்னவரினின்றுந்
திருமலருறையும்வேதாச்செஞ்செவிநிறையநீணாட்
சுருதியாறங்கந்தூயதுங்கமார்வித்தையாவுந்
தெரிதரவுபதேசங்கள்செய்தனன்றிகழும்வேலோய். (௭௪)

வரையறையகற்றிநின்றவான்பொருள்வளராநிற்குங்
கருணையாற்கற்பந்தோறுங்கமலநாண்மலர்மேல்வாழும்
பிரமனைப்படைத்துமீண்டும்பெருமறைப்பொருள்களெல்லா
முறைபெறவருளிச்செய்தேயொளியதாய்விளங்குமாதோ. (௭௫)

அன்னதாலிவர்கள்காலத்தகப்படுகின்றோர்காலந்
தன்னைநீத்திவர்கட்கெல்லாஞ்சற்குருவாகியார்க்கு
முன்னுமாய்முதலீறின்றிமுதிர்வுடனிளமைநீக்கி
யுன்மனாதீதமாகியுறைவனப்பொருளாய்நின்றோன். (௭௬)

ஏகனாயிருந்துமெல்லாமறிபவனவனேயென்றும்
மோகமார்பந்தநீக்குமுத்தனுமவனேவேத
சாகைகடுதியாநிற்குந்தனிப்பொருளவனேசாரும்
போகமும்வீடுநல்கும்புனிதனுமவனேபூமேல். (௭௭)

தேசுறுஞ்சிவசொரூபன்றெரிகிலனாகித்தீராப்
பாசமதகலமுத்திவிரும்பினன்பரிவுதேரின்
வீசுவான்பனிகண்மாலும்விசும்பினைச்சருமமாக
வாசையாற்சுருட்டற்கெண்ணுமறிவினன்றகைமையற்றால். (௭௮)

பகைப்புலனடக்கிமேன்மைபடைத்திடுந்தலத்திற்பூசை
தகச்செயின்வீடுநல்குஞ்சாருமாறிலேவேறென்றா
னகைப்பொலிவேலான்கேளாநன்றெனமகிழ்ந்துநாதா
முகைப்பொழிலுடுத்தபாரின்முத்திசேர்தலம்யாதென்றான். (௭௯)

வேறு.

நிருபனுங்குரைப்பக்கேட்டருள்பெரியோனெடியதண்பணைபலநிறைந்த
பொருவரும்வேதபுரிதனையடைந்துபுனிதமாம்வேததீர்த்தத்திற்
றரிசறத்தோய்ந்துவேதநாயகன்றன்றுணையடிதொழுதியென்றருளத்
திருகறமுளத்தோனினைத்தலும்புளகஞ்செனிப்பதற்கேதெவனென்றான்.

காமபூங்கமலக்காடெனவிளங்குங்கண்மலர்பொலிதரநின்ற
கோமகன்கூறவுணர்ந்திடுபுனிதன்கொற்றவேற்குரிசில்கேண்முன்ன
மேமமார்சரசிலிரவிதன்றினத்திலிலங்கிடமூழ்கினையதனாற்
றேமலரலங்கற்சசிநலனுகர்ந்துசெய்யபொன்னுலகமும்பரித்தாய். (௮௧)

சுரந்தியதனிற்றாயதாய்விளங்கித்தொடுகடலெனத்திகழ்வேதச்
சரசினிலொருகான்மூழ்கிடிற்பாகசாதனனாவர்மற்றிருகாற்
பரவியேபடிந்தோர்விரிஞ்சனாகுவர்முப்பாலதிற்றோய்ந்தவர்பகுவா
யரவணைத்துயின்றோனாகுவர்நாற்பாலாடினர்முத்தியையடைவார். (௮௨)

இன்னதானினக்குத்திருவருள்கிடைத்ததேலெனவியம்பலுமெழுந்து
பொன்னரிசுமந்தபீடிகைமீதிற்பொற்புறவைத்துநின்றவனை
மன்னவனாகிவாழ்தியென்றுரைத்துமலரடிவணங்கியேவிடைகொண்
டந்நிலமிழிந்துவேதமாபுரியையாண்டகையொல்லைவந்தடைந்தே. (௮௩)

விடுசுடர்பரப்புமணிபலகொழிக்கும்வேதவான்சரசெனுந்தேவர்
மடுவினிற்றோய்ந்துநித்தியகருமம்வரன்முறையாற்றிவானளக்கு
நெடியகோடரங்கள்பரந்தவெள்வேலிநீழல்வாழ்வேதநாயகன்ற
னடியிணையிறைஞ்சியீறிலாமொழியாளஞ்சிலம்பாற்றுதாள்வணங்கி. (௮௪)

அலையெறியமலையளக்கர்வாய்ப்பிறந்தவமுதெனக்கெழுமியவேதங்
சலிலநீராடிவேதநாயகற்குத்தக்கபூருவந்தனிற்சயில
மலைவுறவயங்குஞ்சினகரமிழைத்துவாவியுமமைத்துவாழிலிங்க
நிலைபெறநிருமித்தமைத்துநாண்மலராநெடும்பொழுதருச்சனைபுரிந்து.

அரியவெண்ணீறுமெய்யெலாமணிந்தேயழகியநெற்றியின்மீது
திரிகொள்புண்டரமுந்தரித்துருத்திரமந்திரசெபபாராயணனாகி
யிருதயகமலத்திருத்திநேடரியவிறைவனைமுறைமையினெண்ணிப்
பரிவுடனுருகியுருகியேகரைந்துபன்முறைதுதித்திடலுற்றான். (௮௬)

வேறு.

மாயவன்கமலச்செங்கண்வாழ்பதாம்புயனேபோற்றி
தீயமும்மலங்கடீர்ந்தோர்சிந்தைசெய்செல்வாபோற்றி
மேயதோர்பரமாகாயவெளியதாய்விளங்காநின்ற
நாயனேம்பாற்றிலோகநாயகாபோற்றிபோற்றி. (௮௭)

வானவர்தலைவாபோற்றிமால்விடையூர்திபோற்றி
போனகமாகநஞ்சையருந்தியபுனிதபோற்றி
தானவர்புரமூன்றட்டசதுரனேபோற்றிகாவில்
ஞானநாயகனேபோற்றிநாதனேபோற்றிபோற்றி. (௮௮

எண்ணருமுயிர்கட்கெல்லாமிரங்கியேயருளாநின்ற
வண்ணலேபோற்றியண்டமனைத்தையுங்கடந்தாய்போற்றி
தண்ணிலாமதியஞ்சூடுஞ்சைவநாயகனேபோற்றி
புண்ணியப்பொருளேபோற்றிபோற்றியென்றுரைக்கும்போதில்.

வேறு.

கருமுகிலூர்தியுறுதியையுவந்துகறைமிடற்றிறையவன்கலைமான்
றிரியிலைச்சூலமிலங்கிடுமழுவுஞ்செழுமலர்க்கரங்களிற்றாங்கி
வெருவறவபையவரதமுங்காட்டிமெல்லியலுடனெழுந்தருளிப்
பரிவினீசெய்தபூசனைமகிழ்தேம்பகருதிவிழைந்தனவென்றான். (௯0)

பையராவேணிப்பரஞ்சுடர்செக்கர்ப்பனிபடுகுமுதவாய்மலரத்
துய்யவானந்தப்பெருக்கிடைமூழ்கித்துடர்ந்துமாலயனறியாத
செய்யசேவடியாய்திருவடிபிழைத்தசிறியனேன்செடியுடலகற்றி
யுய்யவேயினையவிலிங்கமீதுறைந்தேயுலகடியேன்பெயருரைப்ப. (௯௧)

அருள்செய்யவேண்டுமெனப்பிராரத்துவமுனதுவிண்ணுளுதியதன்பின்
தெருளுறுகணங்கட்கதிபதியாகத்திகழ்வரமளித்தனந்திருந்து
நிருபநின்றனக்குக்கருமமொப்பதனினீங்குதற்கரியவீடதனைத்
தருகுவமினையவிலிங்கநின்றுமந்தழைக்கவென்றதனிடைச்சார்ந்தான்.

வேறு.

அண்ணலந்தோளினுமவ்வுழைநீங்கியாய்ந்த
புண்ணியன்கமலப்பாதம்பொருந்தியமனத்திற்றாங்கி
விண்ணவர்நறவமூற்றும்விரைமலர்மாரிபெய்யத்
தண்ணறாச்சொரிமந்தாரதருவளர்நாட்டைச்சார்ந்தான். (௯௩)

அரன்றிருவாக்காலோதுமமைதியாலகிலத்தோர்கள்
புரந்தரபுரமதென்றும்பொருந்துமப்பெயரான்வாய்த்து
வரந்தருமிலிங்கமென்றும்வழங்கினர்வாழ்த்தியின்ன
பரன்றனையிந்திரதீர்த்தம்படிந்துபூசனைசெய்தார்கள். (௯௪)

நீடியபோகந்துய்த்துநீணிதிக்கிறைவராகித்
தேடருமதலையென்னுஞ்செல்வசம்பத்தினோடு
கூடியேவழிகள்வாழக்குடிநெறியோம்பிப்பின்னர்
நாடுதற்கரியதாயகாதன்வாழ்கயிலைசேர்வார். (௯௫)

இலங்கியவேதநாதற்கெய்தியதென்கீழாதி
நலஞ்செயீசானமீறாய்நவிலுறுந்தமதுதிக்கிற்
றலங்கனற்கடவுள்கூற்றுச்சுடர்விடுமயில்வாளேந்து
முலங்கொடோணிருதிமுந்நீருவரியினரசனோடு. (௯௬)

வரமுறுபவனன்றாயவச்சிரவண்ணணென்போன்
பரவுமீசானனின்னோர்பகர்குளந்தொட்டுவெவ்வே

றாறைசெயாலையமுஞ்செய்தேயுரனுறுந்தமதுபேரா
லரனையங்கமைத்துச்சாலவருச்சனைவிதியாலாற்றி. (௯௭)

அளப்பருங்காலநோற்றேறையயனருளினாலே
துளக்ககன்றிலங்காநின்றசூழ்திசைக்கதிபரானு
ருளத்தொடித்தலத்திற்பூசையுஞற்றினரோங்குந்தீர்த்தம்
வளத்துடனுடல்செய்தோர்மன்னுவர்சிவலோகத்தில். (௯௮)

இம்முறையதனையோர்காலெழுதினரெழுதுவித்தோர்
செம்மலரணிந்துபோற்றிச்சிந்தையாற்பூசைசெய்வோர்
தம்மனமமையக்கேட்டோர்சாற்றினோர்தரணிமீதிற்
கொம்மைவெம்முலையார்ச்சேர்ந்துகொள்வர்மேற்கதிபின்னென்றான்.

வேறு.

எண்ணினர்தமக்குவீடெய்தக்கூட்டிய
விண்ணவர்க்கிறைதிறன்விளம்பிப்போந்தனன்
கண்ணுதலரன்றிருக்கண்ணிற்றோற்றிய
சண்முகக்கடவுடன்சரிதஞ்சாற்றுவாம். (௧௦௦)

இந்திரச்சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள்-௪௨௪.

# காங்கேயச்சருக்கம்.

ஆதிநான்மறைக்கவுசிகனனையரைநோக்கி
யோதுதற்கரும்பரஞ்சுடராகியேயொளிரும்
வேதநாயகன்பாங்கரின்மேவரிமேதைச்
சீதநீழலிற்றானமொன்றுளததன்றிருப்பேர். (௧)

ஆழிமால்வரையுடுத்திடுமவனியோரமரர்
பாழியம்புயப்பாகசாதனன்முதற்பலர்க்குஞ்
சூழுமின்னல்கடிலைத்திடத்தோற்றுசண்முகன்றன்
வாழிநாமமேவயங்கிடுமதனலம்வருப்பாம். (௨)

வேறு.

விண்படர்வானோர்போற்றும்வெள்ளியங்கிரியின்மீதிற்
கண்கவர்வனப்புவாய்ந்தகருமுகில்படிந்தகாட்சி
பண்பருள்கருணைநாதன்பால்கொள்வெண்ணீறுதாங்கித்
திண்கரியுரிவைபோர்த்துத்திருந்தவிற்றிருத்தல்போலும். (௩)

மேற்றிசைக்கங்கையென்னவிரைந்திழிகலுழிவெள்ளங்
காற்றொறும்பரந்துசூழ்ந்தகயிலையங்கிரியின்காட்சி
பாற்கடலதனிலென்றும்பரந்துமேலெழுந்துபொங்கித்
தோற்றியேயழுதுவாய்ந்துகண்லதருமமுதம்போலும். (௪)

அதிர்திரைசுருட்டுந்தெண்ணீராழிசூழ்புடவிமீதிற்
கதிரொளிபரப்பியொன்றாய்க்கயிலையங்கிரியின்காட்சி
யெதிரிலாவடியார்தங்களெழிற்சிவகணங்கள்யாவுஞ்
சதிர்பெறவுருவந்தாங்கித்தழைத்துமேலெழுதல்போலும் (௫)

கண்ணகன்கயிலைமீதிற்கருமுகிற்படிந்துபெய்து
வெண்ணிறந்தாங்கிநீங்கிவிண்ணிடைப்படர்ந்தகாட்சி
வண்மைசேர்தவத்தினோர்பால்வசித்திடர்களங்கமாற்றி
யெண்ணருமவர்தந்தன்மையெய்திமீண்டேகல்போலும். (௬)

கோழரையகின்மந்தாரங்குங்குமஞ்செருந்திகொன்றை
மாழைமாஊரங்கோங்கமாதவிவன்னிநீபங்
காழுறுசாதிசாந்தங்காஞ்சிமாவிலஞ்சிவஞ்சி
வாழுமஞ்சினைப்புன்னாகம்வடதருமன்னுமெங்கும். (௭)

அவிரொளிமணிகள்வாரியருவிகளொருபாலோடும்
விவிதநற்கனிகள்விண்டுவீழ்நறவொருபாலோடுங்
குவிமுகையவிழ்ந்தபோதின்குளைமதுவொருபாலோடுஞ்
செவியினைக்களிக்கப்பாடிச்சிறையளியொருபாலோடும். (௮)

மேக்குயர்கிரியிற்சாலவிளங்குசோபானமீது
நீக்கருநிமையோர்தங்கணீண்முடியொன்றோடொன்று
தாக்கலுமுதிர்ந்துவீழ்ந்ததண்கதிர்மணிகள்பின்னர்ப்
போக்கல்செய்பவர்கட்கின்னற்புளகிதமிரண்டுங்காட்டும். (௯)

வளத்தினுக்ககமதானவான்கிரியதனிலெங்கு
மளப்பருங்கற்பங்காணுமருந்தவரரியயோகம்
விளைத்துவல்வினையைநீக்கிமெய்யொருணர்வுதாங்கி
யுளத்தினிலிறைவன்பாதமுணர்ந்துணர்ந்துருகிநிற்பார். (௧0)

இனையபல்வளங்கள்சூழ்ந்தவிரசதக்கிரியின்மீதிற்
கனியிதழுமையாள்பாகன்கனல்விழியதனாற்போந்த
தனிநிகர்ப்பரியசெவ்வேள்சதங்கைகள்கறங்கவோடி
நனிவருமுமையன்னைநலங்கிளர்மடிமேலோர்கால். (௧௧)

வேறு.

வீற்றிருந்திருகுரவருமகிழ்வுறவிளையாட்
டாற்றியன்னவரவிரிழையாரமாலிகைக
ளேற்றமாகியபலபணியணிந்திடவெழுந்தே
தோற்றுசெங்கதிர்ப்பருதியங்கடவுளிற்றோன்றி. (௧௨)

பிற்றைவாசலிலினிதமாபிறையெனத்திகழு
மொற்றைவெண்மருப்பேந்தியவொளிர்புகர்முகத்த
வெற்றிவேழமாமுகத்தவன்விரைகமழ்கமலப்
பொற்றிருப்பதம்பணிந்தனன்பணிதலும்புகழ்ந்தே. (௧௩)

மாலைதாழ்புயக்குமரனைமார்புறத்தழுவி
யாலுமும்மதன்சிறுவிளையாட்டயர்ந்திருந்தா
னேனும்வேலையிலெண்ணரும்விண்ணவர்சூழ
மேலைவான்புவிவிதித்திடும்வேதன்மேவினனால். (௧௪)

சொரிந்தபன்மணிசுடர்செய்சோபானநன்னெறியாற்
பரிந்துமுன்னவன்பதமலர்பணிந்திடப்படர்ந்த
விரிஞ்சனவ்வுழைவீற்றிருந்தருளும்வேலவனைத்
தெரிந்திலாதவன்போலவேகடிதினிற்சென்று. (௧௫)

முதற்பெருந்தடையகத்துறைநந்திபான்முறைசெய்
ததற்பினன்னவனனுமதிபெற்றரவணிந்த
நுதற்கணையகனுவலுதற்கரியநுண்ணியபொற்
பதத்தில்வீழ்ந்துவீழ்ந்தெழுந்துபற்பலதுதிபகர்ந்தே. (௧௬)

அண்ணனேனுக்கமதளித்திடுமளவையுமயனே
லொண்ணமின்றியேயெழின்முகநோக்கிநின்றிறைஞ்சிப்
பெண்ணையோர்புறம்வைத்தவன்பேரருள்பெற்று
நண்ணும்வாசலாலிழிந்துவானவரொடுநடந்தான். (௧௭)

வேறு.

ஏனுறவிறைஞ்சிமீண்டேகும்வேலையு
நீணிலைக்கோபுரவாசணின்றிடு
மாணிழைமைந்தனைவணக்கஞ்செய்கிலன்
காணறிவின்மையாற்கஞ்சன்மேவினான். (௧௮)

பேடியவிரிஞ்சன்விணுடலின்மேம்படு
மாயியினெட்டுளையறிவிலாமையும்

பாவிசெய்திடுமவைமதிப்பும்பார்த்தொளிர்
மூவிருமுகத்தினன்முறுவல்செய்துபின். (௧௯)

சேறியவிரிஞ்சனைச்செயிர்த்துநோக்கியே
நீறெழவிழித்துநெட்டுயிர்த்துநேரிய
நாறிதழவிழ்த்திடுநளினக்கையினாற்
கூறினன்மீளெனக்கொற்றவேலினான். (௨௦)

வீரர்தம்வீரன்மீளெனப்பணித்தலுஞ்
சீரியசெங்கரங்குவித்துச்சென்னிமேற்
பாரைநின்மிதஞ்செயும்பகவன்மீண்டனன்
யாரைநீநின்றொழில்யாதுணர்ந்திடும். (௨௧)

கலையவைநீயுறைகடிகொள்ளையம்யா
துலைவுறவுரைசெயென்றுரப்பிக்கூறலு
மலைவளர்கொடிதருமைந்தவாழியா
னிலகியபிரமனென்றிசைப்பர்யாவரும். (௨௨)

உத்தமன்கருணையாலுலப்பில்சீறிய
முத்தொழிலதுதனின்முதன்மைபெற்றனன்
வித்தைகள்யாவையுமேவப்பெற்றனன்
சத்திபவுலகம்யான்சாருநீள்பதி. (௨௩)

இன்னறுத்துளித்திடுமிதழிதாங்கிய
மின்னவிர்சடாடவிவிமலன்மெய்ப்பதஞ்
சென்னிமேற்கொள்ளுவான்சேறலுற்றன
னன்னவன்றிருவருளளிப்பமீண்டனன். (௨௪)

கோலமார்சடக்கரக்குமரநாயக
சாலநின்றயவுமேதங்கிற்றுதலான்
சீலமாகியதுடற்செல்லவேண்டும்யான்
காலநீடியதெனமுறுவல்காட்டியே. (௨௫)

நின்னுரையழகிதுபிரமனீகொலோ
மன்னியவிறைவனல்வரம்பில்பல்கலை
தன்னையுமறிந்தனையாதனைழத்திடு
மன்னவித்தையின்முதலெழுத்தெனன்னதின். (௨௬)

நன்றிகொளருத்தமென்னவிலற்பாலநீ
யென்றனனென்னலுமேயிருகைகூப்பியே

நின்றிறையவனருளன்றிநேடினு
மொன்றுளதோவெனக்குணரும்வித்தைகள். (௨௭)

ஆதிமாவெழுத்துமவ்வெழுத்துணர்த்திடுந்
தீதறுபொருளும்யானறிகிலேன்றிகழ்
நாதனேகருணைசெய்நாள்கணீடின
போதுதல்வேண்டுமென்றிறைவன்புக்கனன். (௨௮)

அவனதுசெய்தலுமாதியக்கர
முவமையிலதன்பொருளுரைசெய்யாமனீ
நிவர்தருமிவ்வுழைநீங்குவாயெனிற்
சிவபதமறியவென்றுரைசெப்பினன். (௨௯)

புகன்மொழிகேட்டலும்போதனஞ்சியே
சகலமுமறிந்திடுஞ்சதுரசண்முக
விகலிலென்றனைக்குறித்திதுசொற்பாலதோ
வகறரச்செய்தியானறிந்தகூறுகேன். (௩0)

தாவருஞ்சகலநூறனக்குமுன்னெழுத்
தாவதோங்காரமதருத்தங்கூறிடி
னேவருந்துதிசெயவிலங்குநூல்களான்
மூவர்தம்பரமெனமுறையிற்றேர்ந்தனன். (௩௧)

உளங்கனிந்தருமகம்புரிந்தயோகர்தம்
வளர்ந்தழையிருதயகமலமத்தியிற்
றளர்ந்திடாவேதமெய்ச்சாரதீபமாய்
விளங்கிடுமறிவதற்கரியமேன்மையாய். (௩௨)

ஈங்கியானறிகின்றதென்னலுந்
தாங்கரும்வெகுளியங்கடலிற்றாழ்ந்தெழீஇத்
தீங்குரைசெய்திசைமுகனைப்பற்றியே
வாங்கருமருஞ்சிறைவைமினென்றனன். (௩௩)

விறலினன்கூறலும்விதியைப்பற்றியே
மறுவறநிமிர்குமாரவெற்பிடைச்
சிறுவனாதனிற்பெருநிகளஞ்சேர்த்தினர்
குறுகினாவ்வுழைக்கணங்கள்கோடியே. (௩௪)

கண்ணிணைசிவப்புறக்கனன்றுகூறிய
புண்ணியனம்பதத்திருந்தும்போதனுக்

கெண்ணறிவொழிதனன்றென்றுகூறியே
துண்ணெனக்கந்தமாகிரியிற்சூழ்ந்துபின். (௩௫)

குண்டிகைகரத்தினிலேந்திக்கோலமார்
தண்டமுந்தாங்கியேதனைமதித்திடு
முண்டகாசனனெனமூரிவேலினான்
பண்டைநாளுலகெலாம்படைத்துவைகினான். (௩௬)

புடைவருகணங்கண்மேற்புலம்பியாழ்திரைக்
கடலெனக்கிளர்ந்துதென்கயிலைவெற்பெனுந்
தடவரையதனிடைச்சார்ந்துதாக்குதற்
கடைவருமச்சமோடபயமென்றுபின். (௩௭)

வேறு.

விண்ணினிற்படராநின்றமேயவான்புறங்கண்மூன்றும்
நண்ணியநகையாற்காய்ந்தஞானநாயகனேபோலம்
பெண்ணொருபாகனேபோலம்பிறைவளர்சடிலனேபோல
மண்ணலேபோலமெந்தாயையனேபோலமோலம். (௩௮)

மேலைவானவர்கள்போற்றுமெய்ப்பரஞ்சுடரேபோல
மாலமுண்டவனேபோலமருமறைப்பொருளேபோலங்
காலனைப்புவியில்வீழக்காய்ந்தகண்ணுதலேபோலஞ்
சூலபாணியனேபோலந்தூயனேபோலமென்றார். (௩௯)

வேறு.

ஆயபோதார்காலையிலகிலமீன்றவ
ணாயகன்முதற்கடைநண்ணுநந்திதன்
றாயவஞ்செவிகளிற்சூழ்தலுற்றதா
லேயகாரணமிஃதென்கொலோவென. (௪௰)

பொருக்கெனவேறுமாமுகத்தன்போந்தனன்
மருக்கமழ்மலரடிவணங்கிப்போற்றினர்
வெருக்கொளுங்கருமம்யாதெனவிளம்பலுந்
திருத்தகநிகழ்ந்தவைமுழுதுஞ்செப்பினார். (௪௧)

வருகணமுறையிடும்வார்த்தைநன்குணர்ந்
தொருகணப்பொழுதிவணுறைமினென்றுபோ
யருகணைந்தமலனுக்கறிவித்தன்னவ
ரிருகணம்பெருமகிழ்வெய்தச்செய்தனன். (௪௨)

நலம்பெறச்செய்திடுநந்திவானவன்
கலங்கியகணங்களைக்கயிலைநாயக
னிலங்கியதிருவடியிறைஞ்சப்போக்கலு
நிலந்தனில்விழுந்தெழீஇநின்றுநேசனே. (௪௩)

வரன்முறைதுதித்துவாய்புதைத்துவந்துமீள்
பிரமனதியல்பெலாம்பிறழ்ந்திடாமனன்
குறைசெய்துமெய்நடுக்குற்றுநின்றன
ரரனருந்தவர்கள்பாலருட்கணோக்கியே. (௪௪)

முனிவிர்காண்மூலமாவெழுத்தின்முற்றுறு
மினியநுண்பொருட்குணாயாதுகூறினன்
பனிபடுமலரவன்பகருந்தோறுமே
தனியநான்மறையெமைக்குகனைச்சாற்றுமால். (௪௫)

வேறு.

தெளிவுறச்சுருதிபின்னுந்திகழ்பலகலைக்குந்திண்பா
ரளிபிரமனுக்குமன்னோனதிபற்குமதிபனுகி
வளர்பரப்பிரமமாகிமன்னவேயிருந்துசால
வொளிர்சிவன்பிரணவத்தினுருபியென்றெம்மையோதும். (௪௬)

இப்பரநெறியேயன்றியிலகுமெய்க்கியங்கடோறும்
தப்பிலாவாய்மைதங்கும்பிரணவசகிதமாகச்
சுப்பிரமணியவேன்றேசொல்லுமுக்காலுமற்று
லப்பதந்தனையுமென்னோவறிவழிந்தறியானுன். (௪௭)

மும்மையுமுணர்வீர்சாலமூத்துடறிரையாநின்ற
விம்முழுமகனையென்னோவிடுத்திடவிசைப்பதென்றே
தம்முகம்வெயர்த்தான்பின்னுந்தயவினுற்சயிலனீன்ற
செம்மலையழைத்துநோக்கிச்செய்யவேளுலகிற்சென்றே. (௪௮)

வேதனையுற்றுநின்றவிரிஞ்சன்மேலுருப்பம்வேண்டா
மாதரம்வைத்தேயன்னோனருஞ்சிறையகலச்செய்யென்
றோதியேவிடுவித்திப்பாலொல்லையிற்கல்வினீத்த
போதனைக்கொணர்தியென்றேபுண்ணியன்புகலலுற்றான். (௪௯)

துள்ளுமான்மறிசேர்முக்கட்டோன்றல்பால்விடைகொண்டன்னோன்
வெள்ளியங்கிரியினீங்கிவிஞ்சையர்மிடைக்குசூழ
வள்ளிலைநெடுவேற்கந்தனண்ணல்வாழுலகினண்ணிக்
கள்ளவிழ்பதுமம்போன்றகழற்றுணைவணங்கிச்சொல்வான். (௫௦)

அந்திவானிறத்தோன்செல்வவயன்சிறைவிடுவித்தாங்கு
வந்திடப்பணித்தான்யாரும்வணங்குபொற்பதத்தானென்னக்
கந்தவேணகைத்துச்சீறிக்கனற்றெறவிழித்துநோக்கச்
சிந்தையிலயிர்த்துவெள்ளிச்சிலம்பிடைச்சென்றுநின்றான். (௫௧)

ஏற்றுமாமுகத்தோனஞ்சியிரிதலுமிலங்குமூரிக்
காற்றறுமுழிஞைபோலக்கணமெலாங்கண்ணுறாது
விற்றுவீற்றாகியோடிவெள்ளியங்கிரியின்மீது
தோற்றினின்றென்றோடொன்றுசொல்லினவுய்ந்தோமென்றே. (௫௨)

நந்தியங்கடவுணாதனளினவாண்முகத்தைநோக்கி
யெந்தைநீகூறிற்றெல்லாமியம்பினனியம்புமுன்னர்ச்
செந்தழல்கதுவச்செவ்வேள்சினத்தனனதனாலஞ்சி
நொந்திவண்மீண்டேனென்னநுண்ணியன்முறுவல்செய்தே. (௫௩)

எழுந்தனனுமையாளோடுமிசைத்திடப்படகமொந்தை
தழங்குறத்தகுணிசின்னஞ்சல்லரிதிமிலையார்ப்பச்
செழுந்தவமுனிவர்போற்றத்திகழ்சிரோசனத்திற்பெய்த
வுழுந்துருளளவைப்போதிலுற்றனன்குகன்வாழ்வெற்பில். (௫௪)

மழவிடையேறும்வள்ளல்வருமுனமைந்தனேர்போய்த்
தொழுதடிவணங்கிநிற்பச்சுந்தரிகுறங்கிற்சேர்த்தித்
தழுவியேயுச்சிமோந்தாள்சங்கரனகைத்துநோக்கி
யழகியகலைகள்வல்லோயயன்சிறைவிடுத்தியென்றான். (௫௫)

அங்கணனனையகூறவாறுமாமுகத்தோனீங்கி
மங்குறோய்சிறைசெய்கூடம்வசித்திடுமலரோன்காலிற்
சங்கிலித்துடர்பைநீக்கிச்சன்னிதானத்திற்சேர்த்தித்
திங்கள்சேர்சடையான்முன்னர்ச்சிறுமணிகறங்கநின்றான். (௫௬)

குருதிபாய்வடிவேற்காளைகுறுகலுஞ்சிறுவமுன்னர்க்
கருதிபநமதுவார்த்தைகடந்தனையதனால்வேத
புரிதனையடைந்துநோற்றுப்பூசனைபுரிதியென்றே
யிருவரும்பிரமனைத்தவிரசதக்கிரியிற்போந்தார். (௫௭)

வேறு.

மாதினொருபாதியுறைநாதனருண்மைந்தன்
வேதபுரிகண்ணுறும்விருப்பமிகலாலோ
ரேதுசிறிதில்லவரினேகமுதலாகிப்
பாதகளினங்கள்வளர்பாருறநடந்தான். (௫௮)

கண்ணகல்பாற்றறைகடந்துயர்கடத்தி
னண்ணியபிராறுகளிழிந்துநவைகாயும்
வண்மைகொள்புலிச்சரணமாதவன்வசிக்கு
மெண்ணருநலத்தகுமிருக்கையதுகண்டான். (௫௯)

கண்டுமகிழ்வெய்திநிமிர்கண்டல்வளர்காவும்
வண்டுலவுசோலையுமிழிந்துமணநாறு
முண்டகநிறைந்தசுனையைந்தருகின்முற்றும்
புண்டரிகபாதனுறைகின்றவுழைபுக்கான். (௬0)

முந்துமலையத்திலெழுதென்றலிடைமோத
வந்தளிர்குழைத்துநிமிர்கொம்பின்மயிலாலுஞ்
சந்துநிறைகாவிலுறைதக்கமறைவல்லோ
னிந்துளபுயத்தனுறல்கண்டெதிரெழுந்தான். (௬௧)

வேறு.

நன்றுளமுனிவனேர்போய்நாதனின்பாதறுண்டு
ளின்றிவண்படிந்தவாற்றாலிவ்வுழைபுனிதமாயிற்
றென்றுமுற்பவங்கள்யாவுமொழிந்ததுன்கருணைநோக்கால்
வென்றிசேரிணையவைகண்மேம்படுவைகவென்றான். (௬௨)

திருமுனிகுமரவேளைத்திருந்துபீடிகையிற்சேர்த்தி
மருவுயிர்த்தலர்ந்தபோதால்வணங்கிநின்மலர்த்தாளேவ
விருமுதுகுரவர்நீங்கியிவ்வுழைத்தனியனாகி
வருகுவதெவன்கொலய்யாவென்றலுமாற்றஞ்சொல்வான். (௬௩)

ஆசகன்முனிவன்மேனாளுமதியதனாற்சாலத்
தேசுறைதிருவேற்காட்டிற்சென்றருந்தவங்கணோற்றே
யீசனைவணங்கவெண்ணியெழுந்தனனதனின்சீர்மை
பேசுறவிழைந்தேனென்னப்பெருந்தவன்மகிழ்ச்சிபூத்தே. (௬௪)

குன்றினுக்கிறைவனாணைகுரிசினின்னுளத்திற்றோயா
நின்றதுமுளதாங்கொல்லோநிகழ்வதுவிளையாட்டேனு
மொன்றுமோவடியேனதற்காயினுமுனதுநோக்காற்
றுன்னியசிறப்பினின்றுமறிந்தனசொல்வவென்றான். (௬௫)

சொற்றிடுமுனிவன்வேதவனத்துறைசுடரைநோக்கி
யிற்றெனக்கிளத்தலொண்ணாவெறுழுடையிலைகொள்வேலோய்
மற்றருமுலகம்யாவுமாபிரளயத்திலோர்கா
லுற்றொடுங்கினவேகன்மமுயிரிடத்தொடுங்குமாபோல். (௬௬)

அறைந்திடும்விருப்பினோடுமகற்றரும்வெறுப்புநீத்துச்
சிறந்திடவிருந்தானேனுஞ்சிவகோடிகளின்மீதி
னிறைந்திடுங்கைமாயில்லாநேசமதுடைமையாலே
யிறந்திடுமுலகந்தன்னையியற்றுவானிறைவனெண்ணி. (சுஎ)

அங்கமோராறடுத்தமறைதனையகிலம்வாழப்
பொங்குபானறவமூற்றும்போதொடுபலங்கண்மேவி
யெங்கணுமுவமைகாணாவிரத்தினவிலிங்கத்தானந்
தங்கியேநானாபேதத்தருக்களாயிருத்திரென்றான். (சுஅ)

வேறு.

கஞ்சனாலறிவருங்கடவுள்கூறலும்
விஞ்சுநான்மறைகளும்விருக்கரூபமா
யெஞ்சலில்கவடுவிட்டெழுந்துவிண்ணுலாய்
மஞ்சரியிடையிடைமலர்கடாங்கியே. (சுகூ)

திரமுறுமிரத்தினத்தேவன்பாங்கரிற்
பரவினவாதலாற்பாரின்யாவரு
முரகநாட்டுறைநருமும்பர்மேலரும்
வரமுறும்வேதமாவனமென்றோதுவார். (எ0)

வேறு.

அனையகானனத்தினின்றுமந்தளிர்குழைத்துநீடுஞ்
சினையுடைவெளிற்றுவேலின்றிகழ்தருமூலமீதி
னினைவருஞ்சோதிரூபலிங்கமாய்நிமலனின்றா
னினையதென்றளத்தலொண்ணாவிலங்கிலைநெடியவேலோய்.* (எக)

அத்தகுமிலிங்கநாதனழகியவாமந்தன்னி
லுத்தமலளிதையென்னுமொருகொடிதனைப்பரித்தான்
முத்தமார்முறுவலன்னாண்முதல்வனைத்தொழுதுபோற்றி
யெத்தொழிற்புரிவநாதாவென்றலுமிறைவன்கூறும். (எஉ)

நிரல்வளைகேண்மோவாய்ந்தநீயுபாதானம்யானே
பரவியநிமித்தமாற்றாற்பஞ்சகிர்த்தியங்கள்வாழப்
பிரமனேயாதியாயபிறங்கியகாரணேசர்த்
தருதிமுன்போலமற்றுந்தக்கவாறளித்தியென்றான். (எ௩)

பொன்னிமிர்சடிலக்கோமான்புகன்றிடும்பணியையன்னாள்
சென்னிமேற்கொண்டுகோதார்சேணுறழ்வலதுநோக்கா

லன்னவூர்தியைமுன்னீன்றாளந்திகழ்வாமந்தன்னாற்
பன்னகப்பாயன்மேவும்பகவனையுயிர்த்தாளன்றே. (௭௪)

உட்கிடவிளங்குமேனியுருத்திரன்றனைத்தீக்காலுங்
கட்பொறியதனினின்றுங்கருங்குழலளித்தாணீண்ட
முட்பொதிந்திலங்கும்பைந்தாண்முளரிவாய்முகத்தினின்றும்
பெட்புறுமும்மையோமம்பிறங்கழற்கடவுடன்னை. (௭௫)

சிதந்திகழ்ந்தொளிருங்காயத்திரிவளர்சந்தன்னைப்
பதம்பெறுஞ்சாமம்பின்னர்ப்பயிலுந்தந்திரம்பார்ப்பாரைக்
கதந்தெழும்வருடைதன்னைக்கழைவளர்பசியமென்றோ
ளிதந்தருங்கனிவாய்த்தீஞ்சொலேலவார்குழலி[illegible] (௭௬)

பச்சிளங்கழைத்தோணின்றும்பகர்பஞ்சதெசத்தோம
வச்சிரபாணிமன்னர்வருந்திறைநட்டுவமாஞ்சந்த
மச்சமில்பிரத்திராசாமழகியசாமந்தன்னைக்
கொச்சையையளித்தாள்வாய்ந்தகுலகிரியனையதோளாய். (௭௭)

அரம்பைவாய்குறங்கினின்றுமரும்பதினெழுபாற்றோமந்
திரம்பெறும்விசுவதேவர்தேவர்சாகதமாஞ்சந்தம்
வரங்கொள்வைரூபசாமமற்படும்வசியர்தம்மைச்
சுரந்துபாலளிக்கும்பீனச்சுரபியையளித்தாளம்மா. (௭௮)

முருகவிழ்மலர்த்தாணின்றுமுற்றுமோரிருபானொன்றை
மருவியதோமந்தூயவயிரரச்சாமந்தன்னை
யரிறவிர்ந்தெழுந்துவாய்ந்தவனுட்டுவச்சந்தசோடும்
பெருகுசூத்திரர்பாய்மாவைப்பிறைநுதலுயிர்த்தாளன்றே. (௭௯)

வெண்ணகைத்துவர்வாய்வேய்த்தோண்மெல்லியன்மயிர்க்கானின்று
மெண்ணருந்திரணம்பைங்கூழிலகியதருமம்பூத்தாள்
பண்ணையிலனந்தங்கோடிபடருயிர்த்தொழுதநல்கி
யண்ணல்பாலுறைந்தாள்வாய்ந்தவள்ளிலைநெடியவேலோய். (௮0)

பண்ணமாமகதியாழும்படருறமிழற்றுந்தீஞ்சொற்
பெண்ணரசுறைதலோடும்பெரும்படைவிழியாற்போந்தோர்
கண்வளர்ந்தெழுந்தாரென்னக்கவின்கொளுமறிவினோடுந்
துண்ணெனவெழுந்தாங்குற்றசோதியைத்தொழுதுபோற்றி. (௮௧)

கயல்விழியளித்தயாங்கள்கடமைகொள்பணிகடம்மை
யியல்பெறவருளவேண்டுமிலங்குநின்னிருதாடன்னை

மயலறநீங்காதேத்தவுரந்தாவேண்டுமென்னச்
செயறரும்பெரியோர்னீவிர்செப்பியதளித்தோமென்றான். (அஉ)

அனையவர்க்குதவும்வள்ளலயன்முதலோரைநோக்கி
நினைவருஞ்சுருதிமார்க்கநிலைகொண்டுத்தொழிலுநீவிர்
முனமொடுவேயிதெல்லாமுறைதடுமாற்றமின்றித்
துணைவுறப்புரிதிரென்னச்சுருதியாதையவென்றார். (அங)

அன்றவர்பகரஞாலமருட்பெறவிலிங்கமாகி
வென்றிசேர்சுருதிதம்மைவிளம்பினமவைகளான்கு
[illegible]ரலமாதிநாதமீறனயாவு
[illegible]யுங்கொல்லோவெனத்துதித்திரங்கிப்பின்னர். (அச)

[illegible]ளின்றுமவையவையறிவிற்கெட்டாத்
[illegible]டியேமுய்யுந்திறனருளெனவுநீவி
[illegible]ழந்தீர்கேண்மினென்றனமொனலுநீங்காப்
பவ்வமதகற்றுங்கோவேபணிகளாயணிதியென்ற. (அரு)

அன்னதேயாகவென்றேயவற்றினுக்குதவிப்பார்மேற்
றன்மபுராவங்கட்கெல்லாஞ்சாட்சியாயிருத்தீர்நும்மைப்
பொன்னிதழ்க்கமலமேலோன்புகரறத்தெரிவன்பின்னர்
முன்னரேயாதியாகமூவருமுணர்தல்செய்வார். (அசா)

உணர்ந்தவர்மகரமாசவுத்தரபக்கந்தன்னிற்
றணந்துவிட்டிடுவோராறுதிங்கண்மேற்றறிப்பர்சிங்கத்
திணங்குபூரணையிலிஞ்ஞான்றெதிர்சாத்திரங்கடன்னைக்
கணம்பயின்றோதிலுங்கணிப்பருநரகில்வீழ்வார். (அஎ)

தேசுறும்விதுவைச்சாலத்தெரிதரச்செய்தவாற்றா
லாசிலும்பெயரும்வேதமானவென்றவைகட்கின்ன
நேசமார்நியமங்கூறிநிகழ்சதுமுகத்தகேண்மோ
வாசநீர்ப்பழனஞ்சூழ்ந்தமாநிலவரைப்பின்மீதில். (அஅ)

எவ்வுறுவெடுத்தேதமேனுநீவிருமிலங்காநின்ற
வவ்வுருக்கிதமதாகவிருத்திரென்றளித்தேதயாமித்
திவ்வியதலத்திற்சோதிலிங்கமாய்ச்செறிந்துநின்றே
மொவ்வரும்வெள்வேலாகவுறைந்தனவவையும்பாராய். (அகூ)

முந்தொருயுகத்திற்போதன்முதலியவிமையோர்க்கெல்லா
மிந்தவாலயத்தின்றென்பாலெழில்பெறவிளங்காநின்ற

கந்தவானதியாம்பாலிக்கரைதனில்வேதந்தன்னை
யுந்திடவோதிவித்தோமாதலாலுயருந்தொன்னூல். (௩0)

வளருமத்தியாபகேசனென்றமைவகுத்துக்கூற
முளமகிழ்தரவேயன்னவுத்தமதீரந்தன்னி
லளவறுமுனிவர்தூய்நீராடியேயோதுமாற்றாற்
றெளிவுறத்தேவர்கண்டமடுவெனச்சிறந்ததோர்பேர். (௩௧)

திரிபுரந்தகித்தவேலைதொக்குறும்பரியதாக
மருவினம்புளினனுகிவனத்தினிற்சரித்தகால
மெரிவிழிமுடுவலாகவிணக்கினமிவண்முன்னுக
வருநடஞ்செய்தபோதிலஞ்சிலம்பாகப்பூண்டே

கனைத்தியல்வண்டுசூழுங்கவின்கொடாருகமாங்[redacted]
லனைத்துநாட்பலிசெய்போதிலமுருகோவணை[redacted]
மெனக்கனிந்துரைத்துப்பின்னரிவ்வுழையிருந்தோ[redacted]
னைப்பொழிலுடுத்தபாரினண்ணியமணிதற்கெல்[redacted] (௩௩)

தோற்றுவதறியோம்வேதச்சூட்சிசெய்பவர்கட்கோர்கா
னீற்றொளிமேனிகாட்டிநிற்குவநீவிர்பூசை
யாற்றுமினென்றுகூறியவ்விலிங்கத்தின்மீதின்
மாற்றலர்புரமூன்றட்டோன்மறைந்தனன்மறைதலோடும். (௩௪)

வேறு.

விரிஞ்சனாதியமூவருமேதினிவிளங்கத்
திருந்துமுத்தொழிலியற்றுவான்சேட்செலும்வேற்கிட்
பரிந்துமேவியவிலிங்கநாயகன்றனைப்பரவி
வருந்தியருச்சனைபுரிந்துலகளித்தனர்மன்னே. (௩௫)

பின்னிலங்கியகருங்குழற்போரமாமதர்க்கட்
பொன்னவாஞ்சுணங்கிளமுலைப்பொற்றொடித்தளிர்க்கை
யன்னமென்னடைமின்னிடையச்சரமடவார்
கன்னலின்சுவையுமையெழிற்கண்டுமோகிதராய். (௩௬)

தழைத்தமேற்சிவசாயுச்சியந்தனைப்பெறவிழைந்தே
குழைத்தெழுந்தவேற்காட்டினுட்குலவவோரிலிங்க
மிழைத்தருச்சனைபுரிந்துற்றிறைஞ்சியேயேந்தி
யுழைக்கண்மங்கையரவ்விலிங்கத்தினிலுறைந்தார். (௩௭)

அன்றுதொட்டுவாழஞ்சிறையளியினமுரலத்
துன்றெழிற்றிகழிலிங்கமேற்றுணரிதழவிழ்த்து

நின்றகற்பகப்பூமணநெடிதுமேகமழும்
வன்றிறற்பொலிமாருதியுடன்கலந்தெழுந்தே. (௯௮)

இலங்குசெவ்விசேரிந்திரன்விருத்திரனென்று
முலங்கொடோளினுன்றனையொழித்தனனெழித்தலுமே
வலன்செய்கீர்த்தியான்றனைப்பிடித்ததுபிரமகத்தி
கலங்கியன்னதுபோக்குவான்காசினிமீதில். (௯௯)

எண்ணில்பற்பலதலமெலாஞ்சஞ்சரித்தேகி
யண்ணல்வானறஞ்சூழும்வேற்காட்டினையடுத்தா
[illegible]ன்ணுமன்னமேசிற்சிலவாகவேவைகந்து
[illegible]ணிகடேர்ந்தோடிடுஞ்செயலால். (௧00)

[illegible]ழ்ச்சிசேருளத்தனுகி
[illegible]தீர்த்தநீர்ப்படிந்துயர்விண்ணவரிறைஞ்சுஞ்
[illegible]சாதிநாயகன்றனைமலர்த்தாளிணைதொழுதே
யேதநீக்கிடுமிலிங்கம்யாவதும்பணிந்தேத்தி. (௧0௧)

வணங்குமாயிரங்கண்ணினன்வசித்திடுமுனிவர்
கணங்களைத்தெரிசனஞ்செய்துநின்றனன்கண்டே
யிணங்குமிவ்வுழையெய்தியதென்கொலென்றிசைத்தா
ருணங்குமன்னவன்கேட்டலுமுறுவரைநோக்கி. (௧0௨)

வேறு.

தெரித்தருந்தவஞ்செய்யுந்திகழுமாமுனிவீர்போரில்
விருத்திராசுரனைவிழவிட்டினன்விட்டவோடும்
வருத்தியேபிரமகத்திவந்தெனைப்பிடித்தவாற்றாற்
றிருப்புவிமீதிலெங்குந்திரிந்தனன்றீர்தல்காணேன். (௧0௩)

போந்தனனென்றோர்வார்த்தைபுகன்றனன்புகலக்கேட்ட
தோந்தவிர்முனிவரிங்குச்சூழ்ந்துமாதவர்கண்முன்னுள்
வேந்தனேபூசைசெய்துமேற்கதிபெற்றாற்றால்
வாய்ந்தருச்சனைநீசெய்யில்வருத்தும்வல்வினைபோமென்றார். (௧0௪)

உரிமையாயறிந்தகோமானேங்குமிவ்விலிங்கமீதிற்
பரிமளசுகந்தவாடைபரவுவதென்கொலென்று
னரியமாதவர்கண்முன்னுளச்சரமடவார்பூசை
பரிவுடன்செய்துட்சார்ந்தாரதுமுதற்பயின்றதென்றார். (௧0௫)

பருத்துறைசெய்யக்கேட்டபாழியந்தோளானங்கு
வருத்தொருசிவலிங்கத்தைமதுமலரலங்கல்சாத்தி

மிருத்திடும்பிரமகத்திவிட்டகன்றோடக்கண்டே
யிகத்தொடுபரத்தும்வேண்டியிட்டசித்திகளும்பெற்றான். (௧௦௬)

தாங்கரும்புகழ்சேர்வேதசன்மனென்றுலகம்போற்று
மோங்கியமறையோன்முன்னாளுஞற்றருந்தவஞ்செய்தே
தேங்கமழ்கொன்றைசூடுஞ்செல்வனதருளினாலே
பூங்கழைமதனனேபோற்புத்திரன்றன்னைப்பெற்றான். (௧௦௭)

அன்னபுத்திரற்குச்சாதகன்மமேயாதியாக
மன்னியசடங்குசெய்தேமறைமுதலகிலவித்தை
தன்னையுமோதுவித்தான்சதுரனையன்னோன்பின்னர்
நன்னெறிதெரிந்தோர்தம்பானவிலரும்வாதஞ்செய்தான். (௧௦௮)

மிடைப்படாவித்தைதம்பான்மேவியசெருக்காற்போந்த
வுடற்றிறமுயிரின்செய்கையுடையவனுண்மையாய்ந்தோ
ரிடத்தினின்முறைமைநீக்கியெதிர்த்துமாறுமோற்று
லடற்கொளுமாயுளற்பமாயிடக்கடவதென்றார். (௧௦௯)

அழிவர்களனையகூறவருமறைமுனிவனீன்ற
சிறுவன்மேலஞ்சிமீண்டேசிந்தைநொந்திருந்தானோர்நா
ளறவிரிபுறவமீதினற்சமித்தொடிப்பான்வேண்டிக்
குறுகலுங்கொடியவேங்கைகோட்படுத்தியதன்னோனை. (௧௧௦)

வேறு.

நீடுகோவினைமெய்த்தவணின்றகோவலர்கள்
பாடுசெய்ததுகண்டுளம்பதைபதைத்திடவே
யோடிவந்துநின்புதல்வனைக்கதந்தெழுந்துழுவை
கோடல்செய்ததென்றுரைத்தனர்கோதில்வேதியன்முன். (௧௧௧)

அனையதீமொழிகேட்டலுமருமறைமுனிவ
னினைவயர்ந்துநெட்டுயிர்ப்பெறிந்தோடியநெடிய
வனமதூற்றுயிர்நீங்கிடக்கிடந்திடுமைந்தன்
றனையெடுத்தணைத்திரங்கியேசாலவுங்கலுழ்ந்தான். (௧௧௨)

அன்னபோதசரீரிவாக்கருமறைமுனிவன்
மன்னுமஞ்செவிகேட்டிடவளர்வடமறைக்கா
டென்னுமுத்தமதலத்தினிலியற்றியோரிலிங்கந்
தன்னையர்ச்சனைசெயிற்றருமெனவெழுந்ததுவால். (௧௧௩)

விண்ணினின்றெழும்வாக்கினையுணர்ந்துவேதியன்சீர்
நண்ணும்வேதமாபுரிதனையடைந்துநாடரிய

புண்ணியன்பதம்போற்றியேயவ்வுழைப்பொருந்த
வெண்ணிலன்புடனிலிங்கமொன்றியற்றியேயிறைஞ்சி. (௧௧௪)

தூயநெஞ்சினன்றனைவிழியருவிநீர்சொரிய
நேயமோடுநைந்துருகியேதுதித்தனுநிமலன்
பாயும்வெள்விடைமீதினிற்றோன்றிநீபயந்த
வாயுமைந்தனைப்பிடித்ததுவேங்கையதன்றே. (௧௧௫)

முனிவர்சாபமென்றுரைத்துமுதுணர்ந்தவன்போற்றத்
தனியிறந்திடுமதலையைவாவெனச்சாற்றி
யினிதிலிங்கமீதுறைந்தனனெய்தினன்சிறுவன்
புனிதவேதியன்புதல்வனோடிருக்கையிற்போந்தான். (௧௧௬)

என்றுவாய்மையபுலிச்சரண்மாதவனிலைகொள்
வென்றிவேலவன்கேட்டிடவிளம்பனும்வேந்த
னன்றுநன்றெனமுனிவனைவிடைகொடுநடந்தே
துன்றுசீர்புனைவேதமாபுரிதனைச்சூழ்போய். (௧௧௭)

படியின்மேதகுவேததீர்த்தத்தினிற்படிந்து
துடிகொள்சிற்றிடைவாலைநாயகன்றிருத்துணைத்தாட்
கடிகொள்போதினால்வணங்கியேயவ்வுழைக்கவினு
மடிகள்பாங்கரின்மரகதவிலிங்கமொன்றமைத்தே. (௧௧௮)

பொங்கிமீறுமாராமையாற்புணரிசூழ்புவியி
னெங்குளோர்களுந்துதித்துநின்றிறைஞ்சிடவிலதுஞ்
செங்கைபன்னிரண்டுடையவனளப்பருஞ்செல்வந்
தங்குகாந்தநாயகனெனவொருபெயர்தரித்து. (௧௧௯)

இயங்குபூருவதிசையின்மந்தாகினியென்றோர்
வியங்கொடீர்த்தமூழ்குதற்கமைத்திலிங்கமேற்பாலிற்
செயங்கொள்வேலினாற்கூபமுந்தொட்டதிற்றேவர்
வயங்கும்விஞ்சையர்க்கரியதெள்ளமுதினைவாரி. (௧௨௦)

நிரப்பியெம்பிரான்முடிதனிற்சொரிந்துநெஞ்சுருக
வருக்கநின்றொளிர்மேனியானருச்சனைபுரிந்து
சிரத்தினாற்பலமுறைபணிந்தெழுந்துசேணளந்த
பருப்பதம்பொலிதூணம்வாழ்கோயிலிற்பன்னாள். (௧௨௧)

வேறு.

திரியுங்கூர்வாயிருகோட்டுச்செய்யசெழியகலைமானி
னுரியுங்குழைத்தநெட்டிலையவொளிவாய்த்தெழுந்தவுயர்மவுஞ்சிப்

புரியுந்தரித்துச்செபவடமும்புனைந்துகரகங்கரத்தேந்தி
யரியயோகுபுரிந்திருந்தாறுமுகத்தோனளப்பருநாள். (௧௨௨)

ஐந்துபுலனின்வழியொழுகாரகத்தினுறையுமண்டர்பிரான்
கந்தனுஞற்றுந்தவத்தினிலைகண்டுகனிவாயுமையுடனே
யிந்துததும்புஞ்சடையவிழவிலிங்கமதினின்றெழுந்தருளி
வந்துகருணைமுகமலர்ந்தேதமைந்தன்முன்னர்நின்றனனால். (௧௨௩)

தண்ணாரமுதந்துளிக்குமின்சொற்றலைவியுமையுந்தற்பரன்றனையு
மெண்ணாறிரண்டுபுயமுடையானிருகைகுவித்துப்பணிதலுமே
பண்ணார்மொழியாளெடுத்தணைத்தாள்பரிந்துமடியின்மீதுவைத்துக்
கண்ணேயன்றுநமதாணைகடந்தபாவங்கடந்ததென்றான். (௧௨௪)

மகரக்குழையான்மறைபிரமமாதிபதியாம்வாக்கியத்தாற்
பகர்தற்கரியபிரணவமென்பரமேயாகும்பான்மைபெறப்
புகரற்றெழுந்தகிருதமுக்காற்புகழ்சேர்சுப்பிரமணியவென்றே
தகரிற்பொலிவோய்நினைமூலசகிதமாகச்சாற்றுவதால். (௧௨௫)

அயில்வாழ்நீயப்பிரணவத்தினருத்தமாமென்றடலசுர
ரெயின்மூன்றடர்த்தோன்கருணைபுரிந்திளவனினுதவமகிழ்ந்தோஞ்
செயலார்வரங்கள்கேட்டியெனசிரத்திற்குவித்தகரத்தினனாய்ப்
புயலார்மிடற்றோய்நினதாணைபோற்றுதிகழ்தல்பொருத்தருள. (௧௨௬)

வேண்டுமினையவிலிங்கமிதில்விரும்பியுறைந்துமேதினியிற்
றீண்டியருச்சித்தோர்தமக்குத்திகழும்போகம்பலவுதவி
நீண்டசடையோய்குணுங்கரெனுநிகமம்பயிலும்பூசுரரா
யீண்டேமுத்திபெறவேண்டுமெளியேனிழைத்ததடமிதனில். (௧௨௭)

ஆடினோர்கள்பிதிர்தினத்திலன்பிற்றருப்பணாதிதமை
நீடவளித்தோர்பிதிர்பிண்டநெறியிற்புரிந்தோர்பிதிர்க்களருள்
கூடக்கருணைசெயல்வேண்டுமெனலுங்கோமான்கொடுத்தருளி
நாடற்கரியமரகதத்தானலங்கொளிலிங்கநயந்துறைந்தான். (௧௨௮)

வேறு.

முக்கண்வானவனுறைதலுமுருகவேண்மகிழ்ந்தே
தக்ககந்தமாசயிலமீதுறைந்தனன்றகைவாய்த்
தொக்கமாணிடர்சோமவாரத்துடன்றுடங்கு
மிக்கவாரலிற்கந்ததீர்த்தந்தனைவிரும்பி. (௧௨௯)

படிந்துகாந்தநாயகன்பதம்பரவியேபணிந்தோர்
விடுஞ்சுடர்ப்பொலிகந்தவெற்புறைகுவர்வினைக

டடிர்துவேதமாபுரிதனில்வாழ்சதுமறையி
ரடுக்தொழிற்புரிபதகராயினுமெனவறைந்தே. (கரு०)

வள்ளிநாயகன்காதையைவகுத்தவர்வரைந்தோர்
தெள்ளிதாகவேகேட்டவர்கேட்டிடச்செய்தோ
ரெள்ளிடப்படும்பவத்தொகையெனைத்தையும்விட்டி
வெள்ளிவெற்பில்வாழ்குவரெனக்கவுசிகன்விரித்தான். (கருக)

வேறு.

அராவணைத்துயிலுமான்மருகனுழிசூழ்
தராதலமதிற்றவவேடந்தாங்கியே
நிராமயன்றனைப்பணிநியமங்கூறினும்
பராசரன்சரித்திரம்பகருவாமரோ. (கருஉ)

காங்கேயச் சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள் - ருருசு.

# பராசரச் சருக்கம்.

கண்ணகல்புவனம்போற்றுங்கவுசிகன்வதனநோக்கிப்
புண்ணியத்தலத்தின்மேன்மைபுரிந்தனைபுகழ்சேர்பாலி
யண்ணலந்தீரமேவுமரியதானங்கடத்த
முண்மைகளனைத்துஞ்சாலவுரைத்திடவிழைந்தேமென்றார். (க)

திருமறைக்காட்டில்வாழுஞ்செல்வவேதியர்கள்கூற
வருமறைதெரிந்தோனன்றென்றுசிகள்பகர்ந்துபார்மேற்
பொருவருமினையபாலிப்பூம்புனனோக்கினோர்க்கும்
வருபலன்வகுக்கொணுதவளங்கெழுமாட்சித்தாமால். (உ)

வேறு.

தேவர்சேனைபதியாகச்செய்யவேற்
காவலர்கணிமுடிபுனையுங்காலையின்
மேவியநந்தினியென்னுமேதகு
மாவதுபொழிந்தபாலனையவெற்பினில். (ரு)

தண்ணறும்பாலினைத்தயங்கும்பன்னிரண்
டண்ணலந்தோளினுறுசென்னிமே
லெண்ணருங்குடங்களாலெடுத்துப்பெய்தலு
நண்ணினபாலிமாநதியதாகவே. (சு)

வேறு.

நந்திமால்வரையினின்றுநலம்பெறவிலங்காநிற்கும்
வந்துவானவர்கள்போற்றும்வடநதிக்கிணையதாகு
மிந்தமாநிலத்தோர்க்கெலலாமீட்டியசெல்வம்போலுஞ்
சிந்தையாலொருபோதாடிற்சிவகதியெளிதிற்சேர்க்கும். (ரு)

இத்தகுநதிதீரத்திலெண்ணருமிலிங்கம்வாழு
முத்தமதானஞ்சொல்லவுளசிலவுரைப்பன்கேண்மி
னத்திரிபிருகுகுச்சனங்கிரன்வசிட்டனோடு
சித்திசேர்கவுதமன்காசிபனெனச்சிறந்தவேழ்வர். (சா)

இமையமால்வரையைநண்ணியிணையகன்றெழுந்தேயோங்குஞ்
சிமையமீதிருந்துவாய்ந்துசிந்தனைதெளிவுற்றோங்க
நமையறவிரும்பிநோற்றார்நான்மறைக்கிழவன்றோன்றி
தமைநிகர்வரியீர்நீவிர்தவஞ்செயலென்னையென்றான். (எ)

அறவர்களனையோன்கூறவடியிணைவணங்கிஞான
முறுமறிவில்லோர்வேதமோதுதற்குரியரல்லோர்
பிறவிவேராறுக்குமார்க்கம்பேசுறவிழைந்தேமென்னச்
சிறுநகைகாட்டிக்கேண்மின்றிகழுமாதவத்தீரென்றான். (அ)

வேறு.

என்றுணர்செய்மறைவிரிஞ்சனிருநிலத்திற்கிருமிசிதலெறும்பீறாகத்
துன்றும்வயக்கடகரியேமுதலாகத்தோற்றுமுயிர்த்தொழுதியாவும்
வென்றிபெரும்பெருந்திருவைமேவுதற்கேதிண்டுளதுவிளம்புங்காலை
யன்றிறைவன்விதித்தபசுதருமமுடனரியசிவதருமமாமே. (கூ)

இலகுமிருவகையறத்திற்பசுதருமம்விரதாதியாகமீட்ட
னிலவுபொழிற்குளந்தொடறண்ணீர்ப்பந்தல்கன்னிகையைநியமித்தீத
லலகிலுயிர்க்குணவளித்தன்முதலாகவனந்தமுளவதனின்மேலாம்
பலமுதவிநித்தியமாம்பதிதருமஞ்சிவதலத்திற்பரிவுகூர்ந்தே. (கo)

இறைத்துணையசெங்கல்கொண்டோரெள்விதையிற்பிரமாணமிலங்கும்வெ
துறப்பணிகள்செய்வமெனவுன்னுவதேமுதலாகவுமையோர்பாகன்[ஞ்சாந்
சிறப்பவினிதமர்ந்தருளுந்திருப்பணிகள்செய்தல்சிவார்ச்சனைகள்செய்த
லறத்தினெறிபிறழாமற்சிவலிங்கப்பிரதிட்டையமையச்செய்தல். (கக)

வேறு.

அருமறைமுனிவீர்கேண்மினதனினுமதிகங்கோடி
கருமிடற்றிறைவன்செய்யகஞ்சநாண்மலர்த்தாணெஞ்சின்

மருவியவடியார்தங்கண்மடப்பிரதிட்டையேற்றித்
திருவமுதளித்தன்னோர்கடிருவுளமகிழச்செய்தல். (௧௨)

நலத்தகுமதனிற்காடியந்தமாநாதன்வாழுந்
தலத்தினிலடியாராமேனோர்தமைப்பரிபாலனஞ்செய்
தலக்கணதனைத்தநீங்கவாடையாபரணநல்கல்
சொலப்படுமிவற்றினின்றுந்தூயதோர்சூழ்ச்சியுண்டால். (௧௩)

நீடும்வேற்காட்டின்மீதினிகழ்குலமெனையரேனு
மாடரவணிந்தோனன்பராகியவடியார்தம்மைத்
தேடியேவாசஞ்செய்யச்செயின்முனஞ்செப்புங்கூற்றிற்
கோடிகோடிகண்மேலாமாற்குவலயத்திணைவேறுண்டோ. (௧௪)

இன்னதான்முனிவீர்நீவிர்க்கெளிதினின்முத்திநல்கற்
கன்னதொன்றன்றியென்றனறிவினிலடங்காநின்ற
மன்னியதலங்களெல்லாம்வருந்தியுநாடிக்காணே
னுன்னரும்வேதம்வேறொன்றுரைப்பதுங்காணேனென்றான். (௧௫)

வேறு.

சீதமலர்க்கடவுளவைதெரிந்துரைப்பவிடைகொண்டுசேய்மைநீங்கி
வேதநறும்புனல்படிந்துவேற்காடன்றிருவடியைவிரும்பியேத்தித்
தாதுமலர்மணிகொழிக்குந்தண்புனல்சூழ்பாலிநதித்தடங்கொடீரத்
தோதரியநிகமேசனுறைந்தருளும்பொற்கோயிலோங்குஞ்சார்பில். (௧௬)

தளிமமிகுமறைமுனிவரெழுவர்களுமணிமன்றஞ்சமைத்துஞான
வொளியையமைத்தருச்சனைசெய்தொருவவிருவருக்கரியாயுயர்முக்கண்ண
வெளியவடியவர்கள்சிறுபச்சிலையேயிடினும்வரக்கெண்ணில்போக
மளிசெய்கருணைக்கடலேயெனப்பலவுந்துதித்திறைஞ்சுமனையவேலை. (௧௭)

பொருப்பரசியிடப்பாலிற்பொருந்தமழவிடையேற்றிற்போந்துநீவிர்
விருப்பமுறும்வரம்யாதுவிளம்புமெனப்பணிந்துவினைப்போகத்தெய்துங்
கருப்பமறச்செயல்வேண்டுங்கண்ணுதலேயிலிங்கமதிற்கலந்துநீங்கா
திருத்தல்புரிந்திடவேண்டுமியன்றபணிபூசனைசெய்தேத்தினோர்க்கும்.

பாசறைதீர்த்தெண்ணரியபலபோகமுதவியரும்பகைகளீக்கி
யாசில்கதிகொடுத்தருளவேண்டுமெனத்தந்தேமென்றளித்துநீவிர்
தேசுறும்வைவச்சுதனுமனுக்காலவனந்தரத்திற்றேவபூமி
நேசமுறவெழுவரெனநிலைமைபெறுமிருடிகளாய்நின்றுபின்னர். (௧௯)

மீளாதகதியுறைவீரெனவிளம்பியிலிங்கமதில்விண்ணோர்போற்றத்
தோளாதமணியனையான்மறைந்தனனத்தலங்கடனிற்றொண்டுசெய்தோர்

வாளாருந்திகழ்கயிலைமலையுறைவரிதன்பாங்கர்மன்னுநிற்கு
நாளாரின்மலரணிந்தோனலங்கொள்பராசரன்றனவில்லையென்றான். (உ0)

வேறு.

ஆனதோர்காலையன்னோரடியிணைவணங்கச்சொல்வான்
பானலார்தடங்கட்செவ்வாய்பாரதிபுணருந்தோளான்
மானசகுமரனைவசிட்டமாமுனிவன்றன்னை
வேனிலான்கணைதீர்காதிமெய்ச்சுதன்விசுவாமித்திரன். (உக)

எய்தரும்பகைகள்சாலவிழைத்துநொந்திருந்துதீராப்
பையுளமீதூர்வாடிப்பரிபவமடைந்துவெல்லுஞ்
செய்கையாய்ந்தெண்ணுங்காலைத்திருநகரயோத்திமன்னன்
வெய்யவன்குலத்துதித்தவிறற்சவுதாசனென்போன். (உஉ)

வரிசிலைகுனித்துக்கானின்மாவேட்டமாடுங்காலைத்
தெரிவிழியரக்கர்முன்வந்தெதிர்த்தனரிருவர்முன்னோன்
றிருகுவெஞ்சினக்கூர்வாளித்தீக்கிரையானான்பின்னோன்
வெருவிமானிடனாய்வேந்தன்விழைவுறவணங்கிநின்றான். (உங)

வணங்கினன்வஞ்சமோரான்வருந்தொழில்பகர்தியென்ன
விணங்குறவடிசில்செய்வனென்றியம்பினனியற்றென்
றணங்குவேலரசன்கூறவன்னவன்புரியுநாளிற்
கனங்கொடன்புலத்தோர்க்கூட்டுங்காலம்வந்துற்றதன்றே. (உச)

பன்னரும்பிதிர்தினத்திற்பரிந்தனம்வசிட்டற்கீந்தா
னன்னவனுகருமன்னத்தரக்கன்மானிடனூன்பெய்தா
னின்னவல்லடிசில்செய்தோனிழைத்ததீங்கென்னவோரான்
மன்னநீகிருதனாகிமுனிதருன்றுய்த்தியென்றான். (உரு)

குருதிகொப்பளிக்கும்வேலான்கொடுந்திறலரக்கனாகி
யருமுனிசாபந்தன்னாலரில்படுமடவிமீதிற்
றிரிதரகாதியீன்றசெம்மனங்குணர்ந்தன்னோனை
வருகுதிவசிட்டன்செய்யுமாதவஞ்சிதைத்தியென்றான். (உசு)

செந்தழற்கதுவச்சென்றுதேனுவுமேவல்கேட்கு
மந்தணன்றவத்திற்றோற்றுமருமறைச்சத்தியாதி
மைந்தர்நூற்றுவர்கடம்மைவலியதிண்கரத்தாற்பற்றி
யுந்திநின்றெடுத்தெடுத்தேயொழிவறவிழுங்கினானால். (உஎ)

வேறு.

செழுந்தவன்மைந்தரையரக்கன்சினத்துவிழுங்குதலுமுனிதிருந்தநோக்கி
கொழுந்தெரியிற்படுங்கிருமியெனத்துடித்தான்மனங்கலங்கிக்கொதியாநின்ற

கிழிந்ததுகிலழிந்தவெழில்தளர்ந்தநிலைபுரண்டவுடலிரத்தமாரி
பொழிந்தவிழியெழுந்ததுகிர்ச்செல்விதழுமதிமுகமும்புலர்ந்தவன்றே.

அருந்தவமேவியவசிட்டவரமுனிவன்மூர்ச்சைதெளிந்தரிபாய்கூந்தற்
கருந்தடங்கட்சதியுடனேகரைந்துகரைந்துரைத்துக்கவலைநீங்கான்
பெருஞ்சுவணவரைச்சிமையந்தனிலேறிக்குவலயத்திற்பெயர்ந்துவீழ்ந்தா
னிரும்புவனிச்செந்துவர்வாயிலவவிதழ்க்கொடிகரத்திலேந்திநின்றாள்.

கேழ்மைமிகுந்திருமுனிவன்கிளக்கலருஞ்செயல்புரிந்துங்கேதநீங்கான்
சூழ்மையெழிற்றணம்படைத்தோன்சொலினாயுண்மறைந்தனனோவந்தோவந்தோ
வாழ்மையுறும்விழிமயில்கள்வருந்துதுயரழிந்திலனோவந்தோவந்தோ
தாழ்மைபெறவொருகாலந்தனிநூற்றுவருமிறந்தாரந்தோவந்தோ. (௩0)

இனையவுரைபலகாலுமேக்குறுநெஞ்சினனாகியிசைத்தான்வாடித் [ர்
தனையறியாதுடல்பதைப்பத்தயங்குசிறுமகளிரெல்லாந்தரைமேல்வீழ்ந்தா
புனைமலர்ச்சத்தியின்மனைவிபொருமிவிம்மிக்கருவயிற்றிற்புடைத்துத்தேம்பி
நனைமதுவாயிருங்கூந்தற்புறத்தவிழப்புரண்டழுதுநலனைநீத்தாள். (௩௧)

கோதில்கொழுங்கனியனையாளழுங்குதலுமுனிதுயரங்கொண்டுபேதாய்
வாதைபடுந்துயர்தவிர்திகருப்பமிவருந்துமெனமறுகிநின்றான்
போதமிகுஞ்சிறுகுழவிபுடைத்தலினால்வருந்துவதுபுலம்பாநிற்கும் [டான்.
வேதமுணர்பெருந்தவத்தோனென்கொலதிசயமெனவேவியப்புகொண்

வேறு.

துய்யமாமுனிவன்முன்னர்த்துளபமார்மணித்திண்டோளா
னொய்யெனத்தோன்றிநின்றேயுன்சுதன்றவத்தில்வாய்த்தோன்
செய்தரோதனங்காணின்னற்றீருதிசிவன்பாலன்பா
யெய்துவனெமக்கொப்பானவெறுழ்கலந்திலங்கவென்றான். (௩௩)

நீலமால்வரைபொலங்கணின்றுணைவழங்கியாதி
மூலகாரணமாய்நின்றமுகுந்தனைகுதனுமன்னோன்
சாலவும்பவித்திரன்றாயசந்ததிவிருத்தியாக
ஞாலமேற்சவுதாசன்பேர்நைந்திடச்சிந்தைசெய்தான். (௩௪)

அத்தகுமமையந்தன்னுலருமறைப்பருதிமானச்
சத்திமாமுனிவனுமந்தமைழத்திடக்கரணிமீதிற்
புத்திரனுதித்தானன்னாட்பொழிந்தனவிரத்தமாரி
நித்தியமுணராத்தீயநிருதர்தன்னகரம்யாவும். (௩௫)

தகைநிறவசிட்டனாய்ந்துசாதகன்மாதிசால
வகைபெறச்செய்துநாமம்வளர்பராசரனென்றோதி

யகமகிழ்தராலுஞ்செல்வனடுபுலியேறுபோல
வுகலினர்க்கின்னல்காட்டியிருக்குணர்நாளிலோர்நாள். (௩௬)

தங்கியதுயரங்கூறுந்தாய்மடியிருந்துநோக்கி
மங்கலவினமாகிவருந்துவதென்கொலம்மா
விங்குனையெவற்றாலய்யனிறந்தனனென்றுகேட்பப்
பொங்குகண்கலுழிமெய்யிற்போர்த்திடப்புகலலுற்றாள். (௩௭)

சிறுவகேளுந்தைமுன்னாட்டீயவல்லரக்கன்வாயிற்
குறுகினன்யானீடுன்பக்கொள்கலமாகியிங்குப்
பிறிவுறநின்றேனேதோபெருந்தவநின்னைப்பெற்றே
னறிவுறினென்போற்பாவியாருளரென்றுசோர்ந்தாள். (௩௮)

இறுதியில்கற்புவாய்ந்தவிறந்தவர்மனையரேனை
யறிவர்பத்தினிகண்மேலாமருந்ததிமுதலாயுள்ளோர்
மறுகினரனையவேலைவளர்சராசரங்களெல்லாம்
வெறுவிதாய்நின்றுகண்ணீர்வீழ்த்துளமெலிந்தவன்றே. (௩௯)

அம்மனையினையகூறவனற்றெறவிழித்துநோக்கிக்
கொம்மெனவெழுந்துநின்றேகொண்டனன்விரதமாதோ
செம்மலர்ப்பகழிமாரற்சினத்தவன்றிருத்தாள்போற்றி
யிம்மியினளவைப்போதிலெரிக்குவன்புவியையென்றே. (௪௰)

என்றலுமுனிவனோக்கியிதம்புரியுலகந்தன்னைக்
குன்றநீவெகுண்டுகூறல்கொள்கையன்றரக்கன்கேள்க
ளொன்றொழியாமல்விட்டவுருத்திரக்குரிசிறன்னை
மன்றலங்கமலப்போதால்வணங்குதியெனலுஞ்சொல்வான். (௪௧)

அய்யனேயரற்குநேசமாகியப்பொழுதின்மீதே
துய்யதாம்பலனைநல்கத்தொல்லைநூற்பகராநின்ற
மெய்பெறுஞ்சிவதலத்தைவிளம்பிடவேண்டுமென்ன
வெய்தரும்பொருளுநல்குமிம்மையின்வேற்காடாமால். (௪௨)

அத்திருமூதூர்தன்னிலனந்தநாணிலவியாங்கண்
முத்தழலோம்பிநோற்றுமுன்னியகதிகள்பெற்றோருஞ்
சித்தர்கின்னரரியக்கர்தேவரேமுதலாயுள்ளோர்
நித்தமுமகலாரொன்றானெஞ்சகமுவந்துநின்றான். (௪௩)

வேறு.

கொந்தணவுநெடும்பொழில்சூழ்வேற்காட்டிற்சிறுமுனிவன்குலவிவாய்ந்
கந்தநதிப்புனல்படிந்துகாந்தநாயகன்றூயகமலப்பாதம் [தூ

வந்தனைசெய்ததன்வடபான்மன்றமிழைத்ததிலிங்கம்வரித்துப்பூசித்
தந்தமிலான்றனைமனத்திலமைத்தரியதுதிமலருமளிக்கலுற்றான். (சச)

வேறு.

ஆரணமுடிவாய்நின்றவையனைசரணந்தூய
பேருணர்வாகிநீடும்பிஞ்ஞகாசரணநால்வாய்
வாரணவுரிவைபோர்த்துமன்னுயிர்க்குயிராய்வாழும்
பூரணசரணமெந்தாய்புண்ணியசரணமாமால். (சரு)

செருக்கிடுமூலமென்னுஞ்செறியிருட்பிழம்பிற்பட்டு
நெருக்குறுமுயிர்கண்மூன்றுநீடியவுணர்வுவாய்த்தே
யிருட்டனையொழிப்பமாயையிசையுமாமாயைதன்னி
லுருக்கரணுதிநல்குமொருவனேசரணமென்றான். (சசா)

சுருதியினெறியாராய்ந்ததூயமாமுனிவனெஞ்ச
முருகியேதுதித்தலோடுமுத்தமன்கருணைகூர்ந்து
விரியொளிநிலவுகாலும்வெண்ணகையுமையாடன்னைப்
பிரிவிலனாகியன்னோன்பெருமகிழ்சிறப்பநின்றே. (சஎ)

வேறு.

வளர்மறையோய்நீவிழைந்தவரம்யாதுபகரெனலும்வணங்கியேத்தி
யிளமதிவாழ்திருச்சடிலவெனதுகுரவனையடர்த்தவெரிநேர்குஞ்சி
யளவினிருதனையினையதலமீதிற்சிதைப்பநெறியருள்செய்யென்னக்
குளமதினிற்கோவுடையானரக்கதயாகம்புரிந்துகோறியென்றான். (சஅ)

ஓங்காரத்துறையிறைவன்பின்னருநின்பூசனையையுவந்துகாண்பா
னீங்காமலெமதிடத்தினினையளித்தோன்றுணைவரொடுநிற்றல்பாராய்
தாங்காழிபுடைவளைந்ததரணியினின்றனமதிற்றங்கினோர்க
டங்காயபகையொழிப்பாரெனவிளம்பியிலிங்கமதிற்சேரலுற்றான். (சகூ)

தலையவிழுங்கொன்றையந்தார்தரித்தபிரான்கரந்தருளத்தக்கதூய
வளமருவும்பெருவேள்விவான்முறையிற்புரிந்தசுரர்வாழாநின்ற
கிளைமுழுதுஞ்சிதைத்துமனக்கேதமதுநீங்கியின்பங்கிளைத்தேயோங்க [ன்.
வளவில்பெருமகிழ்ச்சிபொங்கவம்முனிவன்றம்மிருக்கையதனைச்சார்ந்தா

வேறு.

செழுமைசேர்புவியின்மீதிற்சிவனுரைத்தருளுமாற்ற
லெழின்மிகுபராசரன்றன்னிலிங்கநாயகனையோர்காற்
றொழுதவர்குலமோரேழுந்துன்னலாவிளைக்குந்துன்ப
முழுவதுமொழிப்பரென்றேமுனிவரன்மொழிதல்செய்தான். (ருக)

மகவினையிழைத்துத்தூயவாலறிவுடையனாகி
யிகலினர்க்கடந்தசெஞ்சொலெழிற்பராசரன்றன்மேன்மைப்
புகழினைப்புகன்றாமிப்பாற்பூமகட்புணருந்தோளான்
றிகிரியொன்றுடைமைவேண்டிச்செய்திறஞ்செப்பலுற்றாம். (௫௨)

பாராசரச்சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள் - ௱௮.

# திருவாழிச்சருக்கம்.

மறைவளர்வனத்தின்மீதில்வாழுமந்தணரைநோக்கி
கறைவளர்களத்தோனன்பன்கவுசிகன்கழறலுற்றா
னிறைவளர்முன்னூன்மார்பீர்நெடுந்திரைகொழிக்கும்பாலித்
துறைவளர்சிறையின்மற்றோர்சூழ்தலஞ்சொல்வனென்றே. (௧)

பூருவகாலந்தன்னிற்பொங்கெரிகதுவுங்கண்ணன்
வாருதிபொருவுமார்பான்மலையுறழ்வலியதோளா
னேரணிமாயோன்றாயவிருபதாம்புயங்களேத்துந்
தாரணிவேந்துக்காகத்ததீசிமாமுனிவன்மீதில். (௨)

கருமுகினிறத்தோன்செய்யகலுழன்மேற்றோன்றிநின்று
பொருவினனந்தம்வாளிபொழிந்தனன்பொழிந்தபின்னர்.
நிருதர்பேருடலம்போழ்ந்துநிணம்பில்குநேமிதூண்டிப்
பருதிபன்னிருவரொன்றுப்படர்ந்தெனவிடுத்தான்மாதோ. (௩)

மற்படைவயிரக்காயனுதலான்வாய்மழுங்கி
விற்பொலிவகன்றுநிற்பவிலக்கரும்விதனந்தாங்கிப்
பொற்புளர்மார்பன்வெய்யபொருகளமதனைநீங்கி
யற்புறுமமரர்சூழவரியபாசறையைச்சார்ந்தே. (௪)

எல்லுடனிரவுதோறுமெழுந்திடுமானமென்னு
மல்லல்சூர்மனத்தனாகியழன்றுநொந்திருந்தான்பின்னர்ச்
செல்வவானவனைநோக்கித்திருந்தியதிகரிவாய்த்தற்
கொல்லையிலோருபாயமுளதஃதுரைப்பலென்றான். (௫)

ஆழிவாய்த்துயிலுமாயனவ்வுரைவழங்கிக்கேண்மின்
பாழிசேர்படைகடங்கள்பலாபலந்தெரியநின்ற
தாழிருஞ்சடையான்முன்னாட்சலந்தரன்றன்னைக்காய்வான்
வாழிசெங்கதிரோனன்னமன்னியமாட்சித்தாகி. (௬)

வளர்சுதரிசனமென்னும்வான்படையமைத்தானன்ன
துளதுயாமன்னோன்பாதமொளிமலர்களுற்போற்றிற்
றளரியவுமையாளோடுந்தயங்குறத்தோன்றிநிற்ப
னளவினம்மிச்சையாவும்மைவுறவளிப்பனன்றி. (எ)

அரியமாதவத்தீர்கேண்மின்னனலமூந்தியகோமான்றன்
கருணையான்மகவான்மேலாங்காரணைசுரர்களெல்லாம்
விரிதருபுவனமோடுவிழைந்தனபெற்றார்யானும்
வரிமுராதுளபமேவிவளரும்வைகுண்டம்பெற்றேன். (அ)

அத்தகுபெரியோனிச்சையன்றியேயணுவிறுக
வெத்திறத்தனவேயேனுமெம்மனோரியக்கங்கூடா
சித்திரல்கவனின்மேலாந்தெய்வமின்றவனன்னோக்கா
வித்தராதலத்தையானுமிரட்சைசெய்திருக்கின்றேனால். (கூ)

அன்னதாலகண்டாகாரமாகியகருணைநாதன்
றன்னையேயடைவேமன்னோன்றனக்கதிபிரியமாகி
யிந்நிலத்தவர்கட்கெல்லாமீட்டியதவங்களாகி
மன்னியவேற்காடென்றோர்வளங்கெழுமூதூருண்டால். (க0)

ஆரணமுழக்கநீங்காவத்திருமூதூர்தன்னின்
மாருததிசையின்மீதினமரர்நாட்டினர்கள்போற்ற
வேரணிபவளமேனியிறைவனென்றிலங்காநின்ற
காரணநாமம்பூண்டகருணைசேரிலிங்கம்வாழும். (கக)

என்றுரைத்தனையமூதூர்க்கெய்துவமெழுமினென்றே
மன்றலங்கமலஞ்சூழும்வடமறைக்காட்டில்வாழுந்
துன்றுமைநிறத்தவாயுத்தோன்றறன்றிசையின்மேவிப்
பன்றியாயிடந்துங்காணாப்பவளமால்வரையெம்மானை. (கஉ)

உரன்பெறுதவத்துவானோருயர்மறைமுனிவரோரா
யிரஞ்சதுயுகம்பூசிப்பவிலங்கியபெருமான்றன்னை
நிரந்தெழுகாதல்வெள்ளம்நெஞ்சகமடங்காதோங்கப்
புரந்தரன்முதலோர்போற்றும்பூண்வயின்வண்ணன்கண்டான். (கங)

வேறு.

இணையகன்றெழுந்தசைவநாயகனையேழுலகளந்தவனெடிய
துணைவிழிபொருந்தக்காண்டலுமம்மாசொலற்கருபரவசமாகி
மணமலிதுளபமாலிகைவயங்குமார்பிற்கண்மணிவடந்தரித்தே
யணிகிளர்ந்தொளிருநெற்றியின்மீதிலழகியதிருவெண்ணீறணிந்தான். (கச)

கரியமால்வரையின்வெண்முகில்படியுங்காட்சிபோற்கதிர்கொள்வெண்பொடியைப்
புரிமுன்னூற்றிகழுமெய்யெலாம்புனைந்துபொருவருகவசகுண்டலங்கள்
வெரிநுறவொல்கியசைந்திடவணிந்துவிண்ணவரேவல்செய்திருப்பத்
திரிசுடரியங்குமாழிதன்கரத்திற்சேர்ந்திடவிரும்புசிந்தையனாய். (௧௫)

ஓர்பதினொன்றென்றுரைபெறநின்றேயொளிருபசாரமதுடனே
சீர்நிறைந்திலங்குஞ்சிவசகத்திரமந்திரமதைத்திருந்தவுச்சரித்தே
யார்வளர்சடிலவண்ணறன்பதத்திலாயிரங்கமலமாமலரா
லேர்பெறுமனுவொன்றதற்கொருமலராயெடுத்தருச்சனைநிதம்புரிந்தான்.

அன்னதோர்காலையுண்மைசோதிப்பவம்புயமலரிலோர்மலரை
யுன்மனுநீதன்கரந்திடப்பணித்தானுரைத்திடுமனுவிலொன்றினுக்குப் [து
பொன்னிதழ்க்கமலம்பொருந்தவிலதாற்புன்கணுற்றிரங்கினன்றெளிந்
பின்னைதன்வலவனெடியகண்ணிடந்துபிறங்கிடவரிச்சனைபுரிந்தான். (௧௭)

வேறு.

தாறுபாய்கவுட்டந்தியைவகிர்ந்திடுஞ்சதுர
னாறுயோசனைப்பரப்பெலாநுங்கெரிகதுவ
வேறுசெங்கதிரிலங்குமண்டலத்தினின்றெழுந்தான்
வீறுவீறுசென்றோடினர்பணிபுரிவிண்ணோர். (௧௮)

ஆயகாலையிலஞ்சனவரையெனவமர்ந்த
மாயன்மாமறைவரம்பறியாமலர்த்தாளி
னேயமோடுவீழ்ந்தெழுந்துநெஞ்சுருகவேநின்று
தூயநாதனைவணங்கியேதுதித்திடலுற்றான். (௧௯).

வேறு.

துன்றுபிரமாதிகடன்றனைத்தெழுந்தசெருக்கனைத்துஞ்சொல்லாதோட
வன்றுவடவானிழற்கீழமர்ந்துபரமாணுவையுமசைத்தல்கூடா
தென்றுமுனதிச்சையன்றியெனக்காட்டியுயிரின்வைத்தவிரக்கந்தன்னாற்
றன்றிருநோக்கருண்மீண்டுந்தயவுசெய்தபரம்பொருளேசரணமாமால்.

போக்குவரவிரண்டுமில்லாப்பூரணகாரணசரணம்புவனமெல்லா
மாக்கியளித்தழித்தடைவிலொடுக்கியருள்புரிந்தகலாவமைதிதன்னை
நோக்கியொடுங்கியவுலகந்தனைமீளப்படைத்தனுக்கனுகர்ச்சியாவுந்
தாக்கியவற்றினுக்கியன்றதனுகரணமளிக்குமெந்தாய்சரணமாமால். (௨௧)

மேவரியபராஞானவொளியதனலிரவகன்றுவெயிலுநீங்கி
மூவகையபொழுதொழிந்துமோனவெளிவீற்றிருக்குமுத்தரான

வோவிலருந்தனுவவைகட்குயிர்யானென்றருள்செய்தவையுஞற்றுநின்ற
தாவில்பணியவைவதமையுந்தனதாக்கும்பெருமானேசரணமென்றான்.

வேறு.

குன்றமேந்தியன்றெழுமுகில்காத்திடுங்கோமா
னின்றநாதனையிம்முறைதுதித்தலுநிமல
னன்றுபூசனைபுரிந்தனைமகிழ்ந்தனநளின
மின்றுவேண்டியேநினதுகண்ணிடந்தனையிதனால். (உ௩)

காலையம்புயமலரெனநின்விழிகவினச்
சாலவேநினக்களித்தனந்தரணியின்மீதி
லேலுமித்தினமுதனினக்கிலங்கியபெயரும்
மேலதாகியபதுமலோசனனெனவிளங்கும். (உ௪)

வினையகற்றிடுமிவ்விடம்விண்டுதன்புரமென்
றெனையருந்துதித்தேத்திடக்கடவதென்றிசைத்துத்
தினகரச்சுடர்செறிசுதரிசனமாய்த்திகழு
மனையவாழியொன்றுளத்துமளிக்குவமென்றே. (உ௫)

அரக்கனின்னுயிர்குடித்தெழுந்தவாழியைத்
திருப்பொலிமார்பினன்செங்கையேந்திடப்
பரித்தெடுத்தளித்தரும்பகைகளியாவது
முருக்குவையென்றொருமொழியுங்கூறினான். (உ௬)

திரைக்கருங்கடலெனச்செவ்விவாய்ந்தநீ
யுரைத்திடுஞ்சகத்திரநாமமோதியே
தரைக்குளித்தினமுதற்றயங்கப்பூசைசெய்
விருப்பினர்வினையைவீழ்த்துவமென்றோதினான். (உ௭)

குன்றவில்லேந்தினைனையகூறலுங்
கன்றினல்விளவெறிகமலைநாயக
னின்றியான்பூசைசெய்யிலிங்கநாதனைத்
துன்றுமெய்யன்பினாற்றுதித்தயாவரும். (உ௮)

திருத்தகுமுனிவர்கள்சித்தர்விஞ்சைய
ரரிச்சனைபுரிதலமனைத்தும்பூசனை
பரித்திடும்பலன்பெறப்பணிப்பவேண்டுமென்
றுரைத்தனனளித்தமென்றுரைவழங்கினான். (உ௯)

வழங்கியகாரணன்பவளமால்வரை
தழைந்தெனத்திகழ்தருசகளமீதினி

ளெழுந்தருளினர் படையேந்திமாயவன்
செழுந்தவர்போற்றிடச்சேறலுற்றனன். (௩0)

மற்பொலிதடம்புயமாயன்கண்ணிடந்
தற்சனைபுரிதலமீதிலனந்தரா
ஞூற்பவத்தொடர்பினையொழிக்கவெண்ணினோர்
பொற்புடனோர்தினம்வசித்தல்போதுமால். (௩௧)

இத்தலமதனிடைமருவியெண்ணரு
முத்தமவிரதமுமுஞூற்றும்வாய்மையான்
முத்தர்கணீவிரேயென்றுமூதுணர்
சித்திசேர்கவுசிகன்றெரிந்துசெப்பினான். (௩௨)

தெறுகதிராழியின்செவ்விவாய்மையை
யறிஞர்கள்செவியிணையாரச்செய்தன
மறுவகல்வளைக்கடற்பருகிமன்னிய
குறுமுனியெனுந்தவன்கொள்கைகூறுவாம். (௩௩)

திருவாழிச்சருக்கமுற்றும்.

ஆகச் செய்யுள் - ௬௪௧.

---

# அகத்தியச்சருக்கம்.

சுந்தரமாமணிகுயிற்றுஞ்சுடர்மகுடமுனிவரர்கள்சூழ்ந்துபோற்று
மெந்தைநிகமேசுரனுக்கீசானத்தொருதானமிலங்காநிற்கு
முந்துமறைபயில்வாய்மைமொழியுடையீரதன்பெருமைமொழிவலென்றே
யந்தணர்தங்குலதிலகன்கவுசிகனான்மறைமுனிவனறைதலுற்றான். (௧)

கஞ்சமலரயனுதவுநாரதமாமுனிவனொருகாலைவேலை
நஞ்சணியுமணிமிடற்றெம்பெருமான்றன்மணங்காண்பானளிர்நீருண்டு
மஞ்சுலவும்வான்மீதிற்படர்ந்தனன்வாழ்விந்தைதவவடிவந்தாங்கி
யஞ்சலிசெய்தருக்கியமுமளித்தளித்தலுமகிழ்ந்தேயருள்செய்கின்றான்.

அதிதிதமக்குபகரிக்குநின்றனக்குமவமதிப்பதந்தோவாழ
திதிசுதராலியற்றுவதொன்றுளததனைநினைதோறுந்தீவாய்ப்பெய்த
கொதிமெழுக்கெனவிதையமுருகுதென்றான்கிரியுணர்ந்துகோதில்கேள்வி
மதிகொண்முனிவரிற்சிறந்தமறைபயினாரதன்கமலவதனம்நோக்கி. (௩)

அந்தரத்திற்றிரிகின்றவதிதிசுதரலமதிக்கலானெனன்றே
வெந்தனையெத்தேவதைகளிகழ்ந்தனரதனையவிதமிதற்குநானே
முந்துபரிகாரமதுமுடிப்பனளித்தருள்செயெனமொழிந்துமீண்டும்
வந்தனைசெய்தம்முனிவன்வனசமலர்த்திருவடியைவாழ்த்திற்றன்றே. (௪)

இறைஞ்சுதலுமுனிபுகல்வானிதியாசிபலகலைகளனைத்தினுலு
மறந்தவிருமுறுவர்திருவாய்மைமொழியாலுமம்மாவளருமேரு
நிறைந்தபுகழ்மிகுநீபுநிகரெனவேபகர்ந்திருந்துநின்னைநீக்கிச் [ற்றே.
சிறந்ததுபோற்பொன்வரைக்குச்செய்திடுமன்னடத்தைதனைச்செப்பற்பா

ஆயினுநீயச்செயற்குப்பரிகாரஞ்செய்வலெனவறைந்தவாற்று [ன்
னேயமுறுநண்பனுமாயிருத்தலினுன்மறைமொழியைநிகழ்த்தல்செய்வே
னாயபொலங்கிரிக்கீசன்சுரர்முனிவரிருடியர்கள்சூழநாளு
மேவுறுமேதாளுமையுடனேவீற்றிருக்கப்பெறுமகிழ்ச்சிமிகவுமுண்டால்.

நித்தமிருபதிற்றெழுதாரகையும்வருநடைமுதனிகழுமீன
மித்திரனும்வெண்மதியுமுதலாகவலஞ்செய்யும்வியப்புநோக்கி
யித்தகையபெருமைநினக்கிலையெனவேயெண்ணினர்மேலினைகாணுநின்
சித்தமெனப்புகன்றுமுனிதென்றிசையினின்றும்வடதிசையிற்போந்தான்.

பண்ணமாமகதிமுனிவரன்புகன்றுபடர்தலும்விந்தையம்பொருப்புக்
கண்ணகனுவகையிடந்துபாதலத்திற்கவைத்திடும்வேர்பரந்தோட
விண்ணெலாநெருங்கியிர்வொருபுறத்தில்வெயிலொருபுறத்தினிலெறிப்பத்
துண்ணெனப்புழுங்கிவெகுளியேயுருவாய்த்துருவனினுயர்ந்ததுமாதோ.

வேறு.

இனையவிந்தைப்பருப்பதமீண்டிய
முனைவர்செய்கைமுழுதுந்தவிர்த்ததா
னனைகொள்கற்பகநாட்டுறைமன்னன்முன்
னனைவருஞ்சென்றறைமுறைகூறினார். (௯)

விண்ணில்வாழ்தருவேந்தன்வெரீஇயெழுந்
தெண்ணில்கோடியிருடியர்சூழ்வர
நண்ணிநாண்மலர்மேலுறைநாதன்முன்
னண்ணமேலவபயமென்றடைந்தனன். (௧௦)

பணைநிலத்திறைவன்பகவன்றனைத்
துணைமலர்க்கரங்கூப்பியின்சொல்லினாற்
றிணையிரண்டிற்றிறங்கொளுலகினி
லிணையுமெல்லுயிறவுமிறந்ததால். (௧௧)

இருதுதிங்களிலகியபக்கமுய
வருதினந்திதிமற்றதுநந்தின
சுருதிதெய்வந்தொழுதல்கன்மாதிகள்
கிருதுயோகமுங்கீழ்ப்படுகின்றதே. (கஉ)

இன்னவாதலினாலடியேயிகக்
கின்னமானசராயினங்கேண்மதி
பொன்னின்வாய்ந்துயர்பொற்புறுதூவிய
வன்னமேலுறையையவென்றோதினான். (கங)

நிகழ்ந்தகூறலுநீடியவிந்தையைப்
பகும்படிக்குப்பகவனினோர்ந்தித
னகந்தைதீர்ப்பனகத்தியனென்றுயர்
சிகண்டிசன்றனைநோக்கினன்செப்புவான். (கச)

திறங்கொள்விண்ணவர்தேசிககேண்மதி
நிறைந்தகங்கைநிலவியகாசியி
னுறைந்தகும்பமுனிவனுடன்றெழு
மறங்கொள்வெற்பின்மதங்கெடச்செய்குவான். (கரு)

யான்பகர்ந்தனனென்றுநீர்சென்றிகல்
வான்பகிர்ந்தெழுவிந்தவலியது
தான்றவிர்ந்திடச்சாற்றியகத்தியன்
போன்றவாய்மைபுகழுதிரென்றனன். (கசு)

என்றபோதனீரெய்தியங்கோதுழி
நின்றுதாழ்வுறனேரினுநேருமா
னன்றியான்சென்றுநன்குசெய்வேனென
வென்றியோதிமமேற்கொண்டெழுந்தனன். (கஎ)

பனிவிசும்பினமரர்படர்தரக்
கனிவினோடுயர்காசியின்மேவியப்
புனிதனும்விசுவேசனைப்போற்றியே
முனிவன்வாழுமிருக்கையைமுற்றினான். (கஅ)

வேறு.

நிறைதவமுனிவர்விஞ்சையருரகர்நிகரில்கந்தருவர்விண்ணவர்க
டிறன்மிகுமகவான்முதலிமையவர்கடிரண்டுபின்சென்றிடப்போந்து
முறைதெரிபகவற்காண்டலுங்கும்பமுனிவரனகமிகமகிழ்ந்தே
நறைமலிந்திலங்குமருக்கியமுதவிநலத்தகுமுகமனுநவின்றான். (க)

ஓகைபூத்திருந்தவறிவனைநோக்கியுந்தியங்கமலமீதுதித்தோ
னாகம்வாழ்வேணிநம்பனைப்பொருவுரயங்கிளர்முனிவரவானோர்
பாகசாதனனும்படருறவிந்தப்பருப்பதங்கர்விதமாகி
யேகிடுஞ்சுடருமிந்துவுந்துயரமெய்தவேயெழுந்துநின்றதுவால். (௨0)

இன்னதாலுலகினெல்லிராக்கருமமினையவும்பிறழ்ந்தனவிலகு
நின்னருட்கிடனாய்நிலைபெறவேண்டுநீயலாற்பிறிதிலரதனு [ப
லுன்னிவந்தனநீபோந்ததன்செருக்கையொழித்திடவேண்டுமென்றுனைப்
வன்னிலைமுனிவன்முத்திமாநகராலகன்றிடேன்காசிவிட்டென்றான். (௨௧)

பண்ணவன்கூறநான்முகக்கடவுள்பகர்ந்ததுகருமமேயினைய
தண்ணல்சீரடியார்தமக்குமூவுலகத்தமர்முனிவரர்க்குமியாவருக்கு
நண்ணியவிடுக்கண்களைதருந்தகையானடுவுணர்முனிவரமறுத்தல்
புண்ணியப்பாலவன்றுபுங்கவர்கள்புவிக்குடலமுமுபகரித்தார். (௨௨)

நறும்புனல்படர்ந்தகாசிமாநகரினலத்தகும்வடமறைக்காடொன்
றுறும்பவமொழிப்பவொளிர்தருந்தாழாதொல்லையிற்சேறுதியடர்முக்
குறும்பினையெறித்தகும்பமாமுனிவகுணிப்பருமேன்மையும்படைத்தே
யறந்தழைத்தோங்குமரியதண்டமிழுமவ்வுழைப்பெறுகுவையென்றான்.

கேட்டலுமுனிவன்விழைந்தநெஞ்சினனுக்கெழுமியமேதினிபடைத்தோ
றாட்டுணைவணங்கிவேதமாபுரியைத்தன்னகத்திருத்திவான்மீதில் [ன்
வாட்டடங்கண்ணியுடன்படர்தலுமேவாரியுண்டவனைமதித்துக்
கோட்டமுற்றிருந்தவிந்தநற்பொருப்புக்குறுவெயர்பொடித்திடநடுங்கி.

விளங்குவட்டிலைபோலொடுங்கிவாமனமாய்விரைந்தெழுந்தருக்கியமுதவி
யளந்திடற்கரியவருந்தவநினக்கேயடிமைபூண்டேனினவனைத்துந்
தளர்ந்திடாதிழைப்பனென்றலுமுனிவன்றயங்கியதேவதாகருமம்
வளர்ந்திடத்தென்பாற்சேறலுற்றனன்யான்வருந்திடும்வரையுமிவ்வடிவம்.

தாங்கியேயிருவென்றுறுதியாயமைத்துத்தாமரைத்தளிர்க்கையாலழுத்தி
வாங்குதெண்டிரையின்மேற்றிசைவிளங்கும்வடமறைக்காட்டினிற்போந்து
தேங்கமழ்வேதநறும்புனலாடித்திகழ்பிதிர்தருப்பணஞ்செய்தே [ன்
பாங்குறவொருநாட்பசித்திருந்திறைவன்பதிகள்பற்பலவெலாம்பணிந்தா

வேறு.

வேதவான்புனலின்மூழ்கிவெண்பொடியணிந்துமேலாஞ்
சோதியேயுருவமாகித்துலங்கியபரமாகாச
மீதுறைபொருளதாகிவேலமாவனத்தில்வாழு
மாதியையருச்சித்தேத்தியனுமதியதனாலம்மா. (௨எ)

வண்மைசேரறிவின்மேலோர்மனத்தினுற்றுதியாநிற்கும்
பண்ணவனுருகுமன்பாற்பாரிடைவிளங்கியோங்கு
மண்ணல்வான்சிறப்புமேவுமகத்தியலிங்கமென்றே
யெண்ணருமீசானத்திலிலிங்கமொன்றியற்றியேத்தி. (௨௮)

தன்னியற்பெயராற்செய்ததானுநாயகற்குச்சால
மன்னியவுபசாரங்கள்வரன்முறையாற்றிநீணாட்
பன்னுமுற்சனனத்தீட்டும்பவமெலாந்தொலையாநின்ற
சென்மமுஞ்சிறந்ததென்றேசெப்பியேதுதிசெய்கின்றான். (௨௯)

அய்யிருபுயத்தபோற்றியாறணிசடிலபோற்றி
நெய்தவழ்கருமென்கூந்தனேரிழைபாகபோற்றி
மொய்புலனடக்கிநீங்காமும்மலங்கடந்தோர்க்கென்றுஞ்
செய்யபங்கயத்தாணல்குஞ்செல்வனேபோற்றிபோற்றி. (௩௰)

நீற்றொளிபழுத்தமேனிநிருமலபோற்றிநீர்வான்
காற்றுருவாகிநின்றகறைமிடற்றிறைவபோற்றி
மாற்றலர்புரமூன்றட்டமாசிலாமணியேபோற்றி
சீற்றவெள்ளேற்றாய்போற்றிதேவனேபோற்றியென்றான். (௩௧)

இவ்வகைதுதித்தலோடுமிறையவன்றரியானாகித்
திவ்வியலிங்கநின்றுஞ்சிற்றிடையுடனேதோன்ற
வவ்வியமகற்றுநெஞ்சினகத்தியனன்னோன்பாதம்
பவ்வசாகரங்கடரப்பணிந்துபின்பகரலுற்றான். (௩௨)

அறத்திறன்றிறம்பல்செய்யாதனுதினஞ்சிவசம்போவென்
றிறைப்பொழுதேனுந்தாழாதியம்பிநாட்கழிக்கவேண்டும்
பிறப்பினுநினதுசின்னம்பிறழ்ந்திடாதிருத்தல்வேண்டு
மறைப்பரம்பொருளேயெங்கண்மன்னியகுலங்கடன்னில். (௩௩)

ஈசனைத்தலைவனென்றேயெண்ணிலாக்குழவியொன்றுந்
தேசுறப்பிறக்கலாகாசெனிப்பினுந்தீரவேண்டு
நேசனேகருப்பம்வாய்த்துநிற்பினுமுயிர்த்ததேனும்
வாசமார்குழலாரஞ்சமரித்திடவேண்டுமென்றும். (௩௪)

திருவடிபிழையாத்தன்மைதிருந்தவேயிருத்தல்வேண்டு
மரகரசம்போவென்றேயன்பினோடுரைத்தான்பின்னர்
விரவியவுவகைபூத்துமிக்கதோர்காசிநீங்கி
வரமுறுமறைக்காடெய்திவாலிதாமனத்தனானான். (௩௫)

மன்றலங்கொன்றைவேய்ந்தமறைப்பரம்பொருளேவானோர்
நின்றுநேடறியதூயநிருமலவடியேனெஞ்சி
லொன்றுளநியமநீணாளுநித்திருக்கின்றதன்ன
தின்றெனக்கருளவேண்டுமெனையதாமனையதென்னில். (௩௬)

அப்பநின்னருளினாலேயளித்திடப்போந்தியார்க்கு
மெய்துதலரிதாய்நின்றவினியசெந்தமிழையென்னால்
வையகமீதினோர்மைவளந்தரவிளங்கவைத்தல்
செய்குவதாகுமென்றேதிருமுனிசெப்பினால். (௩௭)

நலத்தகுமுனிவன்பின்னுநாதநிற்கிதமாயேதந்
துலைத்திடுந்தென்னூலென்னுஞ்சுருதிபன்னிரண்டொரொன்பான்
விலக்கரும்வருணந்தன்னில்விளக்கமுற்றரியவிண்ணோர்
நிலத்துறைபவர்கள்யார்க்கும்நிறைமகிழ்செய்வதாகி. (௩௮)

விளங்கிடும்வேதம்போலவிமலநீபிரியமாகி
யுளங்கனிந்துரைத்தோர்க்கெல்லாமுறுவரமளித்தல்வேண்டும்
வளங்கொளத்தமிழாற்போந்தமந்திரஞ்செபித்தபேர்க்கு
மளந்தறிவரும்பேரின்பவானந்தமளித்தல்வேண்டும். (௩௯)

நிரல்வளைபாகாவென்றேநிகழ்த்துறுமுனிவனின்று
னரனவன்பரிவுநோக்கியரியதன்னருளாற்போந்த
திரமுறுந்தமிழ்வேதத்தைத்தென்றிசைவிளங்கவென்றே
வரமுறுசெவியின்மீதின்மகிழ்ந்துபதேசஞ்செய்தான். (௪௦)

இன்புறுமுனிவன்காதிலிறையவனிசைத்தபின்பு
தென்புவிதனக்குந்தூய்தாந்திராவிடச்சுருதிக்கும்பே
ரன்புறுமாசானாகியவைவளர்த்தருள்வாயென்றே
தன்புகழொருவர்க்கோதித்தகவிரும்பியதுநல்கி. (௪௧)

வேறு.

மிளிர்கின்றவிலிங்கமிசைப்புகுதப்
புளகந்திகழும்முனிபுண்ணியனு
ளுளமின்புறவுற்றவருந்தமிழால்
வளரும்படிமுன்னிவசித்தனனால். (௪௨)

வேறு.

அமையும்வேலையிலருந்தவர்வசித்திடுமிமையச்
சிமையமீதினிற்றிருமணஞ்செய்திடுஞ்செயல்கேட்

டிமையநாட்டினர்யாவரும்போதரலெண்ணித்
தமைநிகர்ப்பருமுனிவனுங்காவினிற்சார்ந்தான். (௪௩)

எண்ணிலாயிரமுருத்திரகணங்களுமெய்த
வண்ணல்வெள்ளியங்கிரிதனையகன்றுமால்விடைமே
னண்ணிமாலயனிந்திரன்சூழ்வரநலன்சேர்
விண்ணுலாவியதண்பனிவரையைமேவினனால். (௪௪)

பாழிமொய்ம்புறழிமையமீதியாவரும்படர்ந்து
சூழநிற்றலாற்றென்றலைபொறையுற்றதுதோற்ற
வாழமுற்றதுவடதிசைதவிர்ந்திடுமதுபோல்
வாழிதென்றிசையுயர்தலும்வெருவினர்வானோர். (௪௫)

தாவில்பேரிறைமீக்கொளும்வானவர்சரணந்
தேவநாயகதிகைத்தனம்படுகர்கொள்செயலா
லாவதேதினிநின்றிருவருளினாலன்றி
யேவரேசமஞ்செய்குவரிரட்சியென்றிசைந்தார். (௪௬)

எல்லைகாணருமிறைவனீரியம்பியதியற்ற
வல்லர்யாரினியாஞ்செலவேண்டுமற்றெமக்குச்
சொல்லினேருறுந்தகைமையன்றுலங்கியதென்பா
லொல்லைசெய்குவனெனிற்சமமுறுமெனவுரைத்தான். (௪௭)

தியங்கும்வானவரமலநீதென்றிசைக்கேக
னயங்கொள்வாய்மையவல்லதானனிபொருவினர்க
ளியங்கிடுந்திணைநிலத்திணையினுமிலரெனவே
பயன்கொண்மாமறைபகர்தலாற்பயந்தனமென்றார். (௪௮)

செற்றநீக்கினர்செப்பறுஞ்சிறுநகைகொட்டிச்
சொற்றதுண்மையேதாமகல்கேள்வியீரெம்மை
யுற்றசீர்மையனுரைபெறுமகத்தியனொருவன்
மற்றுவேறிலரென்றனன்மாதவர்மகிழ்ந்தார். (௪௯)

சிறந்தநன்மணத்தெரிசனஞ்செயவிழைந்திருந்த
வறந்தழைத்திடுமுனிவனைத்தென்றிசைக்கனுக
விறைஞ்சியாம்பலவேத்தினுஞ்செல்வனோவென்றே
நிறைந்தமாதவர்நினைந்திடும்வேலையினிமலன். (௫௦)

வேறு.

தீதகலுங்குறுமுனிவன்முகநோக்கிமுறுவலித்துத்திரைகள்வீசு
முதுவரிதனையருந்திவிந்தகிரிமுனையழித்துமுனிவர்வானோர்

பாதலர்பூதலத்துறைவோர்பயந்தவிர்த்தாயிதுபொழுதும்பரிவுகூர்ந்தே
மேதகையதென்பொதியிலுறைந்துபுவிசமஞ்செய்யவேண்டுமென்றான்.

மணிச்சிரகங்கரத்தேந்துமாமுனிவனையவுமைமனத்தோராமுன்
கணிச்சிவளர்கரதலத்தான்கழல்வணங்கித்திருமணஞ்செய்காட்சிநோக்கி
யணித்திலுறையருந்தவர்கள்கிருதார்த்தராகவந்தோவடியேன்பாவப்
பிணிக்கிடனாமுடலெடுத்தேனெனப்பணிந்தமொழிகூறிப்பின்னுஞ்சொல்வான்

எண்ணரியபெருநலஞ்சேர்மறைக்காட்டிலிருத்தியெனவிசைத்தீர்முன்னங்
கண்ணுதலையவைநீத்துக்கானகத்தபொதியமலைகடிதின்மேவப்
பண்ணமைத்ததிருவாக்குப்பகர்கின்றீரெனமெலிந்தான்பரிவுநோக்கிப்
புண்ணியக்குன்றனையபிரான்றுயரொழியவொருவாய்மைபுகலலுற்றான்.

அரியதமிழ்ச்சுருதிநெறியறிந்தவகத்தியமுனிவவனையமூதூர்ப்
பொருவரியவரிமேதத்தருமூலந்தனிற்றிகழ்ந்துபுகழேமேவுந்
திருமணமண்டபமதனிலுமையுடனேயெமைக்காண்டல்செய்தேயோகை
புரிகுவநின்பொருட்டாகப்போதுவமென்றொருவாக்குப்புகன்று பின்னும்.

வளர்யாண்டுதொறுமதனின்மணம்புரிவம்பங்குனிநன்மாதமீதென் [த்தி
றிளஞான்றுமதிபுணர்ந்தோன்விடைகொடுத்தான்முனிவனவனிணைத்தாளே
யுளம்வாய்ந்துதென்பொதியிலுறைந்தனன்பூமியுமுன்போலுறைந்தவா
புளகாங்கமுற்றிருந்தார்புவனியுறைபவருமகிழ்பொலிவும்பூத்தார். [னோர்

வேறு.

தளர்வுநீங்கலுந்தயங்குபன்மணிகளாற்சமைந்து
வளமிகுத்திடுகாவணத்துயர்மணவறையி
லொளிருமிந்திரநீலம்வாய்ந்தோங்குபீடிகையை
யளவிடற்கருநாயகனணிபெறவடுத்தே. (௫௬)

தேனினுஞ்சிறந்தமிழ்தினுமினிப்புறுஞ்செஞ்சொன்
மேனையென்பவள்பாலினல்விளக்குமெல்லடியைத்
தானெடுத்துவைத்தேறியேதமனியமுடிசூ
ழேனைவானவர்யாவருந்துதித்திடவிருந்தான். (௫௭)

அண்ணல்வீற்றிருந்தருள்செயுமளவையாண்டுற்ற
திண்ணிதாகியவீரபத்திரன்சுடர்த்தீப்பொ
னண்ணுருத்திரனுடேகசுரனயனளினக்
கண்ணனிந்திரன்முனிவரர்தேவர்கள்கணங்கள். (௫௮)

தத்தமக்குறுமுறைமைகடமக்கியல்புறவே
வைத்தபீடிகைமீமிசையிருந்தனர்வயங்குஞ்

சுத்தவெண் மதிக்கடவுளைச்சூழ்ந்த தாரகையை
யொத்திடும்படியேர் தருமொருவனைச்சூழ. (௫௯)

வேறு.

ஆயதோர்காலந்தன்னிலகிலமீன் றவட்குமேனை
சேயமஞ்சனநீராட்டிச்சேர்தருமீரம்போக்கித்
தோயுநெய்யளகங்கோதித்தூய்மலரணிந்துபின்னி
யேயபூந்துகிலைக்கொய்தேயெழில்பெறவுடுத்திப்பின்னர். (௬0)

அய்யரிபரந்தகண்ணிற்கஞ்சனமெழுதிக்காதிற்
றய்யபொற்றோடுசாத்திச்சுடர்மணிச்சுட்டிகட்டி
வெய்யவன்முன்னர்வைத்தவிளக்கெனக்கலன்கண்மின்னச்
செய்தனர்தையலார்கள்சிறந்தபெண்ணாசிக்கம்மா. (௬௧)

செந்திருவடப்பையேந்தத்திருநடமரம்பைசெய்யச்
சந்தரப்பெயரினாள்வெண்சாமரையிரட்டத்தண்ணார்
கந்தவார்குழல்சூழ்சத்தகன்னியர்சிவிகைதாங்க
வந்தனள்பசும்பொன்மேய்ந்தமணஞ்செய்காவணத்தின்மீதில். (௬௨)

போந்தவண்மனத்தாலண்ணல்பொன்னடிவணங்கிநின்றாள்
காந்துமேகலைசூழல்குற்கலைமகண்முதலாயுள்ளோர்
வாய்ந்திடுந்தவிசின்மீதில்வளம்பெறவிருத்தியென்னக்
கூந்தலம்பிடியினன்னகுலக்கொடியிருந்தாளன்றே. (௬௩)

இருத்தலுமிமையத்தண்ணலிசைவினன்மேனையென்பாண்
மருக்கமழ்சாந்தந்தூயமஞ்சனமலர்கணல்க
விருப்பினாலிறைவன்பாதம்விதிமுறைவிளக்கிப்போற்றி
யருச்சனைபுரிந்துசாலவகமகிழ்ந்திறைஞ்சிப்பின்னர். (௬௪)

அடங்கலுந்தெரிந்தவாசானருமறைமுனிவர்சூழ
விடங்கொடாமறைமேல்வாழுமிறையனல்வளர்த்துமன்றற்
சடங்கினைமுறையிற்செய்யச்சல்லரிதிமிலையார்ப்ப
மடந்தையர்நடனஞ்செய்யமங்கலமுழுக்குவிம்ம. (௬௫)

துன்றுபல்புவனமீன்றசுந்தரிகரத்தைநாதன்
றன்றனிக்கரத்திற்சேர்த்தித்தகவுறுமிவளையன்பா
யுன்றனக்களித்தேனென்றேயுயர்மறைமனுக்களோதி
மன்றல்சேருதகம்பெய்தான்மலையினுக்கிறைவனம்மா. (௬௬)

அதுபொழுதமரர்விண்மேலலர்மழைமாரிபெய்தார்
முதியவன்முன்னர்ப்பின்னர்முகுந்தன்மேன்மகவானப்பா

லெதிரில்கின்னரர்கள்வானோர்யாவருமிறைஞ்சிநின்றார்
பதயிதென்றிமையத்தண்ணல்பணித்தனன்கிளைகளோடும். (௬௭)

பாதமேற்பணிவோர்க்கெல்லாம்பரிந்தருணல்கிச்சேமே
ஞாதனின்றேறிமாதைநலம்பெறத்தழுவிக்கையர்
லோதருங்கோடிகோடியுருத்திரகணங்கள்சூழ
வேதபாராயணங்கள்விம்மிமேலெழுந்துபொங்க. (௬௮)

பல்லியமியம்பவெங்கும்பாரிடத்தொகுதியார்ப்பச்
சில்லரிச்சிலம்புதாங்குந்தெரிவைபல்லாண்டுகூற
வல்லறீரடியாரன்னோனருட்டிறமெடுத்துப்பாட
வெல்லைகாண்பரியவள்ளலெய்தினன்றிருவேற்காட்டில். (௬௯)

தண்ணளிதுதைந்துபாடுந்தாழிருங்குழலார்கையி
லெண்ணருந்தட்டையேந்தியிலங்கிடச்சுழற்றிநிற்ப
விண்ணவர்மலர்கள்பெய்யவிடையினின்றிழிந்துமேவுங்
கண்ணுதன்மணஞ்செய்கோலங்காட்டிவீற்றிருந்தான்மன்னோ. (௭0)

செழுந்தமிழ்வளர்த்துத்தென்பாற்சேர்ந்திடுமுனிவனாத
னெழுந்தருளுதலும்வேற்காடெய்தியேயிறைஞ்சிக்கண்ணீர்
பொழிந்திடத்துதித்தானந்தப்பொருவரும்புணரிமீதி
லழுந்தியின்புற்றுப்பின்னராரம்வாழ்பொதியஞ்சார்ந்தான். (௭௧)

வேறு.

கும்பமுனிவரன்மலையமலையிழிந்துமணவாளக்கோலந்தாங்குஞ்
செம்பதுமமலர்திகழும்வேற்காட்டில்வளர்ந்தருளுந்தேவர்கோவை[நாளு
யம்பிகையைப்பணிந்துருகித்தெரிசனஞ்செய்தொருமுகுர்த்தமமர்ந்தெதந்
மும்பர்தொழுந்தமிழ்மறையாளுளங்குளிரத்துதித்துமலையுறைவனன்றே.

வேறு.

கும்பமாமுனிவன்பூசைகொண்டருள்பெருமான்றன்னை
வம்பவிழ்மலராற்போற்றிவணங்கினர்கயிலைவாழ்வா
ரிம்பரினிதனைக்கேட்டோரெழுதினோர்படித்தோர்யாரு
மம்புயமாதின்சீர்பெற்றருளைமேற்பெறுவரென்றான். (௭௩)

புவனிகண்முழுதும்போற்றிப்புகழ்குறுமுனிவனாற்று
முவமையில்சரிதந்தன்னையுரைத்தனமுலகுக்கெட்டாச்
சிவனுடன்வாதுசெய்துதிருந்தியயோகமீட்டுந்
தவமுனிபரசிராமன்சரித்திரஞ்சாற்றுவாமே. (௭௪)

அகத்தியச் சருக்கமுற்றும்.

ஆகச் செய்யுள் - ௭௫.

# பரசிராமச்சருக்கம்.

பொறைவளர்திருவேற்காட்டிற்பொருந்தும்வேதியனைநோக்கிக்
கறையணிமிடற்றோனேசன்கவுசிகன்கருணைபூத்து
நிறைதருங்கங்கைசூடுநிகமநாயகற்குக்கீழ்பா
லுறைதருந்தூயதானமுள்ளதெனவுரைக்கலுற்றான். (௧)

அகழ்திரைக்கடல்சூழ்பாரிலருஞ்செமதக்னிபாரி
புகழிரேணுகையென்றோதும்பொற்கொடிவயிற்றின்மேவி
யிகழ்வறுபிருகுசாபமிசைந்திடுமதனான்மாயோன்
றிகழ்பரசிராமனாகத்திருவவதாரஞ்செய்தான். (௨)

அன்னவன்றந்தைகூறுமாணையைச்சிரமேற்கொண்டு
தன்னையீன்றெடுத்ததாயின்றலைதனைத்தடிந்துவீசிப்
பன்மறையுணர்ந்தோன்பாதம்பணிந்தனன்பணிதலோடுஞ்
சென்னிமோந்தெடுத்துக்கோபந்தீர்ந்தருந்தபசுசெய்தான். (௩)

வெடிபடுசொல்லான்கார்த்தவீரியார்ச்சுனனென்றோது
மடுதிறலரசனன்னோனணிமுடியறுத்தான்மைந்தன்
பொடியெழக்கனன்றுசீறிப்பொங்கெரிகதுவநோக்கித்
தடிகுவன்வடிவேன்மன்னர்தங்குலமனைத்துமென்றான். (௪)

என்றவனுருப்பநீங்காதெழுந்தனன்றவங்களீட்ட
மன்றலங்கமலஞ்சூழும்வடமறைக்காட்டின்மன்னும்
வென்றிசேர்வேததீர்த்தம்படிந்தரிமேதமூலந்
துன்றியசுடரைநோக்கித்தொழுதடிபணிந்துபோற்றி. (௫)

பூருவதிசையின்மீதிற்பூம்புனல்வாவியொன்று
சீருறவமைத்துமேற்பாலிருந்துமந்தாரங்கோங்கம்
வேரிமாமலர்சூழ்கொன்றைமேம்படத்தழைப்பவைத்தே
வாரிசூழுலகமேத்தமணிநெடுங்கோயிற்செய்து. (௬)

ஆயிடையுருகுமன்பாலழகியதனதுபேராற்
றாயதோரிலிங்கஞ்செய்துதுணரிதழலங்கல்சாத்தி
நாயனேயடியேனெஞ்சினயந்தனவருள்செய்யென்றே
காய்தழலதனினின்றுங்கனற்றெழுந்தபசுசெய்தான். (௭)

சதுமறைதெரிந்தோனோர்காற்றண்கடன்முகட்டின்மீதிற்
கதிரவன்றோற்றுமுன்னர்க்காலைசெய்கடன்களாற்றி

ந்திநெடுங்கணையமேவிசண்பகற்சாந்திசெய்வான்
வதிதலுமன்னோற்காணவந்தனவகுத்தல்செய்வாம். (௮)

புள்ளுவம்புரிந்ததீயபுரவலன்புரங்கள்யாவு
மொள்ளெரிபாயநோற்றவுயர்மறையவனைநோக்கி
நள்ளிருளாடுநாதனன்றென்மகிழ்ந்துநண்பன்
றெள்ளியவுறுதிவாய்மைதெரித்திடவெழுந்தானம்மா. (௯)

இறைச்சியோர்கரத்திலேந்தியேலவார்குழலாள்போத
மளித்திருமைந்தர்முன்னான்மறைமுடிவலைக்கொண்டோடக்
குறுந்தடிகொடுவாட்கொண்டுகூற்றனுஞ்சுரபிக்கூட்ட
மறுத்திடுமவனும்போலவையன்வந்தெய்தினின்றான். (௰)

எய்தலுமிராமன்றாயவிருநிலமதனைநோக்கி
வைதிகமுறைமைக்கேற்பவார்த்தைகளுரையானாகிக்
கையினிற்சாடைசெய்தான்கண்ணுறுதவனைப்போலப்
பொய்படுமருங்குலோடும்பூசுரனுறையுளிற்புக்கான். (நக)

வேறு.

ஆமாங்கிசத்தைப்பழித்தபடரமுதையகிலமளித்தவளை
வாமாங்கிசத்தில்வைத்தபிரான்வலிவிற்கவடமாய்நெருங்கச்
சாமாங்கிசத்தகோபமுடன்றழலிற்புழுவிற்பதைபதைத்துக்
கோமாங்கிசத்தைத்தினும்பாவிகுறுகவாராதேயென்றான். (க௨)

அகலநில்லாதடுக்கின்றாயாண்மைநினக்கென்னடாவென்றே
யிகலியிவனைப்புடைப்பதனுக்கெவருங்காணேமெனக்கனன்றான்
புகலும்வார்த்தைசெவிப்படலும்புரமூன்றெரித்தோன்பொருவரிய
சகலமறையுமினிதுணர்ந்துதவஞ்செய்முனிவன்றனைநோக்கி. (க௩)

மடிகொள்செவியவெள்ளெயிற்றுவளைந்தவுகிர்க்காற்சுணங்கனைவை
முடுகித்தூண்டிமேலறமுனிந்தோன்போலவுசுப்புதலுங்
கடுகிக்குமரரிருவோருங்காயுமறையோன்கையிரண்டு
மொடியப்பிடிப்பார்போனெருங்கவொன்றுமுதியாதிருந்தனனால். (க௪)

வேறு.

அமைதரும்வேலையதனிலேழுலகுமளித்தறம்வளர்த்திடுமரிய
வுமையவள்கவருமுடுவனுன்கிளையுமுபத்திரஞ்செய்திடாதோட்டி
யிமையவர்தமக்குமரியமாதவஞ்செய்திருந்தமாதவன்றனைநோக்கிச்
சமைமிகுஞ்சன்னியாசியோநிற்கத்தன்மைகடமைழந்தவைதிகனே. (க௫)

யாவனீயென்றுளென்னலுமினியவிராமனீசுரன்றனைநோக்கி
யேவன்யானாகவென்னைநீர்தீண்டிலெய்திடுந்தோடமென்றிசைத்தான்
காவலன்றோடமென்பதுநினக்கேகாகணித்துரையென்றெனக்கேயா
கூவுதியென்னைபூசுரன்கொல்லோகூறுகவொழிந்தவன்கொல்லோ. (௧௬)

உந்தனைப்பார்க்கிலென்கிளைபோலவுண்மையாய்த்தோன்றுதென்றுரைத்தா
னந்தணன்செமதக்கினிமகனானவருந்தவன்யானகர்க்கயலில்
வந்தனைசெய்தேயிருக்குநீயென்னைமதித்துநின்சனமெனவழங்க
லெந்தவாண்மையினாலென்றனனதனுக்கீசுரன்பேசியதிசைப்பாம். (௧௭)

திருந்தியசெமதக்கினிமகனென்றேசெப்பினையிதுபொழுததனால்
நெருங்கியசுற்றமாயினையெவற்றாலென்றிடினிகழ்த்துவன்கேண்மின்
வருந்திமேயநின்னையீன்றரேணுகையென்மனையவடனக்கதிபிரிய
யிருந்தவநின்னைக்கண்டவப்பொழுதேயென்மனம்மகிழ்ந்ததிங்கென்றான்.

இவ்வுரைகேட்டவிராமனெஞ்சழன்றேயிழிந்தசண்டாளனீயெனைப்பார்த்
தவ்வுரைசொன்னாயதற்குநின்னாவையறுத்திடவேண்டுமென்றதிர்ந்தான்
கொவ்வைவாய்ப்பாகனிரங்கிலதாயைக்கொன்றிடும்பாவிநீயென்னைச்
செவ்வைதீர்வார்த்தையுரைத்ததற்குனையேயசிவன்குறைத்திடத்துணைசெய்வார்.

அன்றியுங்கிளையைநிந்தைசெய்தோரையதஞ்செயவேண்டுமென்றலகி
னன்றுளபனுவலுரைத்ததானின்னைநான்விடஞாயமொன்றிலதே
யென்றுபின்னின்றநாய்களையவன்மேலேவியேயோட்டினாலெறிந்தான்
வென்றிசேர்மன்றமேயோன்றெண்டினாலதனைவிலக்கியேவெருட்கொளவடித்தான்.

பின்னருஞ்சுழற்றிப்பிள்ளைகண்மீதிற்பெலனுறவெறிந்தனன்சாடு
முன்னமேதெண்டையிரண்டுகூறுகமுறித்தனன்வேழமாமுகத்தோ
னன்னதன்மையைக்கண்டனைகவாக்கியத்தாலழற்சொரிந்தாலெனச்சீறி
யென்மகன்றன்னைப்புலைச்சிதன்சேடியீன்றிடுமதமம்வேனடிப்பாய். (௨௧)

வேறு.

இதுபொழுதினின்மிகுதொந்தயுத்தய்யானெதிர்தபவினைசெய்துகொன்றகுத்தியெ
யதிசயமிகவுலகங்களுக்கெலாமடபுரிகுவனெனநின்றதிர்த்தனன்
சதுமறையவன்மிகவஞ்சியெட்டியேயதரணியுமதிரநடந்துபுக்கனன்
விதுவணிசடைமுடிநம்பன்வட்செறிமிகுசினமுடுவல்களைந்துவிட்டனன்.

அவைதுடர்தரவளர்செங்கைபற்றினனதுபொழுதவன்மனமின்பமுற்றது
தவனதுபெருகவுமின்றசுத்தம்வந்ததுவெனமனமிகநொந்துருத்துவாழ்,
சிவனுலகுபுமகிழ்ந்திருக்கவுந்திகழ்மறையவனைவலிந்துதொட்டனை
நவைபடுமுனதுசிரங்கணத்தினிலுறவெடிபடுமென்றுசெப்பினன்.

மறமிகமுனிவன்விளம்பிநிற்றலுமலைமகள்கொழுனனீயின்றுரைத்தது
நிறைமறையவனெனில்வந்தடுத்தெனைநிலவிடுநிலவிடுமென்றுசெப்பிமே
விறைகுலனெனிலடவென்கையிற்படவிலையெனையிகழ்மொழிவிண்டிசைத்திரீ
யழிவிலைபுலையனீநின்றிழிப்புறுமதமனைநிகருவையென்றுசொற்றனன்.

வேறு.

குணுங்கனிற்குணுங்கனானகொள்கையானீயென்பாலி
லிணங்கியபணிசெய்வோனாயிருந்தெனையடைதியாகி
லுணங்கிடாதுன்னைநீக்கிவிடுவெனென்றுளிரும்பேழ்வா
யணங்கரவசைத்தோன்கூறவருமறைமுனிவன்சீறி. (௨௫)

செம்புலியாடையின்றித்திகழ்தருந்திசைகளென்னு
மம்பரம்புனைந்தோன்கன்னமதிர்தரவடித்தான்பின்ன
ரெம்பிரானிலங்கிராமனிருகையுமொன்றுறப்பற்றிக்
கொம்பியேயன்னோன்கன்னங்குறுங்கிடவடித்தானம்மா. (௨௬)

வலமுறுமிராமன்றுள்ளிவள்ளலைப்புடைப்பவள்ளல்
சலமுளோன்போலவன்றோன்றனையடித்திடுகவிவ்வா
றிலகிருவோரினின்றுமெங்கைதகையுயர்தறன்னை
நலனுறைந்தொளிருஞ்செவ்வாய்நாயகிதிருந்தநோக்கி. (௨௭)

தேங்கமழ்கொன்றைசூடுந்தேவனேசுற்றமன்றோ
வாங்கருங்கோபஞ்செய்யின்மரித்திடநேருமென்று
ளாங்கவள்பகர்தலோடுமையனும்பையப்பையத்
தாங்குறுமளவைத்தாகத்தானடித்திட்டானம்மா. (௨௮)

தளர்வுறுமுனிவனன்னசகித்திடமாட்டானாகி
யிளகியேயிறந்துபோவோமென்றுளத்திசையவெண்ணி
யளவிலாவுருப்பந்தாங்கியடிபடுமரவிற்சீறி
யெளியவன்மார்பின்மீதிலிடித்தனனிடியேறஞ்ச. (௨௯)

தாக்கலுமிறைவன்கோபத்தழலிடைப்படிந்தோன்போல
நோக்கியோர்கரத்தாற்கையைநொறுங்கிடப்பிடித்துவீழ்த்தி
யாக்கையைக்குமைத்துப்பிண்டமாக்கியேயடர்ந்துகாலாற்
றாக்கிநீள்விசும்பிமேலறத்துண்ணெனவெறிந்தானம்மா. (௩௦)

வேறு.

புலைவேடமெடுத்தபுராரிகரத்
தலைஞாளிகளன்னவனைக்கறுவி

நிலவீதினினின்றுபதுங்கிநெடுந்
துலைதூரமெழுந்துதுடர்ந்தனவே. (௩௧)

மெய்யுற்றிடும்வேதியன்விண்ணிடையி
லெய்தச்சிறுபாலர்தளிர்க்கிணைய
கைகொட்டிநகைத்தனர்காணுறவே
மையுற்றெழும்வேரிமலர்ப்பொழில்வாய். (௩௨)

விடபிச்சகுனத்திடைமேவியபுல்
லிடைகுப்புறலுற்றுவிழுந்திலகு
முடைதப்பியுணர்ச்சியயர்த்துயிரு
மடையக்கிடந்தன்னவனாயினனே. (௩௩)

அளிதூங்கிசைபாடிமிதிப்பவவிழ்
களிதூங்கியகாமுறுதாமமதுத்
துளிதூங்கியசோலையினூடுலவி
நளிர்தீம்புனற்சீகரநண்ணியெழும். (௨௪)

மந்தாநிலம்வந்துறைதவந்துணர்வு
தந்தேதகலுமுய்ந்துதெளிந்துதயங்
கைந்தோடுபின்னைந்தழகார்திசையு
நொந்தான்கணினோக்கிநுடங்கிழையோன். (௩௫)

மறைநன்குதெரிந்துவளர்த்துமகத்
துறையின்புறநின்றுசொலற்கரிய
விறைகொண்டுவருந்துமிருந்தவன்வாழ்
நிறைநெஞ்சினொடொன்றுநிகழ்த்துவனால். (௩௬)

வேறு.

மகத்தானவல்லவுறப்பெற்றேனந்தோ
மானமிழந்தேனினம்வரவேநின்றே
னைப்பானேனுயர்குலத்திற்பிறந்தேன்பாவி
நன்மைநெறியனுட்டித்தேன்புன்மைதீர்க்க
சுகத்தாதைவாக்கதனாற்சுருதியங்கந்
தொகுத்திடும்வித்தைகளனைத்துந்துலங்கக்கற்றே
னிகத்தோர்களேசவெனையீன்றதாயை
யிரக்கமன்றிமணிக்கழுத்தையீர்ந்தேன்வாளால். (௩௭)

வென்றிபெறுமுலகதனிற்கிதமேவேண்டி
மேலானவருந்தபசுவிளைக்கும்போதி

லொன்றுபழிமுன்பின்னுமிலதேயாக
வுயர்தாதைதமுடியைமன்னனொழிக்கக்கண்டே
னென்றனக்கோவுயிர்நீங்குங்காலமென்ப
தின்னம்வரக்கண்டிலனீதெல்லாங்கண்டும்
நின்றதுடல்சீசீயென்றிகழ்ந்துகூறி
னெடிதானதுயரமிகநினைந்தான்பின்னும். (௩௮)

வேறு.

சிவன்றனையுறுதியாகச்சிந்தனைசெய்யாநிற்ப
வவந்தருமபாயம்வந்ததென்கொலாச்சரியமென்றே
கவர்ந்திடுமனத்தனைக்கண்ணுதலடியார்க்கென்று
மிவர்ந்திடுமின்னல்வாராதென்பதுமிறந்ததேயால். (௩௯)

உருத்தெழுந்தாண்மைசெய்புமுயர்பவமொழியவென்றுந்
துரத்தலாற்சுருதிபோற்றத்துலங்குருத்திரனென்றோர்பேர்
தரித்துநற்சுகமுண்டாக்குந்தன்மையாற்சம்புவென்றும்
அருட்சுகமளிக்குமாற்றாலரியசங்கரனுமென்றும். (௪0)

பன்னுறுநாமத்தன்மைபாவியேனிடத்திலாதான்
முன்னரினீட்டாநின்றபழவினைமுதிர்ந்ததென்றே
நன்மைசேர்மனத்திற்றேர்ந்துநலிதருமிதனைநந்தோட
முன்னவன்பதமேயின்னங்குறித்தியான்முற்றுமார்க்கம். (௪௧)

ஆசறத்தெரிந்தவ்வாற்றாலருந்தவமிழைத்துத்தீராப்
பாசவேரகற்றிமேலாம்பரசுகம்பெறுவலென்றே
நேசமார்மனத்திற்சாலநிச்சயஞ்செய்துநீடு
மீசனின்கருணைச்செவ்வியியல்பினையெண்ணலுற்றான். (௪௨)

சிருட்டியேமுதலாயைந்துஞ்செய்பவனெவனோதீரா
விருட்டடைபாசமுத்தியெனையனுலாமோயாவ
னருட்டிருவடியைநெஞ்சிலழுத்தினக்கணத்திற்றேனே
மருட்டவிர்த்திடுமோர்வன்னமகிமையையுடையோன்றன்னை. (௪௩)

இணர்விரிபுறவஞ்சூழ்ந்தவினையவேற்காட்டின்மீதின்
மணமலிமலராற்போற்றிமனத்துறும்வாஞ்சையாவும்
புணர்குவதன்றிவாளாபோகுவதிலனையென்றே
புணர்வினிற்றிடஞ்செய்கின்றானுணர்ந்திறையுவகைபூத்தான். (௪௪)

### வேறு.

மனவலிகாண்டலும்மையமீன்றிடும்
புனையிழைகுமரர்கள்பொற்பிற்றோன்றவே
தனதுளமகிழ்ந்துதன்னுருவங்காட்டியே
முனைவனையெடுத்தனன்முளரிக்கையினால். (சரு)

கற்றையஞ்செஞ்சடைக்கடவுட்கைத்தலம்
பற்றலுங்குருதியாய்ப்படிவம்பைங்கழை
விற்பொலிமதனெனவிளங்கித்தோற்றினன்
மற்றவன்றனைவிழைவரமென்னென்றனன். (சசு)

ஆலமாமணிமிடற்றையன்கூறலு
நீலமேனியன்றுயர்நீங்கிநீத்தன
காலசெந்தாமரைக்கழலிற்றாழ்ந்துபின்
வாலியபணிமொழிவழங்கலுற்றனன். (சஎ)

மாமறைசாலவும்வருந்திக்காணருந்
தாமரைவாட்டியதண்ணஞ்சீறடி
பூமிசைநடந்துமெய்ப்பொலிவுகண்ணுற
வேமமிலெனைக்குறித்தெழுந்துங்கண்டிலேன். (சஅ)

அன்னையாயுலகமூன்றளித்துப்பேரறந்
தன்னையும்வளர்த்திடுஞ்சாந்தநாயகி
யென்னையுமொருபொருளாகவெண்ணியே
துன்றுகானகத்தினிற்சூழ்ந்துந்தேர்ந்திலேன். (சகூ)

அலகிலாமுனிவரரகத்தினேடரு
முலவையொன்றேந்தியவும்பன்மாமுகன்
கலவமாமயின்மிசைக்கலந்தகாவலன்
புலனிலேலுய்ந்திடப்போந்துங்கூர்கிலேன். (ரு0)

பிழைமொழிபெருகவும்பிதற்றினேன்றிக
ழழல்வளர்கரத்தவென்னறிவிலாமைகண்
முழுவதும்பொறுத்திடவேண்டுமுன்னவ
விழுதையேன்வேண்டுவதின்னமொன்றுள. (ருக)

அருட்கிடனாகவேயளித்தல்வேண்டுமென்
றிருட்பொலிமிடற்றனையிறைஞ்சிப்பின்னருங்
குருத்தெழுமுருப்பமதடக்கிக்கூறுவான்
றெருட்செமதக்கினியென்னுஞ்சீர்மையான். (ருஉ)

களங்கொழிதவம்புரிந்திருந்துகாசினிக்
குளந்தழையிதம்பலவுஞற்றிநிற்கவு
மளந்திடினரசரினதடமென்றுரை
விளங்குமுற்கார்த்திசேர்வீரியார்ச்சுனன். (ருங)

வேறு.

செல்வமாமுடியறுத்தனன்கறுத்தனன்றிகழுந்
தொல்லைநான்மறைதொடர்ந்தறிவருஞ்சுடர்ப்பொருளே
மல்குமென்பிதிர்வதைசெய்தமன்னர்தம்முழவே
மெல்லையுற்றவங்கிசந்தடிந்திரத்தவாரிதியில். (ருச)

இறந்தவையனுங்கிலங்கியதருப்பணமியற்றக்
குறைந்திடாவரங்கொடுத்தருளென்றுரைகுறித்தான்
சிறந்தவாசகங்கேட்டலுஞ்செக்கர்வான்மதிய
முறைந்தவேணியனவன்முனமொருகணப்பொழுதில். (ருரு)

அரியவங்கிசமாகியபரசைநோக்குதலு
முரியவப்பரசதினின்றுமொருபரசமைத்து
மருவுபாற்கவன்மலர்க்கரத்தளித்ததுவள்ளல்
தரியலார்தமைச்செயித்துவாமெனவுரைதந்தான். (ருசா)

உரைசெய்நாயகனின்றுதொட்டுனக்குமுன்னோங்கு
நரர்சுராதிபர்நவிற்றுபாற்கவனெனுநாமம்
விரவலன்றியேவிண்ணகத்திருநிலமிசையும்
பரசிராமனென்றிலங்கிடத்தகுமெனப்பகர்ந்தான். (ருஎ)

வாங்குபாற்கவன்மலர்க்கரஞ்சிரத்தின்மேல்வைத்துப்
பூங்கழைச்சிலைவேடனைவிழித்திடும்பொருளே
யீங்கிழைத்தவிச்சிவலிங்கமெனியமென்பெயரா
லோங்கவேண்டுமிவ்வுருவினிலுறைந்தருள்செய்து. (ருஅ)

பொருந்தவர்ச்சனைபுரிந்தவர்பரிந்தவர்போற்றி
யிருந்துளோர்களுமெண்ணரும்போகமதெய்தித்
திருந்தலார்தமைச்செயித்துவாழ்ந்திறுதியிற்றிகழ்நின்
விரிந்தபங்கயத்திருவடிசேர்தரவேண்டும். (ருகூ)

வேறு.

சிறியனேனியற்றியதீர்த்தமீதினிற்
குறுமுயலவன்சுடர்கூடுங்காலையி

ஊறுமதிதினத்தினிலுவந்துமூழ்கிநின்
னறிவருதிருவடியன்பினேத்தினோர். (௬௦)

செழியமாநிலத்தினிற்றிருந்துசெல்வராய்
வழிவழிபுத்திரர்மல்கநல்கெனத்
தொழுதனனிறைவனுமளித்துத்தோற்றிய
விழுமியவிலிங்கத்தின்மேயினனரோ. (௬௧)

இனையமான்மியந்தனையெழுதுகின்றவர்
மனநயனுற்றிடவாசித்தேத்தினர்
சினமிகுமறலிதன்றீமைதீர்ந்துதீ
வினைதவிர்ப்பாரெனவியந்துகூறினான். (௬௨)

படிமிசையோர்புகழ்பரசிராமனின்
றிடமுற்றகாதையைச்செப்பினமினிக்
கடிகமழ்மலரவன்கரியமாயவ
னடிமுடிதேடியவமைதிகூறுவாம். (௬௩)

பரசிராமச்சருக்கமுற்றும்.

ஆகச் செய்யுள் - ௭௭௮.

# அடிமுடிதேடியசருக்கம்.

ஆயுநான்மறைக்கவுசிகனகமகிழ்ந்தினிய
தூயதானமொன்றுளஃததன்றுலங்கியநாமங்
காயுங்கூற்றினைக்கடிந்தகாரணப்பெயர்கவினு
மேயவாய்மையீர்விளம்புவன்கேண்மெனவிதித்தான். (௧)

தொல்லைஞான்றுசிற்சிலமுனிவரர்கள்சூழ்பிறவி
வல்லிவாழ்க்கையினிறுதியைவரம்பறவொழிப்பா
னல்லிமாமலரயன்றனைக்குறித்தளப்பருநா
ளெல்லையில்லதோரருந்தவமிழைத்தனரினிதாய். (௨)

இசையும்யோகினாற்றரிப்பிலனாகியேரிலங்கு
திசைமுகத்தவனவ்வுழைக்குறுகியேசெறிந்தீர்
நசையினோடுநீர்விழைந்தனபகர்மெனநவிலக்
குசைகொள்கையினர்கூற்றினைக்கடிவரங்கொடுப்ப. (௩)

விரும்பினோமெனவதுவரற்கேதுவெண்மதியம்
பொருந்துநாதனைவேதமாபுரிதனிற்போந்து
பரிந்துபூசனைசெயிற்பலித்திடுமெனப்பகர்ந்தான்
றிருந்துபண்ணவர்விரிஞ்சனைவிடைகொடுசென்றே. (௪)

மாறிலாதவான்புகழ்மறைக்காட்டினைமருவி
யூறுமன்பினால்வேதவொண்புனலுவந்தாடி
நீறுதாங்கிநாண்மலரினானிறைமனதுருகி
யீறிலாமொழியாளிடப்பாகனையிறைஞ்சி. (௫)

போந்தவாய்மைசேர்காந்தநாயகனுறைபுடவிக்
கேய்ந்தமொய்ம்புறழ்பிங்கலன்றிசையிலோரிலிங்கம்
வாய்ந்திடும்படியமைத்தருச்சனைசெய்துவணங்கிச்
சேந்தநீவிழித்தென்றிசைக்கிறைவனைச்செயித்தார். (௬)

வெற்றிமேவியசுவேதனென்றுரைபெறுமேலோன்
செற்றநீக்கியேயவ்வுழைத்திகழ்சிவலிங்க
மற்றையொன்றருச்சனைசெய்துமறலிதன்வாதை
யற்றுநித்தியவாயுளும்பெற்றிருந்தனனால். (௭)

வலனுயர்த்தமார்க்கண்டயனென்றுரைவழங்கும்
புலனடக்கியமாதவனுமிடைப்பொருந்தத்
திலதமுற்றதோர்சிவலிங்கமருச்சனைசெய்தே
நிலவுகாலனைநீத்திடநிறைவரம்பெற்றான். (அ)

சாலங்காயனர்பவித்திரன்பூகரர்சாபத்
தாலங்காயுள்போகுதலுமச்சிறுவனையளித்தோ
னீலமாமணிமிடற்றனையிறைஞ்சியேநெடிய
காலன்றன்னையுங்கடிந்துயிரளித்தனன்கணத்தில். (௯)

இன்னவாறுபற்பலர்மிருத்துவைச்செயித்தீசன்
றன்னையர்ச்சனைசெய்துதீர்க்காயிசுசார்ந்தா
ரன்னதானமீதமர்ந்தருச்சனைசெயுமவர்கண்
மன்னுமாயுள்பெற்றடுமறலியின்வதைமாய்ப்பார். (க0)

வேறு.

காந்தநாயகற்கீசானமுத்திரத்திற்கலந்திடுநாப்பணிற்கவினும்
பாந்தளாபரணம்புனைந்திடுமுக்கட்பரன்மகாலிங்கநாயகன்றான்
சேர்ந்திடுந்தானமொன்றுளவதனிற்செங்கண்மால்விரிஞ்சனுஞ்செறிந்து
போந்தவண்பன்னாட்பூசனைபுரிந்தார்புரிதருநெறித்திறம்புகல்வாம். (கக)

முன்னொருஞான்றுதினப்பிரளயத்தின்மொய்வளையகலியமுதலாய்
மன்னியபொருளுமுலகமுமுவரிமடுத்தெழுந்தார்த்திடத்திமிரந்
தன்வசப்படுத்தவனையவன்றெரிந்துசத்தியவுலகினிற்றுயின்ற [ந்தே.
பொன்னிதழ்க்கமலத்தண்ணலங்கடவுட்பொருக்கெனப்படைத்திடவெழு

தெண்டிரைசுருட்டுமகரவாருதியிற்றிகழ்ந்தொளிர்சேடன்மேற்றுயிலுந்
தண்டுழாய்மார்பனறிதுயிலகற்றிச்சாற்றுதியாவனீயென்னக்
கொண்டெழுமுருப்பமடக்கியேதிகழுங்குவலையகாரணமான
விண்டெனவறிதியல்லையோவெனலும்வெகுளியங்கடலிடையாழ்ந்தான்.

ஆழ்ந்தவன்வடவாமுகஞ்சதுமுகங்கொண்டாணவப்பொறிகளைத்தாங்கிச்
சூழ்ந்தெழும்பொழுதிற்சுற்றியபுகையாற்றுகளுறுக்கவடிவினைச்சொலித்து
வீழ்ந்திடுங்கோபக்கனற்பொறியதனைவிரித்திடின்மரகதவண்ணம் [மால்.
போழ்ந்திருளகற்றுங்கவுத்துவமணியைப்போன்மெனப்புகன்றிடத்தகு

அன்னவன்வாராய்மாலெனுநாமத்தடங்கியபொருள்விரிக்குதியோ
வென்னையேயன்றியகிலகாரணனென்றின்னம்வேறொருவனுமுளனோ
சொன்னசொற்காற்றலென்கொலோவென்றுதுண்ணெனத்துள்ளிநின்றார்த்தான்
பன்னகப்பாயன்மாயவன்வெகுண்டுபனிவரைபொடிபடநகைத்தான். (௧௫)

ஏலுமிம்முறையாற்கூர்ந்துதேடிடினுமெட்டுணையேற்றிழிபின்றி
மாலுநான்முகனுமெய்விலாவாக்குவாதமேபுரிந்துமாமறைக
ளாலுநேடரிதாய்நாதமுங்கடந்தஞானவாருதிதனைநால்வர்க்
காலுறைந்தருளுமண்ணல்மாயையினாலளவிலாமோகிதராகி. (௧௬)

வேறு.

வருவர்நிற்றுவரிதழ்கடித்தணிவலையமற்புயவரையின்மே
லிருகைகொட்டுவரிடிவெருக்கொளவெயிறுறுக்குவரின்னவா
றொருவருக்கொருவர்களெதிர்த்தனருயர்நிலத்திறையொளிமிகுந்
திருவிலொத்திடுபுருவநெற்றியின்மிசைகுனித்தனர்சினவினர். (௧௭)

நிமிர்புயக்கிரிநெரிதரத்தழுவுவார்நெருக்குவர்சுழலுவார்
திமிரவெற்புடனிமையவெற்பொருதிகழுருக்கொடுபுரள்வபோ
லமர்வின்மற்பகைமுனம்விளைத்தனரடுசினத்தினரமைவருஞ்
சமர்விளைத்திடவலிமைபற்றியதனுவெடுத்தனர்கரமிசை. (௧௮)

தொலைவதற்கருமையசினத்தொடுதொடரலுற்றனரடல்கெழுஞ்
சிலைவளைத்தமைதொடைதொடுத்தொலிசெவிடுபட்டிடமுதல்விடுத்
திலகுடுக்கணைபிறைமுகக்கணையெழில்கொண்முட்கணையிவையெலாங்
கொலைபழுத்தெனமிகவிடுத்தனர்குருதிகக்கிடவுரறினர். (௧௯)

வேறு.

ஒழுகொளிபரப்பிநிறைமுருகுவிரிபதுமமலருறைதவிசெனப்பிரியமாய்
முழுதுலகளித்தெழுதவரியமறைபடப்பலவுமுறைபெறவிரித்தமுதியோன்
செழுமைகொளனற்பொறிகள்சிதறிடுதழற்பகழிசிரறுபுவிடுப்பநெடியோன்
விழுமியமழைக்கடவுள்கணைதனைவிடுத்தனன்விலிசைபெறவிழுத்துமிசையே.

அடையிருடுரத்திவளரலர்கதிர்விரித்துநிறையமுதினையுகுத்துமருவு
முடுபதிசரத்தையுரனுடனிறையெடுத்தரியினூரமிசைவிடுத்தனனவன்
கடலிடையுதித்துவளர்கனலெனமதிக்கமிகுகதிர்வெயில்பரப்புபகலோன்
படைதனையெடுத்துநிமிர்வரிசிலைகுனித்துவருபடையசைவிடுத்தனனரோ.

உரமிசைபடப்படவிலிருதலைகுனித்தசலவுறுகணைதொடுப்பமலரோ
னரவினினடித்தகருமுகிலுமனிலப்படையையதின்மிசைநடத்தினன்வளர்
வரமுறுபெயர்க்கணையையயன்விடவெதிர்த்தரியும்வருபெயர்தரித்தபகழி
பெருமையின்விடுத்தலகில்சவுரியபுயப்பெருமைபெருகவுமுனைத்திகலினன்.

இனையவகைபதுமமலர்நயனனுடறட்டுருவவிறையவன்விடுப்பவவனு
மனதினினினைப்பரியமறுகணைதொடுத்துவிடவருசமமுறச்சினவியே
பனிமதிமுடித்தபசுபதிபெயர்தரித்தகணைபதுமமலரிற்கிறையவன்
முனிவுடன்விடுத்தனன்றொழுகனல்பழுத்துவிழுமுதிர்சினமிகச்சிரறுமால்.

வசியொருகரத்தின்மணிவளையொருகரத்திலொளிவளையொருகரத்திலசுரர்
தசையறநொறுக்கிநிமிர்கதையொருகரத்தில்வளர்தனுவொருகரத்திலணிவோ
னிசைபெறுமுருத்திரமதனைவிடவெதிர்த்திறுதியிதுபொழுதடுத்ததெனவே
திசையொருபதிற்றுமனல்சொரிதரமலைத்தலைகள்சிதறிடவுடற்றியதுவே.

வேறு.

வந்துநான்முகன்வெப்பொடுவிட்டிடுமண்டுபாசுபதப்பெயர்நற்கணை
சிந்தையால்வளர்பொற்கொடியைப்புணர்செங்கண்மாயனடத்துமுருத்திர
மந்தமீதுகனற்றனலுற்றெனவண்டகோளம்வெடிப்பவெளித்திசை
யுந்திமேயினர்வெற்றிபெறத்தசமொன்றுமாயிரம்வர்ச்சரமுட்டின.

வேறு.

மாகமீதினிலிரண்டுபாணமுமலைந்துநின்றுபொரவல்லையி
லேகநாயகனிலங்குமோர்சுடரிலிங்கமாகவெழுகின்றனன்
நாகமுடுருவியண்டகோளகைநடுத்திறந்திடவிளங்கலுஞ்
சோகமோடுமிகவஞ்சிநின்றனதுரந்தவாளிகளிரண்டுமே. (௨௬)

ஆனபோதிலரியயனும்வெஞ்சமரகற்றிநின்றிதனையறிவமென்
றேனரூபமுடனெகினமாகியடியீறுமேன்முறையினேடினர்

போனகீழ்புவிசகத்திரவர்ச்சரமிடந்துபுக்குமறியாமையான்
மானம்வீரமுமறந்துமேதினியில்வந்துநின்றனன்மைவண்ணனே. (௨௭)

வாணிநாயகனுமோடியோடிமனநைந்துவார்சிறையொடிந்திட
வேணுநீடவவருடத்திலாயிரமியங்கநேடியுமறிந்திலான்
காணுமேகொலரியென்றுநொந்துபுவிமீதுசோர்வொடுகலந்தன
னீணிலந்தனையளந்தமாயவனுநேடிலாதெனவறிந்தனன். (௨௮)

வேறு.

தனைமதித்திருந்தவேதன்றளர்ந்தரிமுகத்தைநோக்க
வனைவருந்துயரின்போடயன்முகமவனும்பார்த்தா
னிமையளவேனுந்தாழாதிசைந்தபிணிதனைக்காணா
நமதெழினன்றென்றெண்ணிநணுகுமோகத்தாற்பின்னும். (௨௯)

வருமனந்தளரச்செய்யின்மாட்சியதன்றுவின்ன
மொருதரம்பார்ப்பமென்றேயுரைத்தனருரைக்குங்காலை
யிருவருஞ்செவியிற்கேட்பவிலிங்கமீதெழுந்தவின்சொ
லுருவமதாகத்தூயவுமைகொளோங்காரமொன்று. (௩0)

அம்மொழியதனினின்றுமாதிமாமறைகண்மூன்றிங்
கொம்மெனவெழுந்தவற்றைக்குறித்திடவல்லாரானோர்
செம்மைசேருருவந்தாங்கித்திகைத்தவர்தெருட்சிகூர
மும்மையுமுணர்த்துகின்றமுறைமையைமொழிவல்கேண்மின். (௩௧)

பூசுரர்கிருத்தினேடிப்போற்றிடப்படுவன்யாவன்
றேசினாலிரவியாதிதிகழ்தரச்செய்வன்யாவன்
மாசகன்மகிழ்வான்வையமகிழ்தரச்செய்வன்யாவன்
பேசருங்கருணைதன்னாற்பெரும்பதமளிப்பன்யாவன். (௩௨)

அனையவனீவிர்மோகமகற்றிவான்விரும்பியொல்லை
மனதினுநினைதற்கெட்டாமாட்சியவளர்ச்சிகாட்டி
யினையசெந்தழலார்சோதியிலிங்கமாயெழுந்தானென்றே
துணைவுடன்வாக்குத்தோன்றச்சொன்னதாலிருக்குவேதம். (௩௩)

வலத்தொடுவாமாங்கத்தின்வரனுமையளித்தோன்யாவன்
னலத்தகுமிதையமானநளினமீதிருந்துநீடு
முலப்பரும்பிரவஞ்சத்திலுறைந்தனுபவிப்பன்யாவன்
சொலப்படுமதனைமெய்யாச்சூழ்ந்திடுகின்றோன்யாவன். (௩௪)

அப்பிரவஞ்சமுற்றுமறிந்துமேயறியான்யாவன்
செப்பமாரன்றேனும்பாற்செனித்திடுமோகந்தீர்ப்பான்

வெப்பவார்கணையினுப்பண்விளங்கனற்பிழம்புபோர்த்த
விப்பரஞ்சுடரானுமென்றியம்பியதெசுருவேதம். (௩௫)

வேறு.

பெரிதான்றபிரமபதம்விண்டுபதம்பெறப்பணித்தபெரியோன்யாவன்
வருமூன்றுசத்திகட்குமதிட்டிதனுச்சின்மயிதன்வடிவமாகி
விரிவான்றபிரவஞ்சந்தமக்குமதிட்டிதனுகியிளிர்வன்யாவ
னொருஞான்றுநினைத்தவுடனுயர்கதிதந்தஞ்ஞானமொழிப்பன்யாவன்.

பரந்தசராசரங்களவையனைத்தும்வழிபாடுசெயப்படுவன்யாவ
னிரந்தரமாய்முத்தியருள்பவன்யாவனவனுமதுமோகநீக்கச்
சொரிந்ததழலிலிங்கமெனத்தோற்றினனென்றுயர்சாமந்துலங்கக்கூறி
விரிந்தவிருக்கெசுருடனேவிளங்குதழலிலிங்கமதின்மேவிற்றன்றே. (௩௭)

வேறு.

மறையொருமூன்றுமன்னவருத்ததின்மறைதலோடு
மிறைநெடுமாலுநீங்காதெழுந்திடுமோகநீங்கி
யுறையுமிவ்வுருவநம்மாலுணர்வுறற்கெளிததன்று
கறைமிடற்றிறைவனென்றேகருதியேதுதிக்கலுற்றார். (௩௮)

எண்ணருங்காலம்வானிலிருநிலம்பரப்பிற்றீயி
லண்ணல்வான்கிரியினின்றுமருந்தவசியற்றினோர்க்குங்
கண்ணினிற்காண்டற்கெட்டாக்காரணவடியேமுய்ய
விண்முகடளந்துநின்றவிமலனேசரணமெந்தாய். (௩௯)

முடிவிலாவின்பமானமுதல்வனேசரணமுன்னாட்
கடுநுகர்ந்தெம்மனோரைக்காத்தனைசரணங்காலன்
படிமிசைவீழக்காய்ந்தபதாம்புயசரணம்பண்பி
லடியனேமறிவிலாமையகற்றினைசரணமாமால். (௪௦)

அனித்தியமகற்றிநின்றவாறுவான்பொருளிலொன்றாய்
நினைப்பகர்ந்திடினுமின்பாய்நின்றனைசரணநீங்கா
தனைச்சிறிதேனுங்காட்டாதன்னியங்காட்டிநிற்கும்
வினைத்திறலிருளைநீக்கும்வித்தகாசரணமென்றார். (௪௧)

வேறு.

பரவியிடுமவர்காணப்பான்மதியஞ்சென்னிவைத்தபரமன்றோன்றக்
கரகமலஞ்சிரமீதிற்கவித்துமலரடியிறைஞ்சிக்கண்ணீர்சிந்த
வரனுமதுபெருமோகமகன்றனவாவிருதொழிற்காயவனிமீதில்
வரமுறமுற்பவஞ்செய்தீரன்றலவாவிவண்வேண்டும்வரம்யாதென்றான்.

செங்குமுதமலர்வாக்குத்திறந்துமதுத்துளித்ததெனச்செப்பலோடு
மங்கமெலாம்புளகிதமாயார்த்திநிவாரணஞ்செய்தவமுதைநோக்கிக்
கங்கைநதிதவழ்சடைபோய்நீயென்பாற்பிறந்துவருகற்பந்தோறுந்
தங்கியிம்மோகமதுதவிர்ந்துவினைத்தொழிற்செய்யத்தருதியென்றான்.

கஞ்சமலரயனன்னவுரைசெய்யப்புண்டரிகக்கண்ணினானு
மஞ்சலிசெய்தழகியநின்னைங்கிரியர்ச்சனைக்கிடையூறணுகாவண்ணம்
வஞ்சமிகுத்திடுமோகமீளவும்வந்தணுகாதவண்ணங்காத்து
நஞ்சணியுமிடற்றானேயருள்செய்யவேண்டுமெனநவின்றானம்மா. (௪௪)

வேறு.

குடவளைகரத்திலேந்துங்குளிர்புயல்வண்ணன்கூற
விடபவாகனமுகந்தவிறைவன்வாய்மலர்ந்துநீவிர்
திடமுறவிழைந்துபூசைசெய்திடக்கடவதன்றி
மடல்கொளுந்தருநாட்டோரும்வழிபடக்கடவதன்றே. (௪௫)

அறந்தழைதிருவேற்காட்டினதனிடையலங்குஞ்சோதி
சிறந்திடுமிலிங்கமாகத்திகழுவஞ்செகத்தின்மீது
நிறைந்தவாகாண்டல்செய்யநெடியவுமரிதானீவிர்
மறந்தபக்கண்ணிற்றோற்றும்வடிவமாய்வனத்தின்பாங்கர். (௪௬)

இலிங்கமொன்றமைத்துப்போற்றியிருதொழிற்பெறுமினென்றுந்
துலங்குறமனத்திலுற்றதுகளறநீவிர்போற்றும்
நலந்திகழிலிங்கந்தன்னைநவின்றவர்தொழுதோர்நாளு
நிலந்தனின்மருட்சிநீங்கிநீடியதுயரநீப்பார். (௪௭)

தென்றிசைக்கிறைவன்சீறுஞ்சீற்றமுஞ்சிறிதுகாணார்
வன்றிறலிலங்கானின்றமாநிலப்பரப்பின்மீதிற்
றுன்றியபோகம்யாவுந்துய்த்துயர்வானோர்சூழும்
வென்றிசேர்கயிலைவெற்பின்மேவுவரனந்தகாலம். (௪௮)

நிலந்தனிற்றவஞ்சன்னியாசநியதிகள்கிருதுதான
நலம்பெறும்விரதந்தன்மநவின்றனயாவுந்தேரி
னிலங்குமோரிலிங்கம்பூசையியற்றுநர்க்கெய்தாநின்ற
பலந்தனிற்கோடிகூற்றோர்பங்குறும்பலனிற்கொவ்வா. (௪௯)

எவ்வகைக்குலத்தாரேனுமிலிங்கமொன்றருச்சித்தோர்க்குப்
பவ்வசாகரங்களில்லைபார்மிசைச்செனித்தாரேனுங்
கௌவைசெய்காலன்வாதைகாண்குவதில்லைமோக
மவ்வியந்துயரமற்றுமவர்களுக்கில்லையாமால். (௫0)

வீசுமெய்ப்புகழ்சேர்விண்ணோர்விஞ்சையரசுரர்ரெட்சர்
நேசநால்வருணத்தோனுனிகழ்சிவார்ச்சனையின்மீதி
லாசறத்திகழுமெய்யிலனுதினமணியவாய்த்த
தேசுறும்வெண்ணீறக்கமணிதனின்மோகந்தீர்ந்தோன். (௫௧)

கடையெனும்புலையனில்லங்காத்திடுங்கருஞ்சுவான
வுடலுனுமவரினின்றுமொழியவுமிழிவரென்றே.
படரொழியயன்மால்கேட்பமும்முறைபகர்ந்துபோந்தான்
றிடமுறுமயனுமாலுந்திருந்தும்வேற்காட்டின்மேவி. (௫௨)

வேதவான்புனலின்மூழ்கிவிளங்கும்வெள்வேலின்மூலச்
சீதநீழலிற்சிறந்தசெல்வனைப்பணிந்தேயன்ன
நாதனுக்கீசானத்தினலன்செய்யுத்தரத்திருப்பண்
ணோதருமிலிங்கந்தன்னையுண்மையாயமைத்தேயம்மா. (௫௩)

வருமகிழ்சிறந்தபேருமாசிலாமணியென்றோதிச்
சுருதியின்முறையாற்போற்றித்தூயமஞ்சனநீராட்டி
முருகவிழ்பள்ளித்தாமமுறைமுறையருச்சித்தேத்திப்
பெருவரம்பெற்றுமீண்டுபேருலகளித்தார்மன்னோ. (௫௪)

இந்தமான்மியத்தையோர்காலெண்ணினரெழுதினோர்கள்
சிந்தனைசெய்தோர்பார்மேற்றிருந்தியபோகமார்ந்தே
நந்தியெம்பெருமான்காக்குநன்மலையுறைவரென்றே
முந்துநான்மறைகடேர்ந்தமுனிவரன்மொழிந்தானம்மா. (௫௫)

அலங்கனற்சுடராய்நின்றவண்ணருமறையையாய்ந்தே
பொலன்சிறையெகினத்தோனும்பூவைமாமேனியானு
முலைந்துலைந்தோடித்தேடுமுண்மையையுரைத்தாமிப்பால்
வலம்புரிநெடியோன்பெற்றவண்மையைவகுத்தல்செய்வாம். (௫௬)

அடிமுடிதேடிய சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள் - ௮௬௪.

# வலம்புரிச்சருக்கம்.

நிலவுமிழ்பலமணிசொரிந்துநீடிய
வலைதவழ்பாலியங்கரையிலன்றியே
நலநிறைமரகதநாதன்கீழ்த்திசை
தலமுளதெனமுனிசாற்றன்மேயினன். (௧

### வேறு.

தாதவிழ்வாகைதரித்ததனுத்தசரதன்மைந்தன்
மூதெயில்சூழிலங்கையின்மன்னவன்முடிசாடிப்
போதருபாவவிமோசனமாகப்புனைபோராற்
சேதுவிலொர்சிவலிங்கமமைத்தர்ச்சனைசெய்தான். (௨)

அத்தகும்வேலையிலாளுடைநாயகனவணெய்திக்
கொத்தலர்மேவிமதுச்சொரிபைம்பொற்கொடியோடு
நித்திபத்தியினர்ச்சனைநெறிபுரிரகுராமன்
சித்தமுதித்தவரத்தையளித்தருள்செய்கின்றான். (௩)

அருளும்விடைக்கொடியிறைவனைநத்தடுசிலைவீரர்
மருள்கடவிர்த்தனையுயர்கதிபெற்றிடவளர்வேதப்
பொருள்வனமுற்றுநினெழில்கொடிருத்தருபுனைபோராற்
றெருளுமணிச்சிவலிங்கமருச்சனைசெயவென்றான். (௪)

காழுறுமேழுமராமரமுருவக்கறைமேவுங்
கேழடுவாளிதொடுத்துவிடுத்திடுகிளர்தாமப்
பாழிநெடும்புயமன்னனெழுந்துபணிந்தேகி
வாழியசீதையினோடுவிமானத்திடைமன்னி. (௫)

வல்லுளியெண்குவயப்புலிமாகடொய்சீயம்
பல்பலமண்டியதில்லமகன்றுழுபடர்மள்ளர்
கல்லெழுசும்மையதண்பணைநாடுகடந்தாரு
மொல்லைவளந்தரும்வேதவனந்தனிலுறைகின்றான். (௬)

### வேறு.

வண்டுமுரல்செழுங்கமலமலர்விழியான்றேவர்கண்டமடுவிற்றோய்ந்து
கொண்டலெழுவதுமானவெழுந்துநிகமேசனடிகும்பிட்டேத்தித்
கண்டரளமணிசொரியக்காந்தநாயகன்கோயிற்கவினுங்கீழ்பா
லெண்டிசையும்புகழ்பரப்பியிலங்குமிராமேசனென்றோரிலிங்கஞ்செய்தான்.

நறவுதுளித்திடுந்தெரியனறுமலராலுளங்கனிந்துநயந்துபோற்ற
விறைவனுமையுடன்வெளிநின்றியற்றுமருச்சனையுவந்தேமெய்தாநின்ற
சிறைகொள்பவச்செடமுழுவதுந்தீர்ந்தசீதையொடுந்திருந்தச்சூழ்போ
யறைபதினாயிரம்வருடமணிமாடவயோத்திதன்னிலரசாளென்றான். (௮)

மழுவினொடுதிரிகோட்டுமறியேந்துமலர்க்கரத்தான்வழங்கச்செவ்வி
தழுவுநெடுமதிலுடுத்தவயோத்திநகர்தனைச்சார்ந்துதயங்கும்பைம்பொ

னொழுகுமெழிலொளிபரந்தமுடிசூடியகிலமெல்லாமொருகோலோச்சி
யெழில்கொண்மணிப்பீடிகையினினிதாகவாண்டகைவீற்றிருந்தான்மன்னோ.

மன்னனுயிர்புரந்தளித்துவளர்காலந்தனிலோர்கால்வரம்பில்சீர்த்திப்
பொன்னிமிருமணிக்கழல்சேர்புதல்வரிருவருமவன்றனருளாற்போந்து
கன்னல்கமுகெனத்திகழுங்கழனிவளர்வேதவனங்கண்ணுற்றோங்குந்
தன்னிகரிலமுதமெனத்தயங்கிநிறைதரும்வேதசரசின்மூழ்கி. (க0)

ஏடாருமிதழியந்தாரினிதணிந்தநிகமேசனிருதாள்போற்றி
நீடாழிசூழ்புவியினிறைபுகழ்சேரகுராமனியமஞ்செய்த
பீடாரும்பெருமானுக்கங்கிதிசைதனிலிலிங்கம்பிறங்கச்செய்தே
நாடோறும்வளர்ந்தேறக்குசனென்போனருச்சனைகளயர்ந்துசெய்தான்.

திருந்தலர்தம்முயிர்குடித்துநெய்தவழுங்கதிரிலைவேற்செம்மறேவ
ரருந்துமமுதெனவுயிர்கட்கருள்கூருமிலவனென்போனந்தண்காவிற்
பொருந்தரகுபதியமைத்தபொருவில்சிவன்றனக்கீசத்திசையிற்போற்றி
வருந்தியொருசிவலிங்கம்வகுத்துமருமலரதனால்வணக்கஞ்செய்தான்.

அடுபுலியின்குருளையெனவளருமிருவருநெடுநாளரியதேவர்
மடுவதனிற்படிந்தாடிவளர்வேதவனப்பெருமான்மலர்த்தாள்வாழ்த்திப்
பொடிகொடிருநீறெனவேபுனிதமுறுமனத்தின்விழைபோகம்யாவும்
வடுவுறழ்வேற்கண்ணிபங்கனளித்தருளப்பெற்றுமிகமகிழ்வுபூத்தார். (கங)

அண்ணலந்தோண்மணிமார்பர்மூவர்களுமமைத்ததலமதனையோர்கா
லெண்ணுநர்கள்கற்பகநாட்டிறையாவரத்தலத்தினினிதாயோங்குங்
கண்ணுதலைவழிபடுவோர்கயிலைதனிலளப்பரியகாலம்வாழ்வார்
விண்ணுலவும்வேன்மூலமதனிலுளதொருதானம்விரிப்பலென்றான். (கச)

வேறு.

முந்தொருகாலந்தன்னின்முகிழ்த்திகழ்வாடாதோங்கு
முந்தியங்கமலமீதிலுதித்தநான்முகனுமன்னோன்
றந்தையுமகவான்விண்ணோர்சாத்தியர்குழுமிநெஞ்சி
னொந்தனரசுரர்செய்புநோன்புகள்பலித்தனோக்கி. (கரு)

அனையர்களகிலகோடியணுவினுக்கன்புகூர்ந்த
நனைவருமூரற்பாகனளினநாண்மலர்த்தாணெஞ்சி
னினைவுசெய்நேசராகிநின்றுநன்னியதியாவு
முனைதபுமாற்றாற்சாலமுற்றுதல்கூடவன்றி. (கசு)

பெர்ந்தினைப்பொருவுந்திண்காற்பொதியிருளுடலராகி
சிந்தனைநிகழ்த்திநிற்குநிருதர்கணினைத்தயாவு

நந்தவிக்கினங்கள்செய்புநாயகற்றருதலெண்ணி
மந்தரகிரிக்குச்சென்றுமழுவலான்றன்னைநோக்கி. (கஎ)

மேயவர்வாய்மையென்றுமெய்ந்நெறியிலக்காநின்ற
தீயவைம்புலனும்வேடர்திண்டிறலடக்கிச்சிந்தை
நேயமோடுருகக்கண்ணினிகழ்புனல்பெருகநீங்காத்
தூயவாலறிவுபொங்கத்துதித்திடலுற்றாரம்மா. (கஅ)

வேறு.

உழைவாண்மழுவெம்படையாய்சரணமொளிசேரிதழித்தொடையாய்சரண
மிழையார்புரிநூலணிவாய்சரணமெளியாய்வலியாய்சரணஞ்சரணங்
குழையார்செவியாய்சரணஞ்சரணங்குறியோர்குணமில்லவனேசரணங்
கழைமேவியதோளுமையாளுறையுங்கருணாநிதியேசரணஞ்சரணம். (கசு)

மறைநேடரியாய்சரணஞ்சரணம்வயமாவுரியாய்சரணஞ்சரணங்
குறையாதெழுநஞ்சமுதாய்நுகருங்குருமாமணியேசரணஞ்சரணம்
பிறைநீர்மலிசெஞ்சடையாய்சரணம்பெருமால்விடைமேல்வருவாய்சரண
மிறைவாசரணஞ்சரணம்பிறியாதெமையாளுடையாய்சரணென்றார். (உ0)

வேறு.

அனையர்கடுதிகேட்டின்புற்றையனேர்நின்றுநீவிர்
மனதினிலெண்ணுநின்றவரமெவனென்னயாங்க
ணினைவுறுகருமங்கூடநிசாசரர்நினைத்தயாவு
முனைதபவொருவற்றந்துமுன்னவவருள்செயென்றார். (உக)

தேவர்கள்பெருமானைக்கிச்சிறுநகைகோட்டிவாடு
நீவிர்கணினைத்தயாவுநிலைபெறக்கடவதென்றே
மாவுறழ்கண்ணாள்போற்றமறைந்தனன்மறைதலோடு
மேவருமிருக்கையெய்தியிருந்தனரினையவேலை. (உஉ)

வேறு.

துங்கமந்தரகிரியதனிற்றோற்றிய
திங்களினறுஞ்சுதைதீற்றுமாடமேற்
பொங்கியவோவியம்பொலித்தசாலையின்
மங்கலையுடனிறைமகிழ்ந்துபுக்கனன். (உங)

பல்லவமருட்டியபாததாமரைச்
சில்லரிச்சிலம்பொலிசிலம்பப்போதரும்
வல்லிநுண்மருங்கின்மாமயிலுக்கோவிய
மெல்லவேகரத்தினாற்காட்டிமேவினான். (உச)

காருறுமகிற்புகைகமழுமாடமே
லோரெழுகோடிமந்திரத்தினோடுறைந்
தேருபமனுக்களுமிருத்தல்மாட்டினை
னேரிழைபடைக்கணோடுநோக்கினள். (௨௫)

கயல்பொருநெடுவிழிகதுவநோக்கிய
புயல்வளர்கொந்தளப்பூவைமுன்னரிற்
செயலுறுமிருபிரணவத்தின்செவ்விபார்த்
தியலுமிவ்விரண்டும்யாதென்றுகூறினள். (௨௬)

வேறு.

மய்யுண்கண்ணிமடந்தைபகர்தலு
மய்யன்கைபுனையாய்வளைகேண்மதி
மொய்கொண்முன்னதுமூவர்வழிபடற்
கெய்துந்தானமதெம்பரமென்றனன். (௨௭)

தடங்கணாய்திரிசத்தியளிப்பதீ
யிடங்கொடானமதுன்பரமென்றுமேற்
றிடங்கொள்வேதந்திரிவிதமானவை
யடங்கலுமிவ்விரண்டிலடங்குமால். (௨௮)

வேறு.

இனையதன்மையாயிருவரும்புணர்ந்தினிதிருப்பேம்
வனைமலர்க்குழல்வருதியென்றும்பன்மாமுகத்த
தனைநிகர்ப்பருபிரணவமுருவமாய்ச்சமைந்தே
யனையகாலையிற்சம்பவித்திருந்தனனதனால். (௨௯)

அண்ணல்யானைமாமுகத்துடனொருசுதனகிலம்
விண்ணம்பாதலந்துதித்திடவுதித்தனன்விழைந்து
நண்ணுமைந்தனைக்காண்டலுநளினவாண்முகத்து
வண்ணவார்குழலெடுத்தணிமடியின்மேல்வைத்தான். (௩௦)

குழவிவெண்மதிதவழ்கருங்கொன்றைவார்வேணி
யழகனுச்சிமோந்தவிரொளிநவமணியழுத்தி
யெழுதிமெய்ந்தொளிர்பீடிகைமீதில்வைத்தினிதாய்த்
தழுவியையன்மெய்யெழிலெலாம்பார்த்துளந்தழைத்தான். (௩௧)

வேறு.

முருந்திளமுறுவலன்னார்முகிழ்நிலாக்கற்றைகான்று
வரும்பனித்திங்கள்சென்னிமலைமிசைதவழ்தன்மான

விரிந்தசெங்காந்தளங்கைமெல்விரலதனாலள்ளித்
திருந்தெழுபொழில்காப்பாற்குத்திருநீற்றுக்காப்பிட்டார்கள். (௩௨)

பெய்வளையிறுவாய்த்தபிரணவப்பிள்ளையார்தங்
கைவிடுமரக்கர்தம்மைக்கறுவிடுமாறுபோல
மைதிகழ்துதிக்கைதூங்குமணிமுடியெடுத்துவாய்ந்த
தெய்வவுத்தியுநின்றாடச்செங்கீரையாடல்செய்தார். (௩௩)

பண்ணமைகுதலைத்தீஞ்சொற்பார்மகள்பனுவலாட்டி
யண்ணறுமறைமேல்வாழுமவிரிழைவடங்கொட்டாட்டத்
தண்மலரமளிமீதிற்றுதியர்வளர்த்திவாழ்த்திக்
கண்வளர்கண்ணேயென்றுகனிந்துதாலாட்டினார்கள். (௩௪)

சுட்டிபொற்பதக்கமாடத்தோள்வளையரைஞாண்மின்ன
மட்டவிழ்கமலக்கையின்மணிவளைவாய்விட்டார்ப்ப
வட்டுயிருட்டலந்தின்னுமசுரர்தம்மெண்ணமெல்லாந்
தட்டுவமென்பார்போலச்சப்பாணிகொட்டிநின்றார். (௩௫)

வேறு.

பின்னற்றிகழுங்கருங்கூந்தற்பிடியோர்பாகன்பெருநிலத்திற்
றன்னைப்பொருநேரிலராகத்தானேயுவமைதனக்காக
மன்னப்பயந்தபிள்ளையார்வருஞ்சில்லோதிமடவரற்குக்
கன்னற்கனிதேன்சருக்கரையிற்கனிவாய்முத்தமருளினார். (௩௬)

ஆறுமறைகள்பலகலைகளனைத்தோருருவரவர்தம்மைத்
தேனேகனியேநவரசமேதெள்ளாரமுதேசிரோமணியே
யூனேயுயிரேயுயிர்க்குயிரேயும்பலுருவேசற்குருவே
வானோர்குறைதீர்கற்பகமேவருகவருகவெனவழைத்தார். (௩௭)

செய்யமலர்மேலுறைபிரமன்சிருட்டிநினைச்செய்திடும்போது
கையைந்துடையபெருமானைக்கருதாதமைத்தானதினன்றோ
மெய்கள்வெளுத்துச்சிலகருகிமெலிந்துகுறைந்தாய்குறைதீர
வையனுடனேயம்புலிநீயாடவாவென்றழைத்தார்கள். (௩௮)

அலையார்புனற்செஞ்சடைப்பெருமானளித்தவருமைப்பிள்ளையார்
கலையார்மதிபோல்விளங்குமுகிர்க்காலிற்சதங்கைமணிகறங்க
வுலையாதோடிமுகத்தின்வெயர்வொழுகப்புழுதியளைந்தாடிச்
சிலைவாணுதற்பேதையரிழைத்தசிற்றின்முழுதுஞ்சிதைத்திட்டார். (௩௯)

இனிநம்மிடர்களொழிந்தவெனவிமையோர்துதிப்பவிறைதுதிப்பப்
பனிகொள்விசும்பிற்படர்கணங்கள்பலருந்துதிப்பப்பசுந்துளபப்

புனிதன்றுதிப்பப்பொன்னுலகம்புரப்போன்றுதிப்பப்புவிதுதிப்ப
முனிவர்துதிப்பச்சிறுபறையைமுளரிக்கரத்தான்முழக்கினார். (௪0)

உம்பர்க்குயர்மந்தாகிரியிலுதித்தவோடைப்புகர்முகத்திற்
றும்பிக்கரமொன்றேந்திவருந்தோன்றற்றுணைவர்புடைசூழ
விம்பக்கனிவாயிதழுமையாள்வேற்கண்களிப்பவிளைந்தோடிச்
செம்பொற்பருதிபூட்டிவளர்சிறுதேருருட்டியருளினார். (௪௧)

வேறு.

தவத்திலுதித்திடுமதலைவிளையாடுமவ்வேலைசாந்தமூழ்கிக்
குளித்துநெறித்தெழுந்துமணிவடஞ்சுமந்தவிளமுலைதன்கொழுநன்பாற்சென்
றெவர்க்குமறிவரியானைநின்புதல்வன்கணாதிபர்மற்றேனையோர்க்கு
நவப்பிரமர்தமக்குமதிபதியாகவேண்டுமெனநவின்றாளம்மா. (௪௨)

முகையவிழ்ந்துமதுத்துளிக்குங்கூந்தலிளம்பிடிமொழியமுன்னோனோக்கி
நகைபுரிந்துமறைமுனிவர்விண்ணவர்மாலிந்திரனுநளினத்தோனுந்
தொகையகன்றவண்டமிசைத்தவமியற்றுஞ்சுராதிபருந்துவன்றியார்ப்பத்
தகைநெடுங்கட்கடைகாட்டியருளினளக்கணத்திலவர்சார்ந்தார்மன்னோ.

குழுமுதலுந்துடையில்வைத்துக்குலவுசிவனிவனண்டகோளமாதி
விழுமியபற்பலவுலகமனைத்தினுக்குநுங்கட்கும்வேந்தனைச்
செழுமுடிசூட்டிடத்தகுவதெனமகிழ்ந்துசிறந்ததிரவியங்களெல்லாம்
வழுவறவேயமைத்திடலுமணிச்சிங்காதனத்திறைவன்வைத்துப்பின்னர்.

கறங்கியதெண்டிரையுடுத்தபூதலம்பாதலந்திகழாகாயமீதி
லறம்புரிந்துவளருநர்க்குமளப்பரும்விக்கினங்களுக்குமதிபனாக
நறும்புனன்மந்தாகினிநீர்பரிந்தாட்டிச்செழுங்கலவைநானங்கோட்டிச்
சிறந்தமணிமுடிசூட்டித்திருமுகமண்டலங்காட்டிச்செப்பலுற்றான். (௪௫)

நீவிர்நினைத்தனகருமநிலைமைபெறப்பிறையெயிற்றினிணங்கடோய்ந்த
தீவிழிக்காய்சினவரக்கர்செயலனைத்தும்விக்கினமேசெய்யச்செம்பொற் [பி
ருவிலொளிமுடிதரித்தேமெனவிறைவன்மகிழ்ந்துரைப்பத்தளிர்க்கைகூப்
மேவியவானவர்கண்மலர்மழைமாரிபொழிந்திறைஞ்சிவியப்புற்றார்கள்.

பீடிகைமேலினிதிருக்கும்வேழமுகப்பெருமானைப்பின்னுமேத்தி
வாடியபைங்கூழ்தளிர்ப்பவான்வழங்கிற்றெனவடியேமனத்தின்மீது
நீடியதுன்பனைத்தினையுநீக்குநினதருள்வாழிநின்றாள்வாழி
வீடுபெறநினையளித்தோன்மிகவாழியெனவாழ்த்திவிடைகொண்டார்கள்.

தேவர்பிரிதலுங்கடுக்கைதிகழ்சடிலப்பெருமான்றன்றிருத்தாள்போற்றிப்
பூவைதிருவடியிறைஞ்சிவிடைகொண்டுபொருவில்கணம்புடையிற்சூழ

மூவுலகுமொருகொடியிற்கறங்கெனவேசுழன்றுடுக்கண்மூவொன்பானு
மேவல்செயவளர்மதியமிரவியையும்பிடித்தாடியிருக்குநாளில். (௪௮)

வேறு.

சந்திரப்பிறையிற்றோற்றுந்தடமருப்பிலங்கத்தாங்குஞ்
சிந்துரானனத்தோன்றாநீர்த்திருவிளையாடல்செய்யக்
கொந்தழற்கதுவுஞ்சீற்றக்குண்டுகட்கணங்கள்சூழ
மந்தரகிரிபோலேம்றுமறிதிரைக்கடலிற்சார்ந்தான். (௪௯)

தன்னைநேர்வரியநாதன்றுவில்பல்வளங்கள்சூழ்ந்த
வன்னவமதனைநோக்கியணிமுடியசைத்துத்தாண்டி
நன்னிதிசிதறப்பாய்ந்துநலிதரவுழக்கிவாரிப்
பொன்மலையதனில்வீசிப்புடைத்தனன்புடைத்தலோடும். (௫௦)

மொய்கொணீர்த்தரங்கந்தாவிமூரியங்கரைமேலேறிக்
கைநடுக்குற்றுமீளுங்காட்சியக்கடற்குமன்ன
ஐய்யுமாறிலமென்றெண்ணியோடுதல்போலுமாடு
மையனூங்காரந்தன்னுலலறியேமீடல்போலும். (௫௧)

உந்துநீர்ப்புணரிமேயவுன்னிவானிடையின்மன்னி
வந்தமாமுகிலோர்பாலின்மடுத்துவானேறுங்காட்சி
முந்தைநாளுவரிமீதின்முழுகியேகிடவாநின்ற
வந்தமைநாகமஞ்சியண்டமீதோடன்மானும். (௫௨)

வலமுறுமையன்சோதிமணிவளையெறியவாளிற்
றலைமயக்குற்றுமீண்டுசலதியிற்படியுங்காட்சி
யலர்கதிர்பரப்பும்வெய்யோனவிர்மதிவெருவிச்சூழு
நிலைதடுமாறிவீழுநெறிதனைநிகர்க்குமாதோ. (௫௩)

புடைவருகணங்கள்வீழப்பொங்கிமேலெழுந்துதாவு
முடைதிரைமிசைநின்றுலுமொண்கொடிப்பவளக்காட்சி
யடையலர்புரங்கணூறுமையன்வாழ்மதலைக்கஞ்சி
வடைவநீள்விசும்பிலோடவழிகள்பார்த்திடுதன்மானும். (௫௪)

நீடியவினையவேலைநீரொலாங்கொதிப்பநீங்கா
தாடியபெருமான்சீறியாகிருடிக்குங்காலைச்
சேடுறழ்மகரம்வன்மீன்றிமிங்கலகலத்தினோடு
பீடுசேர்கமஞ்சூற்கொண்டற்பிறங்கொளிபெருகுமாயோன். (௫௫)

ஓங்கெழிலுந்திமீதிலுதித்தநான்முகனுமார்பிற்
றூங்கியதிருவுஞ்சேடசயனமுஞ்சலத்திற்போத்த

தூங்கியதுதிக்கைத்தூம்பிற்சூழ்ந்துமேலோடிவீழ்ந்து
மாங்கவன்பட்டதுன்பமறிந்தியார்குணிக்கற்பாலார். (௫௬)

வேறு.

வெருவினையகர்புனலைபெறிந்தேவிளையாடத்
திருவொடுமாலயனீடுமனந்தன்றிகழ்பார்மேன்
மருவியபலபலதிசையின்விழுந்தேவந்தேபின்
றொருபுடைகூடுவருந்தனமென்றேயுரைசெய்வார். (௫௭)

மத்தகேசானனத்திறல்செய்தேவருகின்ற
வித்தறுவாயினின்மொய்த்திடுபூவையினிதழ்வண்ணன்
கைத்தலமேவியவெற்றிசெயம்படைகாணாது
சித்தமகாவிதனத்தொடுதேடுதல்செய்கின்றார். (௫௮)

அல்லலுழந்துமெலிந்தவர்தேடலுமவைமீதி
னல்லியன்மேவியநான்மையுநேருற்றனநாதம்
புல்லியவால்வளைபோயதுபோகப்புயல்வண்ணன்
சொல்லருமல்லலெனுங்கடன்மூழ்கித்துயர்கின்றான். (௫௯)

வேறு.

கடகயமுகத்திறைன்வெண்கயிலையங்கிரியைச்சார்ந்தான்
படர்தருநாளிலோர்நாட்பரவைபோற்குமிறக்கேட்டு
நெடியவனமதுசங்கநிச்சயமென்றுநீங்காப்
புடைபடுகணங்கடுண்டப்போயினகணங்களம்மா. (௬0)

இறுதிநாணம்மனோர்க்கென்றெண்ணியேபோதாநின்ற
விறலுடைக்கணங்களோங்கும்விளியினாலுணர்ந்துமீண்டு
பிறிதியாதுரைப்பதென்னைபெருங்கணநாதன்வாய்மை
யுறுதிகொள்கணங்கடம்பாலுற்றதென்றுரைத்தாரன்றே. (௬௧)

வருத்தலுஞ்சூழ்போயும்பல்வதனைக்கேளானாகித்
தொகுப்பருங்கருணைநாதற்றொழுதியாம்பெறுவமென்றே
பகுத்துநீள்சிறையசெங்கட்பன்னகவயிரிமீதிற்
சகத்தினையளிக்குஞ்செய்யதாமரைக்கண்ணனேறி. (௬௨)

சந்தமென்றளிரும்போதுந்தழைந்துநற்கனிகடாங்குங்
கந்தவார்பொழில்கள்சூழுங்கயிலையங்கிரியைச்சார்ந்து
நந்திபான்முறைசெய்தேகிநாதனைப்பணிந்துபோற்றி
யெந்தைநீயடியேற்கிட்டவிணங்கியபணிசெய்கின்றேன். (௬௩)

ஆண்டுவெண்மருப்பதேந்துமாம்பன்மாமுகத்துமைந்தன்
றூண்டியதரங்கவாரித்தண்புனல்குடைந்தானன்றோ
னீண்டிடுந்துதிக்கைத்தூம்பினேர்ந்தியான்பிழைத்துநீங்கி
மீண்டனன்மீளும்வேலைவிழுந்ததுபணிலமென்றான். (௬௪)

மாசகனிலவுகாலும்வால்வளைமைந்தன்சூழற்
றேசுறுகணங்கடம்பாற்சேர்ந்ததுசிறியேன்மீதி
னேசம்வைத்தருளவேண்டுநிருமலவென்றுநிற்பப்
பூசல்வண்டாற்றுங்கூந்தற்பொற்கொடிவதனநோக்கி. (௬௫)

பொருக்கெனநகைத்துநின்றபுண்டரீகாட்சபோந்த
தருப்பமேயெனினுமெம்மாலசக்கியமாகுமற்றாற்
றிருப்பொலிவேற்காடெய்திச்சேணளந்தொளிரும்வெள்வேல்
விருக்கமூலத்தின்மீதேவிநாயகன்பூசைசெய்யில். (௬௬)

பூஞ்சிலம்பரற்றுமென்றாட்பூமகள்கொழுநபோன
பாஞ்சசன்னியத்தைமீளப்பணிக்குவனென்றுபாவுங்
காஞ்சிமேகலைசூழல்குற்கருங்குழலுமையோர்பாகன்
வாஞ்சையோடுறைப்பவன்றோன்வடமறைக்காட்டிற்சார்ந்தே. (௬௭)

மேயவானவர்கள்போற்றும்வேததீர்த்தத்தின்மூழ்கி
யாயிடைத்திகழும்வேற்கீழைங்கரப்பெருமான்றன்னை
நேயமோடமைத்துப்போற்றிநிறைவிதிநிகழ்த்துமாற்றாற்
றூயவர்ச்சனைகள்செய்துதுகளறத்துதிக்கலுற்றான். (௬௮)

தானவர்நினைத்தயாவுந்தடையுறத்தளராநின்ற
வானவர்மகிழவந்தவள்ளலேசரணம்வாய்ந்த
கூனல்வெண்பிறைவாழ்சென்னிக்கொற்றவசரணம்யானை
யானனசரணமுக்கணையனேசரணமென்றான். (௬௯)

மாயவன்றுதித்தலோடுமகிழ்ந்தவன்முன்னர்த்தோன்றி
நாயகனின்றானன்றோனளினநாண்மலர்த்தாள்போற்றி
நேயனேகணங்களோடுநீர்விளையாடும்போது
மேயவாகுதியிலென்கைவெள்வளைத்தவறிவீழ்ந்த. (௭௰)

அன்னதுகணங்கடம்பாலமர்கின்றததனைமீள்வித்
தென்னிடத்தளித்தல்வேண்டுமென்றுநின்றியம்பலோடுந்
துன்னியமதம்பாய்கின்றசுவட்டுடைக்கடவுளன்றோ
னின்னநீர்தரவேவாங்கியேந்தியகரத்திலீந்தான். (௭௧)

அளித்தலுமுலகமேழுமளந்தவன்மகிழ்ந்துவாங்கிக்
களிப்புறுமனத்தனாகிக்கவின்கொள்பாற்கடலிற்சார்ந்தான்
றளித்திடுநறவந்தாங்கிச்சுரும்பிமிர்தாமஞ்சூழும்
வெளிற்றுவேன்மூலமீதில்வேழமாமுகத்தோன்போந்தான். (௭௨)

உலவையதேந்துநாதனுற்பவச்செயலையோர்கா
விலகவேயோதினோர்களெய்தும்விக்கினங்கணீங்கி
நிலமிசையனந்தபோகநிலைபெறநுகர்ந்துநீடு
வலனுறுங்கைலைமீதில்வாழ்வரென்றுரைத்தானன்றே. (௭௩)

முருந்திளமுறுவற்செவ்வாய்முற்றிலாமுலையாளீன்ற
வருந்தவக்களிற்றின்வாய்மையருட்டிறமுரைத்தாமிப்பால்
வரும்புனற்பாலியாற்றின்மல்லலங்கரையில்வாய்த்த
திருந்தியமுனிவர்பூசைச்செயற்றனைத்தெரித்தல்செய்வாம். (௭௪)

வலம்புரிச்சருக்கமுற்றும்.

ஆகச் செய்யுள் - ௯0௮.

# முனிவர் பூசைச்சருக்கம்.

படர்புனற்பரந்ததூயபாலிமாநதியின்பாங்க
ரடல்பொருமசுரர்மூவரருச்சனைபுரியாநின்ற
மிடல்கெழுதானம்வேறொன்றுளதெனவிளங்குந்தீம்பாற்
கடல்படுமமுதம்போலக்கவுசிகன்கருதிச்சொல்வான். (௧)

மேயமுப்புரத்தின்மூவர்விரிஞ்சன்மெய்த்தவத்தாற்போந்த
வாயுநாரதன்றனுமவ்வுழைப்பவுத்தனை
மாயவன்வசனத்தாலுமயங்கிலராகியென்றுந்
தூயபல்கணங்கள்போற்றத்துவாரபாலகர்களானார். (௨)

அன்னவரியற்றுநின்றதானமதெனலுமன்னோன்
றன்னையந்தணர்களோக்கிச்சாற்றியமாற்றமந்தோ
வென்னவற்புதம்பார்முற்றுமிலங்கியமாயோன்மாயைப்
பின்னுறும்வலையிற்பட்டுப்பிரபஞ்சமயமாய்நிற்ப. (௩)

இனையர்களதனைநீங்கியெழுபொழிலளிக்குநாதன்
றனையடைந்துய்யப்பெற்றதகுதியெவ்வாறோவென்னப்
புனையிழைநுடங்குமார்பன்புகலுவன்கேண்மின்போந்த
மனதினுலியற்றுந்தொண்டின்மார்க்கமோரிருபாலாகும். (௪)

காமிகமுத்தியென்றேகருதுமிவ்விரண்டிற்காம
மேமகீத்தெழுந்தபிறசங்கிதமெனவெவருங்கூறப்
பூமிசைவிளங்கிவேடப்பொலிவினைக்காட்டிச்சென்றாட்
பாமரரிடத்தினின்றுபாடல்மலசிற்றோற்றும். (௫)

தெளிவுறுமுத்திமார்க்கஞ்சிவார்ச்சனைபுரியச்செய்தே
துளிமதுக்கமழுங்கூந்தற்றோகையர்மையனீக்கி
நளினபத்திரத்திற்பெய்தநறும்புனல்போலப்பாவ
மளியவன்னவர்கடம்பாலடுத்திடாதியற்றுமென்றான். (௬)

வேறு.

மேயவர்பணித்திறன்விரித்துரைசெய்வேனற்
றாயொளிபரப்புமதில்சூழ்திரிபுரத்தின்
மாயனொருபுத்தன்வடிவாகியடல்வீரர்
மூயநெறிதட்டழியமோகமுறுவித்தான். (௭)

இன்னிசையளிக்குமகதிக்கிறைவனாலு
மன்னர்மிருகாமுகர்களாயினரவர்க்குட்
டொன்மைகொள்சுசீரனொடுதூய்மையசுகன்மன்
மன்னியசுபுத்தியெனவாழசுரர்மூவர். (௮)

தன்னறிவினனறுசிவசத்திபதிவுற்றே
துன்னசுரரோடுமருவுற்றனர்துடங்கும்
வன்மையதனுன்மயல்வலைப்படுவதின்றிக்
கன்மலைவிலானகையழற்பகைகடிந்தார். (௯)

மூன்றுவிழியானவர்கண்மூவரையுநோக்கி
யான்றுசினவுற்றநமழற்கணைபிழைத்தே
தோன்றினமையாற்புவிதொழத்தகுதவத்தி
ரேன்றவரமென்கொலிசையின்னெனவிசைத்தான். (௧௦)

வாலையுமைபாகனதுகூறலும்வணங்கிச்
சாலவுறுநொய்தவிரவேதனுவினோடே
சூலகரசன்னிதிதனிற்றிகழ்துவார
பாலகர்களாகவருள்பாலியெனநின்றார். (௧௧)

தண்ணமுதுகுக்குமதிதங்குசடிலத்துப்
பண்ணவனகைத்ததுபலித்திடவிளங்கும்
விண்ணுலவுசோலைதிகழ்வேதவனமேவு
மெண்ணரியசோதிசெயிலிங்கம்வளர்கோயில். (௧௨)

கேதனமிகுத்தொளிசெய்கோயிலதுகிழ்பா
லேதமுனிநும்பெயரிலிங்கமதமைத்தே
போதிருகைகொண்டுவளர்பூசைபுரிமின்கண்
மாதினுடன்வந்தருள்வலென்றிறைமறைந்தான். (௧௩)

வென்றிநிறைமூவர்களும்வேதவனமேவி
நன்றுதருமப்பெயர்நதிப்புனல்படிந்தே
கன்றுமழுமான்மருவுகந்தபுரிநாதன்
றன்றுணைமலர்ப்பதம்வணங்கிமுடிதாழ்த்தார். (௧௪)

மல்லுயர்தடம்புயம்வயங்கசுரர்பின்ன
ரொல்லிபடுதிக்கினிலிலிங்கமதமைத்தே
பல்லவமிகுத்துநிமிர்பைந்தருவுயிர்த்த
வல்லிமலரானிதமருச்சனைபுரிந்தார். (௧௫)

அத்தகையவேலையெனையாளுடையநாதன்
முத்தமுறுவற்கொடிகளித்திடமுளைத்தே
பத்திபுரிதொண்டர்மனதுற்றனபணித்தா
னித்தனதுசன்னிதியினேசமுடனின்றார். (௧௬)

வேறு.

திகழ்ந்தகாரணத்தால்வையந்திரிபுராதீசனென்றே
புகழ்ந்தவத்தலத்தையோர்காற்போற்றினும்புண்கணீங்கி
மகிழ்ந்துதென்கயிலைமீதில்வாழ்வர்களதனின்றென்பாற்
சகந்தொழவிளங்கித்தோற்றுந்தானமொன்றுரைப்பலென்றான். (௧௭)

மடல்விரிபசியபுற்றூர்வளர்பலராமனென்போன்
படர்சினக்கொடுந்திக்காலும்பாரதயுத்தந்தன்னி
லடல்கெழுகிளைஞர்கூடியயுத்தமேமதுடங்கிறுரென்
றடல்பதைத்திடவேதீர்த்தவுரைகொள்யாத்திரைக்குச்சென்றான்.

உடைதிரைக்கடலந்தானையுடுத்தமாநிலத்தின்மீதிற்
குடைபுனற்றீர்த்தமாடிக்குலவுவெண்கொடிதீர்த்தத்திற்
படிதலுமிறைவன்கோயிற்பற்பலவிருத்தனோக்கி
வடமிசைத்துயில்வோன்முக்கால்வலஞ்செய்துவணங்கலுற்றான். (௧௯)

வணங்கியமுழவுத்தோளான்வசித்தமாதவரைநோக்கிக்
குணங்குறிகாலநீத்தகோதிலான்பிரியமாக
விணங்கியதானம்பார்மேலெனைத்துளவதனினின்றுந்
தணந்திடாதென்றுமின்பந்தருந்தலம்யாவதென்றான். (௨௦)

நிலவுமிழ்பணிலமாதிநெடியவைம்படையுநீக்கி
யலமுறுபடையதாகவடல்பொரவணிந்துசேர்ந்த
வலியதிண்டோளன்கூறமாதவர்மகிட்சிபூத்தே
நலனிறைவாய்மைபொங்கநயம்பெறநவிலலுற்றார். (உக)

வேறு.

மேவுமேருவின்சம்புவின்கனிநருவிளக்கு
நாவலம்பெருந்தீவியோசனைநவினியுதம்
பாவுநீட்சியிப்பாரினைப்பண்புறவளைத்துத்
தாவுவார்கடற்பரப்புமோரிலக்கமாந்தகைத்தாம். (உஉ)

யிலட்சதீவிரண்டிலக்கயோசனைப்பெரும்பரப்பாஞ்
சிலைப்பெயர்த்திருமரமிருநூறுபின்றிகழ
வுலப்பிலாயிரம்யோசனையுயரமாயோங்கி
நிலைப்பநாப்பணினிற்றலானிகழ்ந்ததப்பெயரே. (உ௩)

பன்னுதற்கரும்வளங்கொளும்பாரின்வாழுநர்க்கு
வன்னிதைவதமாகியேவரும்பலனளிக்கு
மின்னபூவையீரிலக்கயோசனைப்பரப்பினதாய்க்
கன்னலின்சுவையலிதிரைக்கடல்வளைந்திடுமால். (உச)

இலங்கிடுங்குசைத்தீவுநாலிலக்கம்யோசனையிற்
றுலங்குநீள்பரப்பிதனிடைத்தோற்றியோர்தருப்பை
வலன்செயோரிரண்டாயிரமற்றிருநூறு
நலன்கொள்யோசனைவளர்தலானவின்றனரப்பேர். (உரு)

இனையபூமியில்வளர்தருமனிதர்களியற்றும்
வினையறிந்தவர்க்குறுபலனளிப்பவன்வெய்யோ
னனைமலர்த்தருப்பொதுளுமிப்புவியைநாலிலக்கம்
புனையும்யோசனைப்பரப்பதாய்மதுக்கடல்பொருந்தும். (உ௬)

நீடுமெட்டெனுமிலக்கயோசனைதனைநிரம்பிப்
பீடுசேர்கிரவுஞ்சமெய்த்தீவதுபிறங்கும்
நாடிலப்பெயர்வெற்புநாலாயிரநானூற்
றெழுபத்துயோசனையுயர்ந்திருத்தலினுரைத்தார். (உஎ)

இத்தலத்தினின்மருவியவரக்கர்களியற்றுந்
தத்தம்வல்வினையறிந்தளிப்பவன்கடற்றலைவ
னத்தலத்தையெட்டிலக்கம்யோசனைபரந்தாழ்ந்து
சுத்தநெய்க்கடறுலங்கழகொழுகிடச்சூழும். (உஅ)

இனம்பெறப்பதினாறெனுமிலக்கம்யோசனைத்தாய்க்
கனம்பரப்பொடுசேர்கநற்றீவதுகவினு
நனந்தலைத்திகழ்கிளையோர்தண்டுவானண்ணி
யனந்தம்யோசனைவளர்தலினப்பெயரமைத்தார். (௨௯)

அன்னபூமியின்வளர்மனிதரைப்புரந்தருள்வோன்
சென்னிமூவிரண்டிலகியசெய்யவேளாமாற்
பன்னுதற்கருவெண்டயிர்க்கடல்பதினாறிற்
றன்னிலக்கம்யோசனைபரந்தப்புவிசூழும். (௩0)

உணர்த்தின்முப்பதிற்றிரண்டுயோசனைப்பரப்புளதாய்க்
குணத்தினோர்செறிசான்மலித்தீவதுகுலவுந்
துணைத்தவெண்ணகன்றனந்தம்யோசனைதனைச்சூழ்ந்து
பணைத்துயர்ந்ததோரிலவுநிற்றலிற்பெயர்பகர்ந்தார். (௩௧)

பொங்குமிப்புவிநால்வகைவருணமும்புரந்து
துங்கநல்வரமளிப்பவன்செங்கதிர்த்தோன்ற
லங்கண்மாநிலப்பாங்கர்முப்பானிரண்டதனைத்
தங்கிலக்கம்யோசனையகல்பாற்கடறயங்கும். (௩௨)

பலமிகுத்தகன்றொருபதிற்றேறுநான்கிலக்க
நிலவுயோசனைபுட்கரத்தீவதுநிற்கு
மிலகுபூமியிலையிரண்டாயிரமிதழ்சேர்
சலசநீடலிற்றகவுறத்தழைந்ததப்பெயரே. (௩௩)

தரைக்குண்மேன்மைகொளதனிடைத்தேவர்சஞ்சரிப்ப
ரிரக்கமுற்றுமாயவனவர்க்கருளுவனிதனை
யுரைப்பினேறுபதிற்றுநான்கிலக்கம்யோசனைத்தாய்ப்
பரப்புமேவியநறும்புனற்பரவைசூழ்தருமால். (௩௪)

வேறு.

துய்யவித்தீவின்பாங்கர்ச்சுடர்விரித்திருளைநீக்குஞ்
செய்யபொன்னுலகமப்பாற்றினகரனுறையும்வெற்பு
வெய்யவெற்பதனின்பாங்கர்மேவிடும்லோகாலோக
மெய்தருமிதனிற்கப்பாலிருட்படுமுலகமாமால். (௩௫)

வரும்பகலென்பதின்றிவளரிருட்பூமிக்கப்பாற்
பெரும்புறக்கடலாமப்பாற்பிறங்கிடுமண்டப்பித்தி
திருந்தியவிவற்றிற்கெல்லாந்திகழ்வுறுஞ்சம்புத்தீவ
பொருந்துமித்தீவின்மேவும்புகழ்நவகண்டத்துள்ளும். (௩௬)

சீரியமுனிவர்தேவர்சித்தர்கள்விழைவதென்றும்
பாரதகண்டமின்னபகர்நவகண்டத்துள்ளுங்
கூரியசீருமஞ்செய்யக்கூடுதல்குமரிகண்ட
மோரணிகுமரிகண்டமிதற்கிணைபுவனத்தின்றே. (௩௭)

மேவுதற்கரிதாமின்னவியப்புறுதலத்தின்மீதிற்
றேவர்தந்தானஞ்சாலச்சிறப்புறவிளங்கிநிற்கு
நாவலர்துதிப்பவாய்த்தநற்றலமதனினின்றும
பூவையின்வண்ணமாயோன்பொருந்தியதலங்கண்மேலாம். (௩௮)

இத்தலந்தனிலுமாந்தரியற்றியலிங்கத்தான
முத்தமமதனினின்றுமுயர்ந்திடுந்தேவர்செய்த
நித்தன்வாழ்தானமன்னநியதிசேர்தலத்தினின்றுஞ்
சுத்தமாஞ்சுயம்புத்தானமவற்றினுட்டுலங்குங்காசி. (௩௯)

சிறந்திடுங்காசிதன்னிற்றிகழ்தருங்காஞ்சியன்ன
வறந்தழைதலத்தினின்றுமதிகமாம்வேற்காடங்கட்
பிறந்தவர்வசித்தோர்பேசும்பெற்றியாமரித்தோரெல்லா
நிறைந்தபேரின்பவீட்டினிலவுவர்நீங்காதென்றார். (௪௦)

வேறு.

கேட்டலும்விறலோனுவகையங்கடலின்மூழ்கியேகேழ்கிளரவர்த
நாட்டுணைக்கமலநலமலிசரணநனிதொழுதகன்றுவேற்காட்டி
னீட்டமாரிறைவன்றலமெலாம்வணங்கியெழின்மிகுவேதநீராடித்
தோட்டலரதனுற்சாந்தநாயகனைத்துதித்தடிதொழுதுதென்றிசையில். (௪௧)

இம்பரினுபமன்னியப்பெருந்தவனுவிலங்கியதீக்கைபெற்றினிய
தம்பெயரதனுலிலிங்கமொன்றமைத்தேசாலவுமருச்சனைபுரிந்தா
னம்பிகையுடனேயிடபமேற்றோன்றியங்கணனவனெதிர்வெளிப்பட்
டும்பர்கட்கரியவொழுக்கினைமனத்திலுதித்திடும்வரமுரையென்றான். (௪௨)

நீலமாமிடற்றுநிருமலன்பகரநேசனேநின்பதமடியேன்
காலகாலங்கடோறுந்தொழுதிறைஞ்சக்கதியளித்திவ்வுழைக்கலந்த
கோலமாரிலிங்கமீதிலெஞ்ஞான்றுங்குலவவீற்றிருந்துகூறினரு
ஞாலமேற்போகம்பொருந்திநாற்கதியுநலம்பெறவருளெனநவின்றான்.

இறைவனுநன்றென்றெழில்வரமுதவியிலிங்கமீதுறைந்தனனிதன்பா
னிறைசிவதலங்களனந்தமுண்டதனினொருவன்சிலநிறுவினர்பேர்
மறைதெரிவாலகில்லியர்விரசர்மருவிரதாக்கினிவசிட்டர்
பொறைமிகுகபிலர்பராசரர்பயிலர்புகழ்நிறையார்திசம்புத்தி. (௪௪)

சனகர்நிர்மாணிசனுதனர்மதனுச்சுனர்சனந்தனர்சனற்குமார
வனமுறைநிருமர்காசிபர்டிண்டிவயிச்சுதர்சகட்டினுவாலி
பனககங்கணனைப்பணியும்வான்மீகர்பார்க்கவர்வியாக்கிரபாதர்
தினகரன்போலுஞ்சாத்துதர்சுகோதராத்திரையர்கௌதமருசனர். (சரு)

சத்தியதபர்முண்டீசுரராபத்தம்பர்காத்தியாயனர்கற்கர்
சித்திசேர்சத்தியார்ச்சுலாயனர்பொன்றிகழ்நரர்பயுத்துதர்சிறந்த
சுத்தமாநிரகர்கிறுதர்சம்பரர்மேற்றுலங்கிசைக்கிழவியர்சுதர்ம
ரெத்திசைதோறும்புகழ்நிறைகன்னனிலகுபாண்டவர்சிபியென்போன்.

ஆறுசாத்திரங்களரியநால்வேதமாகமமுடனவக்கிரகம்
வீறுயர்பதினெண்புரீணமேவாய்ந்தவெற்றிசேர்மகாவெலிவாணன்
கூறினர்முதனூற்றைம்பதிற்றைறவர்குலவியவேதமெய்ப்பெயர்சேர்
நாறிரும்புனலிற்படிந்துதம்பெயரானலந்திகழிலிங்கமுமமைத்தே. (சள)

தண்ணறுச்சொரிந்துதளையவிழ்ந்தொளிர்மந்தாரமேமுதலியமலரா
லெண்ணருங்காலமருச்சனைபுரிந்தேயிறையருள்வீட்டிலெய்தினர்கள்
கண்ணகன்புவியிலிச்சிவதலங்கள்கண்டடிதொழுதுபோற்றினர்க
ளண்ணருளரியவின்பமெய்துவரென்றருமறைக்கவுசிகனறைந்தான். (சஅ)

வேறு.

நினைத்தலினன்மைசேர்நெறியிற்கூட்டிடு
முனைத்தவர்பூசனைமுறைமைகூறினுந்
தினைத்துணையிறைவனுக்களிப்பிற்சேர்கதி
தனைப்பகர்பலன்பெறுசருக்கஞ்சாற்றுவாம். (சகூ)

முனிவர் பூசைச்சருக்க முற்றும்.
ஆகச் செய்யுள் - கஉ௯.

---

# பலன்பெறு சருக்கம்.

தன்னிகரில்புகழ்படைத்துத்தயங்குதிருவேற்காட்டிற்றழைத்துவாழும்
பொன்னணிநூன்மணிமார்பர்கவுசிகன்றன்முகநோக்கிப்புவனமீதி
லின்னியல்சேர்தலப்பெருமைவிளங்கவருளினையிலிங்கமியற்றும்பே று
மன்னும்விழாவணிவளரச்சகளுமியற்றிடும்பேறும்வகுத்துக்கூற. (க)

விழைந்தனமென்றவர்புகரவுளங்கூர்ந்துமுதுமறையோன்விளம்பலுற்றான்
குழைந்துதிகழ்வாலறிவிர்கோதினவமணிசிலையாற்குலவும்பொன்னாற்

றழைந்துவளரிலிங்கமமைத்திடும்பலனாற்பிரமாண்டந்தகர்த்துநீங்காப்
பழங்கணனைத்தையுமகற்றிப்பகரரியசிவபதத்தையடைவார்பார்மேல்.

விரதமொடுதவமிழைத்தல்வெண்டிரைகள்சுருட்டிநிமிர்வேலையாடல்
சுரநதியிற்படிதல்பலநறுந்தீர்த்தமாடறுகடூர்ந்தயாகம்
புரிதலிவையனைத்துமொருசிவலிங்கமமைப்பதனாற்பொருந்தும்பேற்றிற்
பரவுமொருகோடிபங்கிலொருகூறுதனக்குநிகர்பகரொணாதே. (௩)

வண்டுளபநறுந்தெரியன்மணிமார்பன்விரிஞ்சனொடுவானோர்கோமா
னண்டரிருடிகண்முனிவரிலிங்கமமைத்தேபதவியடைந்தார்பார்மேற்
றெண்டிரைசூழ்தீரமதிற்றிகழுநதிக்கரைமீதிற்சிலையின்மீதிற்
பண்டுதபோதனரிலிங்கார்ச்சனைபுரிந்தாரத்தகையாற்பரிவுகூர்ந்தே. (௪)

கருதரியகதிவிரும்புமனிதர்பிரதிட்டைபண்ணக்கடவர்செய்யிற்
புரமுடனேசிவனாவர்புகல்பலனெத்தலத்தினுமாம்புவியின்மீதிற்
றிருவளரும்வேதவனந்தனிற்பூசைபுரிந்தனரேற்சேரும்பேறு
பெருகுசதுமறையாலுங்கணிப்பரிதத்தலமதனிற்பெரியோர்முன்னம்.

பூசைபுரிசிவலிங்கந்தனையொருகாலிறைஞ்சினரேற்புவனம்யாவும்
வீசுபுகழ்துதித்துநின்றுமிகவணங்கமிளிர்பசும்பொன்விமானமேறி
வாசவனேமுதலானவானவர்கள்கற்பகப்பூமாரிபெய்ய
வீசனுறைதிருக்கயிலைமலைமீதிலளப்பருநாளிருப்பரம்மா. (௬)

வேறு.

உமையுடனொருபீடத்திலுறைபரம்பொருளைவிண்ணி
லிமையவர்நீங்காதென்றுமிறைஞ்சிடும்பெருமான்றன்னைத்
தமைநிகர்ப்பரிதாயோங்கித்தழைத்திடும்வேதமூதூ
ரமைதரச்செய்தோர்மேலாமருநெறிபெறுவரன்றே. (௭)

இந்திரதனுவின்வாய்ந்தவெழிற்றிருநுதலினாளை
யந்தமிலுலகமீன்றவம்மையையமைத்தாராகிற்
சந்ததிவிளங்கமேலாந்தகைமைசேர்போகமாந்திச்
செந்திருமார்பன்காணாத்திருவடிபெறுவரன்றே. (௮)

பதஞ்சலிபுண்டரீகபாதனும்பரிவுகூறக்
கதம்பகுங்குமச்சேராடுங்கதிர்முலைகளிக்கக்குஞ்சம்
வதிந்திடுபாதந்தூக்கிமன்றினுளாடுங்கோவை
யிதம்பெறத்திருவேற்காட்டிலியற்றினரின்பஞ்சேர்வார். (௯)

பிரமனம்புவனிவேதம்பிறங்கியமேருமாயோன்
மருவுசாரதியேவையம்வாம்பரிதனுக்கோலாகத்

திரிபுரமெரித்தோன்றன்னைத்திருந்தும்வேற்காட்டிற்செய்தோ
ரிரதமேலேறிநீங்காதிருப்பர்கள்சிவலோகத்தில். (க0)

தங்கியமுடிவுகாலந்தனிலெழுந்ததிரும்வேலை
பொங்கியதெனவேவானோர்பொதிர்ப்புறப்போதாநின்ற
கங்கையைத்திவலையாகக்கற்றைவார்சடைமேல்வைத்த
வங்கணன்றனைவேற்காட்டிலமைத்தவர்முத்தராவார். (கக)

தானநீத்தெழுந்துவாய்ந்தசனகனேயாதியான
வானவர்நால்வர்க்கன்றுவடதருநிழற்கீழ்ஞான
போனகமளித்தோன்றன்னைப்பொருந்தவேயியற்றின்மேலா
ஞானபாரகனுய்த்தூயநன்னெறிபெறுவனம்மா. (கஉ)

ஏருறைதவங்களீட்டிமிருடியர்மனையார்வாழுந்
தாருகவனத்தின்மீதிற்றனிப்பலியேற்பச்சார்ந்த
நீருறைசடையான்றன்னைநீடியதிருவேற்காட்டிற்
சீருறவமைத்தோர்நீங்காச்சிவகதியதனைச்சேர்வார். (கங)

திவசமதறியக்காட்டுஞ்செங்கதிர்போலுமேனிக்
குவிகவுட்சிறுகணுல்வாய்க்குஞ்சரமுகத்தினனைப்
புவிபுகழ்திருவேற்காட்டிற்பொருவருமுருவம்வாய்ந்து
கவினுறவமைத்தாலன்னோன்காமுறுகணங்களாவார். (கச)

குன்றம்வாழ்கொடியினோடுகுலவியதேவயானை
யென்றிருமயிலுநீங்காதிருபுறத்தமரத்தோகை
வென்றிமாமஞ்ஞைமீதின்மேவியவிறலோன்றன்னை
நன்றுறவமைத்தாராயினண்ணுவர்குமரலோகம். (கரு)

வேதமாபுரியின்மீதில்வெண்ணிலாவணியும்வேணி
யாதிநாயகன்றன்கோயிலணிகொள்சன்னிதிமுன்னாக
வோதருந்துவாரபாலரொளிபெறச்செய்யிற்றூய
நாதன்வாழ்கயிலைவெற்பினலத்தகவிருப்பரம்மா. (கசா)

உந்திபங்கமலமீதிலுதித்தநான்முகக்கோமானைக்
கந்தமார்புறவநீடிக்கவின்பெறுதிருவேற்காட்டிற்
சிந்தையோடமைத்தாராயிற்றிண்டிறற்செகத்தின்மீது
சந்ததிதிகழநீணாட்சத்தியவுலகஞ்சார்வார். (கஎ)

தளங்கொடாமரைபூத்தென்னத்தகைபெறும்விழியினானை
விளங்குகோதண்டநேமிவெங்கதையொளிவாள்சங்கம்

வளங்கொள்செங்கரத்தினனை வணங்கியேயமைத்தமேலோ
ருளந்தழைபோகமாந்தியுறைவர்வைகுண்டமீதில். (கஅ)

பயின்மரகதத்தமேனிப்பண்ணவாமகலினப்பாய்மாத்
துயஞறப்பூட்டுந்திண்காற்சுடர்விடுகொடிஞ்சித்தேர்மேல்
வெயில்விரித்தெழுந்தகோவைவேதமாபுரியின்மீதி
லியல்பெறப்பதித்தோரம்மாவிரவிமண்டலத்தில்வாழ்வார். (கக)

வெள்ளையங்கமலமீதின்மேவும்வெண்கொடியைவாழ்த்தி
யள்ளலம்பணைசூழ்வேற்காடதனிடையமைத்ததூயோர்
தெள்ளுசர்க்கரையேதீம்பாற்சினிகற்கண்டுபோல
வள்ளியமதுரப்பாடன்மழைதனைச்சொரிவர்மாதோ. (உ0)

அரக்கெறிந்தொளிருஞ்செய்யவம்புயமலர்மேல்வாழுந்
திருக்கிளர்குமுதச்செவ்வாய்த்திங்கள்வாண்முகத்தினளை
யுருக்கொளவியற்றினோர்களுலகெலாம்பணியச்செங்கோற்
பரித்தரசாள்வர்போகம்பற்பலநுகர்வரன்றே. (உக)

துலங்கனற்பொறிகள்சிந்தச்சொலிக்குமுவிலைவேற்சூலம்
வலன்றருபாசந்தாங்கும்வயிரவக்கடவுடன்னை
நலம்பொலிதிருவேற்காட்டினண்ணுறவமைத்தோரென்று
நிலந்தனிற்பூதகோட்டிநீங்கிநன்னெறியினிற்பார். (உஉ)

வாலியப்பணிலமீன்றமணிகொழித்தொழுகாநின்ற
பாலிசூழ்திருவேற்காட்டிற்பகர்ந்தனவொழிந்துபோந்த
கோலமார்தெய்வந்தன்னைக்குலவவேயியற்றினோர்கண்
மேலைவானவர்சூழன்னோர்வியன்பதமேவிவாழ்வார். (உங)

மண்ணினுற்றருவாற்செந்துவயிரொழிசெங்கறன்னுற்
றிண்ணியகருங்கல்வெள்ளிசெய்யபொன்மணிகளாலு
மண்ணலாலயங்கள்செய்யினவற்றவற்றதிகங்கோடி
புண்ணியமருவிப்பன்னாட்பொருந்துவர்சிவலோகத்தின். (உச)

முன்னுரைசெய்யாநின்றமூர்த்தியையனையகோயி
றன்னிலேலாவியத்திலேனுந்தயங்கியபடத்திலேனு
மன்னவேயெழுதிப்போற்றிவணங்கினுமுத்திகூடு
மின்னமெய்த்தலத்திற்செய்யிலெண்ணருங்கோடியாமால். (உரு)

பாற்சுவைநாறுஞ்செவ்வாய்ப்பாலரித்தலத்தின்மீதி
ரூற்றியமணலாலோலார்காற்சூழ்சிவாலயங்கள்போல

வேற்றினுமனந்தங்காலமிலங்கியசிவலோகத்திற்
கூற்றினைக்கடிந்தோன்மானக்குலவிவீற்றிருப்பர்மாதோ. (உசு)

வாரணவுரிவைபோர்த்தவானவர்பெருமான்வாழுஞ்
சீரணமானகோயிற்றிருந்தவேசெய்யிற்சாலத்
தோரணவாயினுற்றித்துகளறப்புதிதாய்ச்செய்த
வேறணிபலனினுற்பாலேற்றமதாகுமம்மா. (உஎ)

பண்டுமாலயன்காணுதபரமன்வாழ்கோயின்மீதி
லுண்டியின்பொருட்டாற்சாலவோங்கியதொழில்செய்தோரு
மண்டர்சூழனையகோயிலதிற்பணிவிடைசெய்தோரு
மண்டுகாமயத்தாற்பூசிவளம்பெறவலகிட்டோரும். (உஅ)

சாந்திராயணந்தாய்தாகச்சகத்திரமிழைத்தியாகம்
போந்தநூறியற்றுநின்றபுண்ணியப்பலனைமேவிப்
பாந்தளாபரணம்பூண்டபரமன்வாழ்சிவலோகத்தில்
வாய்ந்தசீர்த்தொண்டரோடுமருவுவரனந்தங்காலம். (உகூ)

நிகமநன்குணர்ந்துதூயநீற்றொளிதழைக்குமேனி
யகமுளராகிமேலாமக்கமாலிகையும்பூண்டே
யிகபரமிரண்டுநல்குமிறைவனையருச்சித்தேத்து
மகிமைசேர்மறையோர்தன்னைவடமறைக்காட்டின்மீதில். (௩0)

வசித்திடச்செய்துவாழுமாட்சியகிரகநல்கிப்
பசித்துயரகற்றிக்கேண்மின்பண்புளமறையீர்முன்ன
மிசைத்தநற்பலன்கள்யாவுமெய்திடுமிலங்காநின்ற
திசைக்குவான்புகழேயாகச்சிவகதிசேர்வரன்றே. (௩க)

முத்தழலோம்பாநின்றமுனிவர்கள்சிறுவர்க்கன்ன
மித்தலமதனிலீந்தேயெழின்மறையிலங்கவோது
வித்தவரனந்தபோகமேதினியதனிற்றுய்த்துச்
சித்தர்விஞ்சையர்கள்சூழுஞ்செம்பொன்வானுலகையாள்வார். (௩உ)

தனுவினுற்றேற்றுநின்றசாதியிலெனையரேனு
முனிவுடனுவகைநீத்தமுதல்வனைத்தெரிந்தஞானிக்
கினியதோர்கவளமன்னமீந்திடிலெண்ணில்கோடி
புனிதமாமகத்தின்பேறும்பொருந்துதலரிதீர்மன்றே. (௩௩)

வேறு.

முருகவிழ்த்திடுமலரிமாமலர்க்குமுதுணர்ந்த
பிரமனையதிதேவதைபிறங்குகொங்கினுக்கு

வரமளித்திடும்வாணிமாலூரவண்டளிரிற்
குருவின்மிக்கதோர்திருவெனுமொண்கொடியாமால். (௩௪)

மருக்கமழ்ந்தமந்தாரநாண்மலர்க்குமால்வளரு
மருக்கமாமலர்க்கைக்கரனவிழ்ந்தசண்பகத்திற்
கிருக்குநேடருமுருகவேளெழில்வலம்புரிக்குத்
திருச்சடாடவிதிகழ்சிலாதரனறச்சேயே. (௩௫)

இலஞ்சிநன்மலர்க்கிந்திரன்வழைமலர்க்கிலகு
நலங்கொளுஞ்சிவகணங்களாநறைவளர்சமிக்கு
வலன்றிகழ்ந்தொளிர்நாகர்மஞ்சரியதற்குத்
துலங்கிடுஞ்சுடரளித்திடுஞ்சுதனெனச்சொலுமால். (௩௬)

வாகைமென்றளிர்க்கடல்பொருநிருதியாய்வழங்கு
நாகமாமலர்க்கசைந்தெழுமருத்தெனநவில்வர்
சேகுதீர்ந்துயர்செழியசெந்தாமரைமலரிற்
கேகநாயகனண்பனாயிசைத்திடப்படுமால். (௩௭)

சிவந்தெழுந்தநாண்மலர்க்குணாசிறந்தவீசான
னவிழ்ந்திடுங்குமுதத்தினுக்கலர்கதிர்மதியங்
குவிந்தசெங்கழுநீர்க்குவிண்குலவுசூரியனா
நிவர்ந்தவெண்ணிறத்தாமரைக்கமலனாநியமம். (௩௮)

கருநிறத்தநெய்தலிற்கறம்வளர்த்திடுகன்னி
புரிமுன்னூறிகழ்மார்பினரிவ்வுழைப்புகன்ற
வருமலர்க்கதிதேவதையனையர்களாகும்
விரிநிலத்தினிலிவர்களாற்பெறும்பயன்விரும்பின். (௩௯)

வேதவான்புனலதனிடைப்படிந்துவேற்காடன்
பாதமீதினிலிம்மலரருச்சனைபண்ணி
னேதுநீர்விழைந்தனவெனவனையர்களின்சொ
லோதியேயவர்க்களித்துளமுவப்புறவுறைவார். (௪0)

வேறு.

மாயிருஞாலமேத்தும்வளர்மறைக்காட்டில்வாழுஞ்
சேயபொற்சடிலத்தாற்குத்திலதயிலத்தோர்தீபம்
பாயொளிகதுவவைத்தோர்பலிவிசும்பமரர்போற்ற
வாயிரமசுவமேதவரும்பலன்பெறுவரன்றே. (௪௧)

தயிலமேகலவைச்சாந்தந்தயங்குபானறுநெய்யாதி
யெயில்கண்மூன்றெரியாநின்றவிறைவனுக்காட்டினோர்கள்

பயிறரா தலத்தின்மீதுபற்பலபோகமார்ந்திக்
கயிலைமால்வரையிற்பன்னாள்கவின்பெறவாழ்வர்மன்னோ. (௪௨)

அனலமொன்றேந்துநாதற்கறுவைபட்டாடைமுந்நூற்
கனகவம்பரங்கள்சாத்துங்காட்சியரவற்றின்மீது
புனையிழையளவுகாலம்புண்ணியமுனிவர்போற்ற
நினைவருஞ்சிவலோகத்தினைசமுற்றிருப்பரம்மா. (௪௩)

வேறு.

முல்லைவான்முகையெனத்திகழ்மூரலினறுநெய்
மல்கவோரறுசுவையுடன்போனகமறைக்காட்
டெல்லைவாழ்தருமிறைவனுக்களித்தவரென்றுஞ்
செல்வராகியேசிவபதத்துறைவர்கடிண்ணம். (௪௪)

ஏலமோடுதக்கோலமேயிலவங்கமிகுதாம்
பூலமீசனுக்களித்தவர்புணரிசூழ்புவியிற்
சாலநீடியபோகபோக்கியந்தனைப்புசித்துக்
காலன்வாதையுங்கடந்துவெண்கயிலையினுறைவார். (௪௫)

தருங்கண்ணாடிவெண்சாமரஞ்சத்திரந்தால
விருந்தமாதிகளிறைவனுக்களித்திடுமேலோர்
பொருந்துமன்னதான்முறைமுறைபோற்றிடப்புவியாண்
டிருந்துபோகமுநுகர்ந்துவீடெய்துவரன்றே. (௪௬)

வளமிகுத்தவைகாசியின்வசந்தமங்கலமு
மிளமைநீக்கியவேனிலினமுதெனவிலகுங்
குளிர்புனற்செய்மங்கலமுமுன்னிருதுவிற்குணித்தே
யளவிடற்கரும்பவித்திரமங்கலமுமன்புடனே. (௪௭)

கூதிரொன்றனைகொண்டிடுமிருதுவிற்குளிர்ச்சி
வாதநீக்கனன்மாலைமங்கலமுமுன்பனிநாட்
பாதமொன்றினுடுவென்றிருப்பழிச்சிமங்கலமு
மோதுபின்பனியிருதுவினூஞ்சன்மங்கலமும். (௪௮)

மருவுபான்மையிற்செய்துநித்தியம்பக்கமாச
மிருதுவச்சரந்தோறுமிம்முறைவழாதியற்றி
யொருவனுக்குயர்பங்குனித்திங்களினுலகம்
பரிவினோடுதோத்திரம்புரிந்தனுதினம்பகர. (௪௯)

படகமொந்தைகளாகுளிபணறுநின்றதிரக்
கடல்கிளர்ந்தெனத்துந்துமிசல்லரிகறங்க

விடையில்வேய்ங்குழற்காளஞ்சின்னமுமியம்பக்
கொடியிடக்கையஞ்சத்திரஞ்சாமரைகுலவ. (௫௰)

அங்கண்வானிலத்தரம்பையரழகினுஞ்சிறந்த
குங்குமச்செழுங்கொங்கையர்நடஞ்செயக்குலவு
மிங்கிதந்தருமேழிசையின்னரம்புளரப்
பொங்குபன்முகத்தீயின்வத்திகள்புடைமிடைய. (௫௧)

நீதிவேதியர்வேதபாராயணநிரைநின்
றோதமெய்யடியவர்களின்றருகியேதுதிப்ப
வேதநாயகன்றனக்குயர்திருவிழாமிகுந்த
காதலாற்புரிந்திரதமெய்க்காட்சியுங்கவின. (௫௨)

தக்கசீர்கொள்வைபவத்துடன்செயிற்சதகோடி
புக்கவேள்விசெய்பலன்றவப்பலனெலாம்பொருந்தித்
தொக்கபூமியிற்சூழ்தருபோகமுந்துய்த்து
மிக்கவிண்ணுலகனைத்தையுமளித்துவீற்றிருந்தே. (௫௩)

கோடிகோத்திரத்துடன்சிவபுரிதனைக்குறுகி
நேடுதற்கருஞ்சிவபதமடைகுவர்நிறைந்த
சேடுமேவியவணிநலன்றெரிசனஞ்செய்தோர்
பீடுசேர்சிவகணங்களாய்ப்பிறங்குவரன்றே. (௫௪)

இனையசீர்பெறுசருக்கநன்குரைத்தவரியம்ப
மனமுவந்துகேட்குநரெழுதினர்நறுமலராற்
றினமருச்சனைபுரிபவர்திருநிலம்பரித்தே
பனககங்கணனுலகின்வாழ்குவரெனப்பகர்ந்தான். (௫௫)

சுருதியாகமமளவிடற்கரியதாய்த்துலங்கி
வருபலன்பெறுசருக்கமீண்டுரைத்தனமன்னுங்
கிருதமாதிநாலுகங்களுங்கிளர்மதிபுனைந்த
வொருவனுண்மலர்ப்பதந்தொழும்பரிசினையுரைப்பாம். (௫௬)

பலன்பெறு சருக்க முற்றும்.

ஆகச் செய்யுள்-௧௦௧௬.

# உகந்தோற்றிய சருக்கம்.

மின்னவிர்செஞ்சடைவேதநாயகன்
றன்னிடத்துதவினர்சாருங்காட்சியை
மன்னியமறையவர்வதனநோக்கியே
பின்னருங்கவுசிகன்பேசன்மேயினான். (௧)

எழுறுப்பிலகியநிலத்திற்றோய்தரப்
பாழிசேருகிர்கள்வெண்பணிலமொய்த்தென
வாளொளிசொரியவெண்மருப்புநீண்டிடச்
சூழிசேர்மத்தகம்வளர்ச்சிதோற்றவே. (௨)

சிரன்மிருகண்ணிணைசிறுகிவாய்ப்புற
வுரைகொளன்பான்முழுநீண்டுயர்ச்சியும்
விரவுமேழ்முழத்ததாய்விளங்கும்யானையைப்
பரமகாரணன்றனக்களிக்கும்பண்பினர். (௩)

இலங்கியவிமானமேலேறியெண்ணரு
நலம்பெறுமுலகெலாநண்ணிநாட்பல
புலன்களால்விழைவுறுபோகமாந்தியே
வலன்பொலிவெள்ளியங்கிரியில்வாழ்வரே. (௪)

துவமகலிங்கதிதோற்றும்வெண்ணிறக்
கவனவாம்பரிதனையளிக்குங்காட்சிய
ரவனிமேற்போகமுமருந்தியையன்வாழ்
புவனமீதனந்தநாளுறைவர்பொற்புடன். (௫)

வாலுகம்புவிதனிற்படியமாமைவாழ்
காலொருநான்கும்வார்கணையஞ்சோதரக்
கோலமார்புனிற்றிளங்கோவைவேலதின்
மூலமீதுறைபவர்க்களிக்குமுன்னவர். (௬)

இரணியக்குப்பிகளிலகுங்கோட்டதாய்
வரமுறுஞ்சேவினைக்கொடுத்தமாட்சியர்
தரணிகண்முழுவதுந்தானஞ்செய்தனர்
திரமுறப்பெறுபலன்சேர்வர்திண்ணமே. (௭)

திருத்தகுபுவியினர்சிறிதுநோக்கினுங்
கருத்தொடுகண்ணிணைகவருங்காட்சி

Dr. U. V. S. IYER LIBRA[RY] MADRAS 22860